# கைத்தடி

மாத இதழ்

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

■ தடி-3, அடி-1 ■ ஏப்ரல் 2019 ■ தனிச்சுற்றுக்கு மட்டும் ■ நன்கொடை ரூ.30



## அன்னை மணியம்மையார்

தோழர் **தேன்மொழி**

## இல்லந்தோறும் பெரியார் சிலை!

தோழர் **க.அருள்மொழி**

## அவசியம் தேவை அண்ணல் அம்பேத்கர்

தோழர் **திராவிடராசன்**

# நன்றி! நன்றி!! நன்றி!!!

இரண்டாம் ஆண்டில் எங்களோடு பயணித்த அனைத்து தோழர்களுக்கும் நன்றி!

கைத்தடி பயணத்தில் பயணித்த அனைத்து தோழமைகளுக்கும் இந்த நேரத்தில் நன்றி கூறுவதில் மகிழ்ச்சியும் பேருவகையும் கொள்கிறோம்!

## நன்கொடையாளர்கள்

வழக்கறிஞர். அ.அருள்மொழி (சென்னை), பேரா சுப. வீரபாண்டியன் (சென்னை), முனைவர் துரை. சந்திரசேகர் (வடலூர்), மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம் (திருப்பூர்), திராவிடராசன் (கடலூர்), ஹரிஷ் கமுககுடி மாரிமுத்து (லண்டன்), அ.செ.செல்வம் (ஒசூர்), ஜோரா லைப் கேர் (மும்பை), நீதி தேவன் (சென்னை), தமிழினி (குடந்தை), பேரா கு.முருகேசன் (சென்னை), கவிதா (திருப்பத்தூர்), காமராசன் (சென்னை), சிவா சடையன் (நாமக்கல்), பரிமளம் (தருமபுரி), திருவள்ளுவர் பொத்தக இல்லம் (தருமபுரி), அருள்மொழி கனகு (குடியாத்தம்), தேன்மொழி (குடியாத்தம்), கதிரவன் (காவேரிப்பட்டினம்), பூ.ஆசு (சிங்கப்பூர்), தி.க.சண்முகம் (சின்னதாராபுரம்), பஞ்சமூர்த்தி(வேகாக்கொல்லை), செந்தமிழ் செல்வி (திருவாரூர்), குலாப் (பெங்களூர்), ரமா பிரபா (வடலூர்), இராமசாமி(காமலாபுரம்), நா.பலவேற்றிவேல் (சென்னை), சிட்டிபாபு (சென்னை), கவிமணி கேபிடி (மலேசியா), தமிழ்மகன்(சிங்கப்பூர்), நாகை பாலு (தருமபுரி), சந்தியா(திருச்சி), சபரிஷ்(நியூஜெர்சி), வெற்றிச்செல்வன் (சென்னை), ஜெயசிரி பிரிண்ட் பேக் (சிவகாசி), விண் எலக்ட்ரானிக்ஸ் & பர்னிச்சர்ஸ் (கடலூர்), சாய்(ஒசூர்), ஆதி போட்டோகிராபி (திருச்சி), பெரியார் புக்ஸ்.இன்(சென்னை), மதி பப்ளிகேசன் (தருமபுரி).



## களப்பணியாளர்கள்

மே.கா.கிட்டு, சி.வீரவேல், அ.செ. செல்வம், கண்மணி, வழக்கறிஞர் குயல்மொழி, ஜோதிவெங்கடாசலபதி, புலவர் நாகை பாலு, கவிதா ரமேஷ், எஸ்.ஜெர்லின்பிரீமா, ஆர். சையத்அன்வர்பாசா, ஜெ.தம்பிபிரபாகரன், தனுவசிதர்மராஜ், ஓவியர் சிகரன், தனுஷவன், சண்முகராமநாதன், டார்வின் பகுத்தறிவு, லோகேஷ்.சி, மதியழகன், கலையரசி, வசந்தகுமார், கனிமொழி, சின்னசாமி முனியம்மாள், கயல்விழி, வெற்றிமாறன், இலக்கியா, ப.விஜி, நதியா பெரியார் செல்வன், எம்.பி.ஜீவன்ராஜ்.

## எழுத்தாளர்கள்

மு.சி.அறிவழகன், பார்த்திபன்.ப, கா.தமிழரசன், நா.காமராசன், சிவாசடையன், கு.முருகேசன், பழனி சே.மெ. மதிவதனி, தெ.ரங்கராசன் (எ) திராவிடராசன், நாகைபாலு, பழ.வெங்கடாசலம், மருத்துவர் யாழினி, ஷாலின், எம். ஞானசேகர், பூ.கொ.சரவணன், எஸ். ஜெர்லின்பிரீமா, கனிமொழி எம்.வீ, ஹரிஷ் கமுககுடி மாரிமுத்து, மழவைசு.பெ.தமிழமுதன், முரளிகிருஷ்ணன், சின்னதுரை, கா.ந.கல்யாணசுந்தரம், பா.கார்த்திகேயன், வழக்குரைஞர் கிருபாமுனுசாமி, ராஜபார்த்திபன், இரவிச்சந்திரன், வழக்குரைஞர் கனிமொழி, கோவை சுபா, இரா.ஆதிமொழி, மருத்துவர் சிவராஜ்,

உ.திலகவதி, தேன்மொழி, வி.சி.வில்வம், உடுமலை வடிவேல், ச.அஜிதன்சந்திரஜோதி, கல்பாக்கம்சீனு, அகில், காமராஜ், வேதவள்ளி, புதுவை மு.ந.நடராசன், கோபாலகிருஷ்ணன், இரா.அன்பரசன், சுசிலா, க.அருள்மொழி, தனுஷவன், திருச்சி சந்தியா, பா.மணியம்மை, ஓவியா மாதப்பன், கவிஞர் முகமது ஹலி, அசோக் பாபு, தமிழினி, கவிதா, முனைவர் பூ.மணிமாறன், வர்சினி செல்வராஜ், இரா. முல்லைகோ, இரா.கோரா, அமிர்தா வர்ஷினி, சிற்பி நிலவன், ஸ்ருதி.இரா, இரா.உமா, கோ.செந்தமிழ்ச் செல்வி, மருத்துவர்.ஷாலின்.

## நேர்காணல் செய்ய அனுமதித்த ஆளுமைகள்

வழக்குரைஞர் அ.அருள்மொழி, பேரா.சுப. வீரபாண்டியன், வடலூர் துரை. சந்திரசேகர் எழுத்தாளர் ஓவியா, எழுத்தாளர் வே.மதிமாறன், பத்திரிகையாளர் ப.திருமாவேலன், ‘இனமறுப்பு’ சத்யராஜ், தி.மு.க. தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள.புகழேந்தி, எழுத்தாளர் சல்மா, வழக்குரைஞர் தமிழன்பிரசன்னா, மருத்துவர் இரா.செந்தில், தமிழ்வளர்ச்சித்துறை மேனாள் இயக்குனர்மு. ராஜேந்திரன், CPI(M) டில்லிபாபு, மருத்துவர் திருத்தணிகாசலம்.

## மற்றும் சிலர்

கல்லூரி நண்பர்கள், கல்லூரி பேராசிரியர்கள், பெற்றவர்கள், உறவினர்கள், தோழர்கள், அன்புஅண்ணா ச.பிரின்சு என்னாரெசு பெரியார் அவர்கள், அச்சக உரிமையாளர்கள், தபால்நிலைய ஊழியர்கள், நிர்வாகிகள், அனைத்துக்கட்சித் தோழர்கள் மற்றும் அனைத்து இயக்கத் தோழர்கள், வாசகர்கள் அனைவருக்கும்

நன்றி! நன்றி!! நன்றி!!!

சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல் “கைத்தடி”யோடுபயணிப்போம் வாருங்கள்...!

பயணங்கள் தொடரும்...




## வாசகர் பார்வையில்

**கை**த்தடி மாத இதழ் மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைத்து இருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது! அதேபோல, ஒவ்வொரு இதழிலும் புதிய புதிய கருத்துக்களை கதை, கட்டுரை, கவிதை வடிவில் தொகுத்து மாதம் ஒரு புத்தகத்தை உரிய தேதியில் வெளியிடும் கைத்தடி மாத இதழுக்கு வாழ்த்துகள்!

**– ஸ்ரீதேவி, கும்பகோணம்**

**ச**முதாய மாற்றம் ஒன்றே, மக்கள் விடுதலையாக இருக்க முடியும்! அந்த அடிப்படையில் சமுதாய மாற்றத்தை முன்னெடுத்து வரும் கைத்தடி மாத இதழ் தொடர்ந்து செயல்படும் பணிக்குத் தலைவணங்குகிறேன்! வாழ்த்துகள்!

**– செல்வம், மதுரை**

**பெ**ரியாரியம், அம்பேத்கரியம், மார்க்சியம் ஆகிய கருத்துக்களை காலம் கருதி தேவையான அளவில் கொடுத்துவரும் கைத்தடி மாத இதழுக்கு வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்கிறேன்!

**– மேனகா, திருப்பூர்**

# கைத்தடி

## மூன்றாம் ஆண்டில்... அடுத்த இலக்கு!

**கை**த்தடியின் வீச்சு இரண்டாண்டுகளைக் கடந்து மூன்றாம் ஆண்டில் நுழைகிறது. பெரியாரியலை முழுமையாக அறியாதவர்களும் அறிந்திட வேண்டும் என்ற எண்ண ஓட்டத்தின் அடிப்படையிலும், எழுத்துலகிற்குப் புதியதாக வரும் கருத்தாளர்களை ஒன்றிணைத்து சமூக மாற்றத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற குறிக்கோளோடும் கைத்தடி உருவாக்கப்பட்டது. அதில் நாங்கள் நினைத்த இலக்கை இன்னும் அடையவில்லை காரணம் கைத்தடி மட்டுமல்ல.

ஒரு கட்டத்தில் இதழை நிறுத்திவிடலாம் என்று ஆலோசித்தோம். ஆனால், இன்றைய சூழ்நிலையில் பகுத்தறிவு சிற்றிதழ்கள் வ(ள)ரவேண்டும் என்ற கட்டாயம் இருப்பதாகக் கருதினோம்! காரணம் சில பார்ப்பன ஏடுகள் தங்கள் கைகளில் ஊடகம் உள்ளது என்பதற்காக நினைத்ததையெல்லாம் மக்கள் மத்தியில் பரப்பி (திணித்து) வருகிறது. இந்த நிலை மாற்றப்பட வேண்டுமானால் கைத்தடி மட்டுமல்லாமல், இன்னும் சில பகுத்தறிவு இதழ்கள் வெவ்வேறு தளங்களில் உருவாக்கப்பட வேண்டும். உருவாக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் தொடர்ந்து செயல்பட உழைக்க வேண்டும் என்ற அடிப்படையில் இன்னும் வலியை வழியமைத்து நடத்தி வருகிறோம்!

இன்றைய சூழ்நிலையில் அறிவியல் உலகில் பலரும் செய்தித் தாள்களையும், இதழ்களையும் விரும்பி அச்சு இதழில் படிக்கவில்லை என்ற குறை இருந்தாலும்கூட சிலர் நம் இதழ்களைத் தொடர்ந்து சேகரித்து வருகிறார்கள். இதழ்களின் பிரதிகளைப் பெற்று நண்பர்களுக்குக் கொடுத்துப் படிக்கச் செய்கிறார்கள் என்பதனைப் பார்க்கும்போது தொடர்ந்து அச்சு வடிவில் கொண்டுவர கடமைப்பட்டுள்ளதாகக் கருதுகிறோம்!

அதே நேரத்தில் அறிவியலுக்கு வாய்ப்பு கொடுக்கும் வகையில் "கைத்தடி செயலி" "கைத்தடி இணையதளம்" போன்ற அறிவியல் தளங்களிலும் எங்களின் முழு முயற்சிகளையும் முன்னெடுப்புகளையும் எடுத்துள்ளோம்! புதிய இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரியாரியலை, அம்பேத்கரியலை, திராவிடத்தின் பெருமையை நம் வாழ்வின் சிறப்பைத் தெரியப்படுத்தவும், தற்கால இணையதள வசதிகளையும் கையில் எடுக்க இருக்கிறோம்! மாத செய்திகளின் தொகுப்பைப் போல தினசரி செய்திகளை இணையத்தின் வழியாகப் பரப்புவது எனவும், பார்த்து உணர்ந்திடும் வகையில் கார்ட்டூன் என்று சொல்லப்படும் காணொளிக் காட்சிகளை புதியதாக உருவாக்கி குழந்தைகளை கவர்ந்து அறிவுவிருந்தை வழங்குவதென அறிவிக்கிறோம்!

இரண்டு ஆண்டுகளாக எங்களுக்கு ஆதரவு கொடுத்து வந்த தோழர்கள், வாசகர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், எழுத்தாளர்கள் தொடர்ந்து எங்களது அடுத்தடுத்த முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்கிப் பெரியாரியலை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லவும் சமூக மாற்றத்தை சாத்தியப்படுத்த உடன் நில்லுங்கள் என்ற அன்புக் கட்டளையை முன்வைக்கின்றோம்!

**– மு.சி.அறிவழகன்**

# கைத்தடி

மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர்:
**மு.சி.அறிவழகன்**

ஆசிரியர் குழு:
**கா. தமிழரசன்**
புலவர் **நாகை பாலு**, த.மு.எ.ச.
முனைவர் **கு. முருகேசன்**

புகைப்படக் கலைஞர்:
**தனுஷவன்**

ஓவியர்கள்:
**தனுவசி சி.தர்மராஜ், ரா.ராஜசேகர், சிகரன்**

மெய்ப்புத் திருத்தம்:
**மே.கா.கிட்டு**

இதழ் வடிவமைப்பு:
**டிஸைன்ஷாப், 76677 55673**

களப்பணிக் குழு:
**அ.செ.செல்வம், சி.வீரவேல், கண்மணி, திராவிடராசன், ஜெர்லின் பிரீமா, கவிதாரமேஷ்.**

சட்ட ஆலோசகர்கள்:
**ஆர்.சையத் அன்வர் பாசா**, வழக்கறிஞர்
**ஜெ. தம்பிபிரபாகரன்**, வழக்கறிஞர்

ஆசிரியர் குழு & அலுவலக முகவரி

கைத்தடி
மாத இதழ் | சமூக மாற்றத்திற்கான ஊன்றுகோல்

2/343, காமலாபுரம் (கி), மல்லிக்குட்டை (அ), காரிமங்கலம் (வ), தருமபுரி – 635 205.
அலைபேசி: 73733 33078, 86673 42047
மின்னஞ்சல்:kaithadimonthly@gmail.com இணையதளம்:kaithadi.com



பேட்டிகள், சிறப்புக் கட்டுரைகளின் கருத்துக்கள் அவர்களின் சொந்தக் கருத்துக்களே. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைதன்மைக்கு கைத்தடி மாத இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல.


## இந்த இதழில்...


| | |
|---|---|
| அன்னை மணியம்மையார் | 5 |
| அவசியம் தேவை அண்ணல் அம்பேத்கர் | 8 |
| அன்பார்ந்த வாக்காள பெருமக்களே | 10 |
| இல்லந்தோறும் பெரியார் சிலை! | 12 |
| நடுத்தர வயது பெண்களை பாதிக்கும் முடக்குவாதம் | 15 |
| தமிழர் விளையாட்டுகள் - ஒரு குடம் தண்ணி ஊத்தி | 16 |
| நிர்வாகம்- சிறுகதை | 18 |
| திராவிடக் கொள்கை விளக்க அறிக்கை | 20 |
| கற்றதன் பயன் | 22 |
| நூல் அறிமுகம் | 28 |
| மந்திரமா? தந்திரமா? | 29 |
| ஆன்லைன் வதந்தி | 30 |
| கோமாதாவ வித்துடுவீங்களா? - சிறுகதை | 32 |
| சிட்டுக்குருவியும் சின்ன மழலையும்-கவிதை | 34 |


எச்சில் தொட்டி, உயிர்மெய் தொடர்கதைகள் அடுத்த இதழில் இடம்பெறும்...


| கைத்தடி சந்தா விபரம் | தனி இதழ் ₹ 30 |
|---|---|
| ஓராண்டு சந்தா | ₹ 300 |
| இரண்டு ஆண்டு சந்தா | ₹ 600 |
| நான்கு ஆண்டு சந்தா | ₹ 1200 |
| ஐந்து ஆண்டு சந்தா | ₹ 1500 |
| ஆயுள் சந்தா (10 ஆண்டு மட்டும்) | ₹ 3000 |

NAME : KAITHADI
A/C NO : 20160200001582
IFSC CODE : FDRL0002016 PH. NO: 7373333078
A/C TYPE : CURRENT ACCOUNT
FEDERAL BANK, DHARMAPURI

தோழர் தேன்மொழி



# அன்னை மணியம்மையார்

யார் இந்த மணியம்மையார்? என்ற கேள்வியில் தொக்கி நிற்கிறது அவரின் பெருமை. தந்தை பெரியாரின் மனைவி என்ற ஒற்றைச் சொல்லா? இல்லை 95 ஆண்டுகள் வரை தந்தை பெரியாரை பேணிக்காத்த பெருந்தகையா? தள்ளாடும் கிழவனென்று அறிந்தும் தாங்கிப் பிடித்திட்ட தாய்மையோ? திராவிட இயக்கத்தை கட்டிக்காத்த வீரமங்கையோ? எத்தனை விதமாக சிந்தித்தாலும் ஒரு மாபெரும் புரட்சியாளராக நம் கண் முன் நிற்கும் ‘அம்மா’ அன்னை மணியம்மையார்.



நான்காம் பாரம் படிக்கும் பொழுது எந்த பெரியாரை சந்தித்தார் என்பதற்காக பள்ளி நிர்வாகத்தால் பள்ளியை விட்டு அனுப்பப்பட்டாரோ அதே பெரியாரோடு அவரின் வாழ்நாள் முழுதும் பயணம் செய்தவர் அன்னை மணியம்மையார். எத்தனையோ பேர் தந்தை பெரியாரோடு பயணம் செய்தாலும் சுயநலமற்ற ஒற்றை ஜீவனாய் அய்யாவின் அருகிலே எந்த எதிர்பார்ப்பும் இன்றி சேவை ஒன்றை மட்டுமே குறிக்கோளாய் கொண்டு வாழ்ந்திட்ட பெருந்தகை அன்னை மணியம்மையார்.

தந்தை பெரியாரைப் போல பெண் இனத்திற்கு போராடியவர் யாருமில்லை. பெண் கல்விக்காகவும் பெண் உரிமைக்காகவும் குரல் கொடுத்து போராடியவர். அப்படிப்பட்ட பெரியார் மணியம்மையாரைத் திருமணம் செய்து கொண்டதும் ஏகப்பட்ட எதிர்ப்பலைகள். ஏளனப் பேச்சுகள். பெண்களுக்காகப் போராடிய பெரியார் ஒரு சிறு வயது பெண்ணை திருமணம் செய்து கொண்டாரே. இவ்வளவு தானா அவரின் பெண்ணியம். கேள்விக்கணைகளும் விமர்சனங்களும் பறந்தன.

மணியம்மையாரின் காதில் விழும்படியே சொல்லொண்ணா சொற்கள் இன்றளவும் சில கோமாளிகள் அன்னையைப் பற்றி மிகக் கேவலமாகப் பதிவிடுகிறார்கள் எனில்


▪ ஏப்ரல் 2 – அறிவுக் குறைபாடு விழிப்புணர்வு தினம் ; எமிலி ஜோலா – (பிரெஞ்சு நாவலாசிரியர்) பிறந்த தினம்

அன்றைய சூழ்நிலையில் எப்படி இருந்திருக்கும். திராவிடர் கழகம் இரண்டுபட்டது. ஆம். அண்ணா தலைமையில் ஏற்கனவே பதவி ஆசை கொண்டு இருந்தவர்கள் தந்தை பெரியார் அன்னை மணியம்மையார் திருமணம் காரணம் காட்டி கழகத்தை விட்டுப் பிரிந்தனர்.

தன்னை மிகச் சிறந்த பகுத்தறிவுவாதி என்று சொல்லிக் கொண்டவர்களும் நடுநிலைமை சுயமரியாதைக்காரர்கள் என்று சொல்லிக் கொண்டவர்களும், சீர்திருத்தவாதிகள் என்று தன்னைச் சொல்லிக் கொண்டவர்களுமே தந்தை பெரியார் அன்னை மணியம்மையார் திருமண ஏற்பாட்டை ஏற்கவில்லை எனும் போது சாமானிய மக்களின் எண்ணம் எப்படி இருக்கும். எந்த அளவு வசைபாடி இருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இத்தனை இழிசொல்லையும் தாங்கிக்கொண்டு தொடர்ந்து அய்யாவுடன் அவர் பயணித்தார்.

என்பது அய்யாவின் சொத்து சுகத்திற்காக அல்ல என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

'காற்றிறங்கி பொதிமாடு போல் பெருத்து தொங்கும் அவர் விதையின் ஒருபால் ஒட்டிய ஆண்குறியினின்று முன்னறிவிப்பு இன்றி பெருகும் சிறுநீரை உடனிருந்து கலன் ஏந்திக் காத்து ஒரு அருந்தொண்டு புரிந்த அன்னை மணியம்மையார் மீது சொல் வீச்சுகள்.

பெரியார் பல ஆண்டுகள் நலமுடன் வாழ்வேண்டும் என்று தன் துடிக்கும் இளமையைப் பெரியாருக்கு ஒப்படைத்த அந்த சிறு பெண்ணின் மீது கற்களை விட மோசமான சொல் அம்புகள் அத்தனை வசவுகளையும் புன்னகையோடு ஏற்று தந்தை பெரியாருக்குப் பணி செய்வதே தன் கடமை என்று அய்யாவின் இறுதிக் காலம் வரை ஓயாமல் உழைத்த தியாக உருவம்தான் அன்னை மணியம்மையார்.

உலகில் எத்தனையோ பேர் புரட்சியாளர்கள். அவர்களை விடப் பல்வேறு தளங்களில் தனித்து நின்ற தந்தை பெரியாரின் வாழ்நாள் முழுவதும் அவரோடு இணைந்து போராடிய திராவிட வீராங்கனை. தந்தை பெரியாரிடம் இருந்து அவர் கற்றது தலைமைப் பண்பை. அதனால் தான் பெரியார் மறைந்த பிறகு அன்னையால் திராவிடர் கழகத்தை வழிநடத்த முடிந்தது.

தந்தை பெரியாருக்குப் பின் திராவிடர் கழகம் தறிகெட்டு போய் இருந்த இடம் தெரியாமல் போய்விடும் என்று பகல் கனவு கண்டுகொண்டு இருந்தவர்களின் நினைப்பை எல்லாம் பொய்யாக்கி இந்த திராவிடர் இயக்கத்தைத் தாங்கி பிடித்தவர் என்றால் அது மிகையல்ல.

ஒரு சராசரி பெண்ணுக்குரிய எந்த ஆசாபாசங்களும் இல்லாமல் எந்த அணிகலன்களும் இல்லாமல் ஆடம்பரமான ஆடைகள் அணியாமல் கறுப்பு சேலையும் வெள்ளை ரவிக்கையுமாக இறுதிவரை வாழ்ந்தவர்.

எழுத்து திறமையும் அன்னைக்கு சிறப்பாக இருந்தது. 'கந்தபுராணமும் இராமாயணமும் ஒன்றே" அம்மாவின் முதல் படைப்பு எனினும் 'சீதையை பற்றி ஒரு நடுநிலைமை ஆராய்ச்சி" எவ்வளவு தெளிவான சிந்தனையோடு அவரின் எழுத்து.

அன்னை மணியம்மையார் பற்றிய செய்திகளை படிக்கும் போது *1948*-இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானார் என்ற செய்தி அறிவோம். அதே சமயம் அப்பொழுது வழக்கு மன்றத்தில் நீதிபதி விடுத்த வினாக்களுக்கு அம்மா அளித்த பதில் வரலாற்று புகழ் என்பதை விட பெண் இனத்திற்கு பெருமை சேர்த்தது எனலாம்.

கேள்வி : உங்கள் மதம் எது?

அன்னை பதில் : எனக்கு எந்த மதமும் கிடையாது.

கேள்வி : உங்கள் ஜாதி?

பதில் : திராவிட ஜாதி



நீதிபதி : தங்களுக்கு இரண்டு காவல் தண்டனை அளிக்கிறேன்.

எவ்வளவு சிறப்பான பதில்கள், இதுகூட பரவாயில்லை, இதற்கு அன்னையின் பதில்

பதில் : மிக்க மகிழ்ச்சி. வணக்கம்.

இந்த பதிலைக் கேட்டு நீதிபதியே வியந்துபோனாராம். என்ன ஒரு நெஞ்சுரம்.

கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு அதிபதி. ஒரு பெரிய இயக்கத்தின் தலைவரின் இணையர். ஆனால் எந்த ஒரு கூட்டத்திலும் தன்னை தனித்து காட்டிக் கொள்ளாமல் மேடையில் அமராமல், மற்றவர்களின் புகழுரைகளுக்கு காத்து நிற்காமல் கூட்டத்தின் ஒரு மூலையில் புத்தகம் விற்றுக் கொண்டிருந்த மணியம்மையார் தான் பின்னாளில் திராவிடர் இயக்கத்தைத் தலைமையேற்று நடத்தியவர்.

விளம்பரம் விரும்பாத உன்னத தாய். ஆனால் போராட்டம் என்றால் முன்னுக்கு நிற்பவர்.

எத்தனையோ போராட்டங்கள் அன்னையார் கலந்து கொண்டு இருந்தாலும் வடக்கே நடந்த இராம லீலாவிற்கு எதிராக இங்கே இராவண லீலா நடத்திக் காட்டியது தான் சிறப்பானது.

இராவணன் போலவும் கும்பகர்கணன், மேகநாதன் போன்ற தோழர்கள் வேடம் தரித்து வர அவர்கள் நடுவே மிகக் கம்பீரமான நடையோடு வந்த அன்னையார் இராமன், சீதை, லட்சுமணன் ஆகிய உருவங்களுக்குத் தீ மூட்டினார். தந்தை பெரியார் வாழ்க என்ற முழக்கம் விண்ணைப் பிளக்க இராவண லீலா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

கைது செய்ய வந்த காவல் அதிகாரிகளோடு மகிழ்ச்சியோடு அன்னையார் சென்ற காட்சியை மனக்கண் முன் நிறுத்திப் பார்க்கத் தோன்றுகிறது.

ஒருமுறை ஆளுநர் மோகன்லால் சுகாதியா அன்னையாரிடம் "நீங்கள் பார்ப்பன எதிர்ப்புக் கொள்கையை விட்டு விட்டேன் என்று அறிக்கை விடுங்கள் என்னால் ஆனதை செய்கிறேன்" என்றதும் "அது எங்கள் லட்சியம் அதை எக்காரணம் கொண்டும் மாற்ற இயலாது" என்று அசத்தலாக பதில் சொல்லிய வீராங்கனை தான் அன்னையார்.

> 'இயக்கம் எப்படி இருந்தாலும் இயக்கத்திற்கு யார் தலைவராக இருந்தாலும், என்னுடைய கொள்கைகளும் கொள்கைக்கு ஏற்ற பிரச்சாரமும் எனக்கு பின்னும் நடந்தேற வேண்டும் என்கிற பேராசை எனக்கு உண்டு.
>
> – குடிஅரசு – 16.07.1949

1949-இல் அய்யா குடிஅரசில் எழுதிய தன் விருப்பத்தை பேராசையை 1973-இல் இருந்து 1978 வரை மிகச் சிறப்பாக செயல்படுத்திக் காட்டியவர் அன்னையார் அவர்கள். இதை அவரின் தொண்டறம் என்று சொல்வதை விட போர்குணம் என்றே சொல்லலாம்.

தனது திருமண ஏற்பாட்டின் போது தந்தை பெரியார் ஒருஅறிக்கை வெளியிடுகின்றார். அதில் எனக்கும், எனது பொருளுக்கும் சட்டப்படியான ஒரு வாரிசை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம்" 'வாரிசு" என்று நான் குறித்தது எனது உள்பட பொருளுக்கு தான்.

மணியம்மை வாரிசு என்பது டிரஸ்டு சம்மந்த உரிமை மட்டுமே. மணியம்மைக்கு சுதந்திர பாத்தியமுடையதல்ல. பரம்பரை பாத்தியமுடையதல்ல" என்ற தெளிவான அறிக்கைக்கு ஏற்ப பின்னாளில் அந்த டிரஸ்டை நன்கு வளரச் செய்த பெருமை அன்னையாரைச் சாரும்.

தந்தை பெரியாரின் போராட்டம் என்பது சமூக அநீதிகளுக்கு எதிரானது. நாற்பது ஆண்டுகள் அவரை கண்ணும் கருத்துமாய் கவனித்து போர்க் களத்தில் நடமாடச் செய்த பெருமைக்குச் சொந்தக்காரர் மணியம்மையார் அவர்களே.

அய்யாவின் மறைவிற்குப் பின்னும் ஜாதி சாக்கடைகள் மலிந்த இந்த நாட்டிலே பெண்கள் தலைமை ஏற்பதை விரும்பாத நாட்டிலே ஒரு இயக்கத்தையே வழிநடத்தி சென்ற அன்னையாரின் தீரத்தை என்னவென்று சொல்வது.

கிழவன் சிறுமியை திருமணம் செய்துகொண்டார் என்று தலையங்கம் எழுதியவர்களும், பெண்ணின் தலைமையின் கீழ் இயக்கமா என்று இழிசொல்பேசி வசைபாடியவர்கள் எல்லாம் வியந்து மனதார வருந்தி அவர்களே வியந்து பாராட்டும் அளவு தந்தை பெரியாருக்குப் பின் இயக்கத்தை வழிநடத்தி சென்ற அன்னை மணியம்மையாரை வாழ்த்த வார்த்தைகள் இல்லை. தொண்டுள்ளமே நீ வாழ்க.

'அன்பாய் வந்தாய்
அன்னையாய் மாறினாய்
பழிசொல் பல
பரவியே வந்திடுனும்
இன்முகம் காட்டியே
ஈகையில் உயர்ந்தாய்
பசித்திடும் குழந்தைகள்
பசியது போக்கினாய்
தள்ளாடும் கிழவனின்
தடியாய் நீ பலநேரம்
சூத்திரப்பட்டம் ஒழிய
மூத்திர சட்டியுடன்
முகம் சுளிக்காமல் நீயும்
சூறாவளியாய் களத்தில்
வாழ்ந்திட்டார் தந்தை
95 ஆண்டு வரை
உம்மால்தான் அன்னையே
உம்மால் மட்டுமே.

இன்றைய பெண்கள் அன்னை மணியம்மையாரைப் படிக்க வேண்டும். அன்னையாரிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளம்.

இந்த ஆண்டு அன்னை மணியம்மையாரின் நூற்றாண்டு. அவரின் தொண்டறத்தை மக்கள் அறிய பட்டிதொட்டி எங்கும் அவர் புகழ் பரப்ப வேண்டும். இதுவே அவருக்கு நாம் செய்யும் நன்றிக்கடன்.

வாழ்க தந்தை பெரியார்
வாழ்க அன்னை மணியம்மையார்.

மணியம்மையார்



■ ஏப்ரல் 4 (1968) – மார்ட்டின் லூதர் கிங் – (தென்னாப்பிரிக்க அரசியல் தலைவர்) நினைவு தினம்

# அவசியம் தேவை
# அண்ணல் அம்பேத்கர்

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 127வது பிறந்தநாளை கொண்டாடுகின்ற இந்த வேளையில், அவருடைய புகழை அரசியலமைப்பு சட்டத்தின் தந்தை, இந்தியாவிலுள்ள சாதிகளின் பரிணாமத்தை ஆய்வு செய்து அதனை அழித்தொழிக்கப் பாடுபட்ட ஒப்பற்ற தலைவர், அரசியலமைப்புச் சபையில் மெத்தப் படித்த மேதை என்பதையும் கடந்து இன்றைய இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்காக ஆகப்பெரிய ஆய்வுகள் பலவற்றைச் செய்து நம் நாட்டின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக விளங்கும் அவருடைய பொருளாதார பார்வையை அனைத்து உழைக்கும் மக்களும் அறிந்து வாழ்வை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

## வங்கியும் நாணயமும்

இந்தியாவை காலனி ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்த பிரிட்டிஷ் அரசின் காலத்திலேயே நாணயங்கள், அதன் வீழ்ச்சி, நிலைத்தன்மை, நாணய மாற்று, வெள்ளி நாணயத்தில் இருந்து தங்க நாணயத்திற்கு மாறுதல், இரட்டை நாணய முறை என பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு தனது விரிவான நாணய சீர்திருத்தம் பற்றிய ஆய்வுகளின் மூலமாக எடுத்துரைத்திருக்கிறார்.

கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பொருளாதாரம் படித்துக்கொண்டிருக்கும்போது 1915இல் இந்தியாவில் ஆட்சி செய்து வரும் "பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி நிதியும் நிர்வாகமும்" என்ற தலைப்பின் கீழ் 42 பக்க ஆய்வுக்கட்டுரைகளை எழுதி அதில் இந்திய மக்களின் வருவாயை எவ்விதமெல்லாம் பிரிட்டிஷ் அரசு பிற நாடுகளுடனான போர், ஆக்கிரமிப்பு உள்ளிட்ட தவறான செலவு முறைகளுக்கு கையாண்டு வருகிறது என்பதை புள்ளிவிபரங்களோடு எடுத்துரைத்தார்.

இன்றைக்கு வங்கிகளின் வங்கி என்று அழைக்கப்படும் இந்திய ரிசர்வ் வங்கி வட்டி விகிதத்தை நிர்ணயம் செய்யும் கோட்பாடுகள், பண மதிப்புகளை நிர்ணயம் செய்தல் உள்ளிட்ட பல்வேறு தலையாய பணிகளை செய்து வருவதற்கு காரணம் அண்ணல் அம்பேத்கர் அவர்களே! அவருடைய சிந்தனையின் விளைவாக உருவாக்கியதே இந்தியாவின் ரிசர்வ் வங்கி.

## வரியும் வருவாயும்

மக்களை ஆட்சி செய்யும் அரசானது மக்களிடமிருந்து பெறக்கூடிய வரியை பூவிலிருந்து தேனெடுக்கும் வண்டு போல மென்மையாக கையாள வேண்டுமே தவிர அட்டை பூச்சியைப் போல் ரத்தத்தை உறிஞ்சும் விதமாக அமைந்து விடக்கூடாது என்பதை பல இடங்களில் அண்ணல்



அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்.

வருவாய்த் துறையின் இன்றியமையாத சிறப்பம்சம் என்பது அதன் நம்பிக்கையே! வருவாய்த் துறைக்கு வருவாய் குறைவு என்பதோ, வருவாய் அதிகம் என்பதோ முக்கியமானதல்ல எவ்வளவு வருவாய் உறுதியாக வரும் என்பதை முன்கூட்டியே கணக்கீடு செய்யும் பணிகளே அதன் அடிப்படையாகும் என்கிறார்.

ஏனெனில், வருவாய்த் துறையின் நம்பகமான வருவாயின் அடிப்படையிலேயே தான் மக்களுக்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு நிதி அவை என்பது வெறுமனே வரவு செலவு கணக்கை சமன் செய்யும் பணிக்காக மட்டும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள கூடாது ஒரு நிதி அவைக்கான பிரதான கடமை என்பது மக்கள் நலனுக்காகவே என்பதை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமென வருவாய்த்துறையைப் பற்றி குறிப்பிடுகிறார்.

அதேபோல விவசாயி செலுத்தும் நிலவரிக்கும்,

■ ஏப்ரல் 5 (1908) - ஜெகஜீவன்ராம் - (முன்னாள் மத்திய அமைச்சர்) பிறந்த தினம்
ஏப்ரல் 5 (2010) - டிஸ்கவரியில் விண்வெளியில் உலா வந்தனர்.

மற்றவர்கள் செலுத்தும் வருமான வரிக்கும் இடையே இருக்கும் வேறுபாடு என்னவெனில், விவசாயி மகசூல் நன்முறையில் செய்தாலும் சரி, வறட்சியால் பாதிக்கப்பட்டு மகசூல் பொய்த்துப் போனாலும் சரி அவருக்கு நிர்ணயிக்கப்பட்ட நிலவரியை கட்டியே ஆக வேண்டும். ஆனால் அதே சமயம் வருமானம் சம்பாதிக்காத எவரையும் வருமான வரி கட்ட வேண்டும் என நிர்ப்பந்திக்க முடியாது.

இதுபோன்ற பாகுபாடு கொண்ட வரி நிர்ணயங்களைச் சுட்டிக்காட்டுகிறார்.

வருவாய்ப் பற்றாக்குறை ஏற்படுவதற்கு காரணம் பெரும்பாலும் நிர்வாகச் செலவுகளை அதிகரித்ததே தவிர சமூக நீதி திட்டங்கள் காரணமாக இருக்காது என்கிறார் .

இதனை 1921- 1922ஆம் ஆண்டு இடைப்பட்ட காலத்தில் மராட்டிய மாநிலத்தில் காடுகளின் மூலமாக அரசுக்கு வரப்பெற்ற வருவாய் 74.9 லட்சம், 1927 -1928இல் வரப்பெற்ற வருவாய் 74 லட்சம்.

ஆனால் 1921 -22ஆம் ஆண்டில் அரசு அந்த வருவாயை பெறுவதற்காக செய்த நிர்வாகச் செலவு 40 லட்சம், 1927 -1928ஆம் ஆண்டில் செய்த நிர்வாகச் செலவு 48 லட்சமாகும் இதனைக் குறிப்பிட்டு இந்த செலவுகள் எவ்விதத்திலும் வருவாயை உயர்த்த வில்லை இதனை எவ்விதமாக மக்கள் மேல் சுமத்துவது என தம்முடைய கருத்தை புள்ளி விவரத்தின் அடிப்படையில் முன்வைத்து நிர்வாகச் செலவுகளைக் காரணம் காட்டி அரசானது மக்களை வரி சுரண்டலுக்கு ஆட்படுத்தக் கூடாது என்கிறார்.

## இந்தியத் தொழிலாளர்கள்

இந்திய நாட்டில் உள்ள தொழிலாளர்களின் நிலைக்கும் உலகத்தின் ஏனைய நாடுகளிலுள்ள தொழிலாளர்களின் நிலைக்கும் இருக்கும் ஆகப்பெரிய வேறுபாடாக இருக்கும், தொழிலில் தொழிலாளர்களை பாகுபாடு செய்வதற்கும் தொழிலாளர்கள் சமூகத்தில் பாகுபாடு (Division of labors and Division of labourers ) செய்யப்படுவதற்குமான நுட்பமான அதே சமயத்தில் ஆழமான ஆய்வுகளை செய்து இந்தியாவில் உள்ள மக்களின் நிலை, தொழிலாளர்களைச் சமூகத்தில் அவர்களுடைய வேலையின் காரணமாக பாகுபாடு செய்து அவர்களைச் சமூகத்தில் சமமற்ற படிகளை கொண்ட சாதி, உட்சாதி,கிளைச்சாதி என பாகுபடுத்தி வைத்திருக்கும் நிலையை ஆய்வுகளின் மூலம் வெளியிட்டார்.

இந்த பாகுபாட்டு நிலை குறித்து வட்டமேசை மாநாட்டில் பேசும்போது கூட, இந்தியாவில் உள்ள மக்களின் பாகுபாட்டு நிலை பிரிட்டிஷ் காலனியாதிக்க அரசின் ஆட்சியில் கூட சிறிதளவும் மாற்றம் ஏற்படவில்லை, இது பழையபடியே தொடர்வதாகவும் குற்றம் சாட்டினார். பழைய கிழிந்த சட்டையை மாதிரியாக வைத்து புதிதாக தைக்கப்படும் சட்டையையும் ஓட்டையும் கிழிசலுமாக சீனாக்காரனால் தயாரிக்கப்படுவதாக சொல்லப்படும் பழமொழிக்கு ஈடாக இந்தியாவில் மக்களிடையேயுள்ள பாகுபாட்டு நிலை காலம்காலமாக தொடர்வதாக எடுத்துரைத்தார் .

இதுபோன்ற இறுக்கமான சாதி கட்டமைப்புகள் கிராமங்களில் வலுவாக கட்டமைக்கப்படுவதினாலேயே கிராமங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்றார். தனிமனித விடுதலை, தனிமனித உணர்வு, மனித உரிமைகள் மட்டுமே முக்கியமானதே தவிர அதன் கட்டமைப்பு அதற்கு தடையாக இருக்குமாயின் அது உடைத்தெறியப்பட வேண்டும் என வலியுறுத்தியவர் அம்பேத்கர். இது போன்ற விதங்களில் வெளிப்படும் அம்பேத்கரின் முற்போக்குச் சிந்தனைகளை புறந்தள்ளியே காந்தியடிகள் அவர்கள் கிராமங்கள் கிராமங்களாகவே நீடிக்க வேண்டுமென அவரின் சனாதன கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

தொழிலாளர்களின் உழைப்பின் மூலமாக முதலாளிகள் பெறக்கூடிய லாபங்களை தொழிலாளர்களுக்கு ஊதியமாக பகிர்ந்து அளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறார். முதலாளித்துவ நிர்வாகம் அரசு நிர்வாகம் ஆகியவை இப்போதும் கூட மேற்கொள்ளக்கூடிய செலவுகளை கட்டுப்படுத்தும் இதற்காக ஆள்குறைப்பு நடவடிக்கைகளை மிகவும் கடுமையாக விமர்சனம் செய்து செலவுகளை குறைப்பது போலித்தனமான வெளிப்பாடு ஆட்குறைப்பு நடவடிக்கை என ஆய்வுகளின் மூலம் விமர்சனம் செய்கிறார். சுரங்கத் தொழில் ஈடுபடும் பெண்களின் பாதுகாப்பு, தொழிலாளர்களின் சேமநலத் திட்ட நிதியை கையாள்வது குறித்தும், ஓய்வூதியம்,சலுகைகள் போன்ற தொழிலாளர்களுக்கான பல அம்சங்களையும் விரிவாக ஆய்வு செய்து பல்வேறு உரைகளின் மூலம் வெளியிட்டுள்ளார்.

## பொருளியலின் மேதை

அமெரிக்காவில் இரண்டு பொருளாதாரப் பட்டங்களையும், இங்கிலாந்தில் ஒரு பொருளாதாரப் பட்டத்தையும் பெற்று எட்வின்கெனான், செலிக்மேன் போன்ற புகழ்பெற்ற பொருளியல் மேதைகளிடம் கற்றுத்தேர்ந்து, ஆர். சி.தாத்தா ,பெட்ரண்ட் ரஸல் உள்ளிட்ட மிகப் பெரிய பொருளியலாளர்களின் பொருளியல் தத்துவங்களை விமர்சனம் செய்தும் இந்திய மக்களுக்கு ஏற்ற பொருளாதாரத்தை எதிர்வரும் பல நூறு ஆண்டுகளுக்கும் பயன்படும் விதமாக சிந்தித்து தனது ஆய்வுகளை எடுத்துரைத்திருக்கிறார். அதனாலேயே 2017 இல் பொருளாதாரத்திற்காக நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் தன்னுடைய உரையில், ”பொருளாதாரம் பற்றிய பல்வேறு ஆய்வுகளுக்கு எனக்கு காரணமாக இருந்தவர் அண்ணல் அம்பேத்கர்” என்று அறிவித்தார்.

ஒரு நாடு இயங்குவதற்கு அதன் வளங்கள் எவ்விதமாக பயன்படுத்தப்படவேண்டும், தொழிலாளர்களின் உரிமைகள் எவ்விதமாக நிலைநிறுத்தப்பட வேண்டும், பொது மக்களுக்கான சமூக நலத்திட்டங்கள்,

வரி வருவாயை எவ்விதமாக உறுதி பிரதி செய்வது, பெண்களின் நலன், வங்கி நடவடிக்கைகள் ,பண மதிப்பு, சந்தை பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு பொருளாதார ஆய்வுகளை இவ்வுலகிற்கு படைத்து தந்திருக்கும் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பொருளாதார ஆய்வுகளை இத்தருணத்தில் அறிந்துகொண்டு நடைமுறைப்படுத்துவது அவருடைய அளப்பரிய பணிகளுக்கு நாம் செய்யும் கைமாறு என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ●



▪ ஏப்ரல் 7 - உலகப் பொது சுகாதார நாள்; ஜாக்கி சான் - (புகழ்பெற்ற ஹாங்காங் நடிகர்) பிறந்த தினம்
ரவிசங்கர் - (பாரத ரத்னா விருது பெற்ற சிதார் இசைக் கலைஞர்) பிறந்த தினம்

# அன்பார்ந்த வாக்காள பெருமக்களே

அன்பார்ந்த பெரியோர்களே! தாய்மார்களே! உழைக்கும் பாட்டாளி மக்களே! காலமெல்லாம் உழைத்தும் உங்கள் உடம்பில் இடுப்புக்குக் கீழே கந்தலாகத் தொங்கும் கோவணத்தைப் போல், உங்கள் மனம் ஆகிவிடக்கூடாது என்று, உங்கள் மனதை உற்சாகப்படுத்த, சந்தோசப்படுத்த, கொஞ்ச நேரம் உங்களின் துக்கத்தை மறந்து, மனம் மகிழ்ச்சி கொள்ள இதோ உங்களைத்தேடி நாங்களே வந்துள்ளோம். உங்களுக்குச் சிறப்பானதொரு (தெருக்கூத்தை) நாடகத்தை நடத்த உள்ளோம். உங்களுக்காக ஒருமாத காலம் இங்கு நாடகம் நடைபெறும். அந்த காலம் முழுமைக்கும் உங்கள் மகிழ்ச்சிக்கு நாங்கள் உத்தரவாதம் தருகின்றோம். இது நிச்சயம் உங்களை மகிழ்விக்கும் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. என்று கூறி வரும் "கூத்தாடி" களைப்போல்! (தெருக்கூத்து கலைஞர்களைப்போல்) ஒரு கூட்டம் நம்மை நோக்கி இனி படையெடுக்கும். ஏனென்றால் இது தேர்தல் நேரம்.

கட்சிகள், வேட்பாளர்கள் நமது பகுதிக்கு வரும்போது அவர்கள் கூறும் வார்த்தைகளை நன்றாகக் கவனித்துப் பாருங்கள் இதே பாணியில்தான் இருக்கும். கூத்தாடிகள் முகாம் உள்ளவரை நிச்சயம் அன்றாட இரவுகள் ஏதோ ஒருவகையில் நமது மனம் மகிழ்ச்சிக் கொள்ளும். துன்பம் நீங்கியிருக்காது. ஆனால் அந்த நேரத்தில் அதை சற்று மறந்திருப்போம். இதுபோல் ஊர் ஊராகச் சென்று பகலெல்லாம் ஓடாய் உழைத்த மக்களுக்கு உறங்குமுன் சற்று மன அமைதியையும் ஆறுதலையும் சந்தோசத்தையும் தரும். அந்தக் கலைஞர்களின் கூத்தில், அவர்களின் உழைப்பும், அதன்மூலம் பொதுமக்களிடமிருந்து அவர்களுக்கு கிடைக்கும் ஏதோ சொற்ப வருமானத்தில் இந்தக் குழுவிலுள்ள பல கலைஞர்களின் குடும்பம் தினம் ஒரு வேளையாவது தங்களின் வயிற்று பசியைப் போக்கும்.




இந்தக் கலைஞர்களின் சொல்லிலும், செயலிலும் நேர்மை இருக்கும், வஞ்சகம் இருக்காது. நம்பிய மக்களை ஏமாற்றத் தெரியாது. இவர்களின் உழைப்புக்கு ஏற்ற வருமானம் எந்தக்காலத்திலும் கிடைத்ததில்லை. இவர்கள் சாப்பிடுவது ஒருவேளை உணவேயேனாலும் தங்களின் உழைப்பால் அது அவர்களுக்குக் கிடைத்ததாக இருக்கும். ஆனால் இதுபோன்ற நேர்மையான மனிதர்களுக்கு, கலைஞர்களுக்கு இங்கே மரியாதையெல்லாம் துளியளவும் இல்லை.

ஆனால் இங்கே அரசியல் கூத்தாடிகள் இருக்கிறார்கள். இந்தக் கூத்தாடிகள் தேர்தலில் வாக்குப்பதிவு நடைபெறும் நாள்வரை இவர்கள் ஆடும் கூத்து பெரிய அளவில் இருக்கும். தினம் ஒரு ஊர், சில வேளையில் ஒரே நாளில் பல ஊர், பல மேடைகளில் இவர்களின் கூத்து இருக்கும். இவர்கள் நடத்தும் இந்தக் கூத்தைப் பார்க்க வரும் மக்களுக்கு, அரசின் மதுவும், பிரியாணியும், பணமும் தருவார்கள். சில இடங்களில் பெரிய அளவில் கூட்டம் சேர்க்க (காட்ட) வேண்டிய அவசியம் இவர்களுக்கு ஏற்படும். அப்பொழுது வெளியூர்களில் இருந்து அதிக பணம் கொடுத்து ஆட்களைக் கூட்டிக்கொண்டு வருவார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பகல் நேரங்களில் கூட்டம் நடக்கும். வெயில் சுட்டெரிக்கும். தலைவர்கள் குளிர்சாதன வசதியுடன் கூடிய மேடையில், அனல் பறக்கும் வார்த்தைகளில் பிரச்சாரம் செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் மக்கள்! வெட்ட வெளியில், நிழல் எதுவும் இல்லாமல், சுற்றிலும் பாதுகாப்பு வளையம். அது மக்களின் நலனுக்கான பாதுகாப்பு வளையம் அல்ல. அது! தலைவர்கள் பேசி முடிக்கும்வரை யாரும் கூட்டத்தை விட்டு வெளியே சென்று விடக்கூடாதென்று அமைக்கப்பட்டுள்ள வளையம். இதுபோன்ற கட்டமைப்புள்ள இடத்தில் வைத்து அடைத்து வைத்திருப்பார்கள். குடிக்க தண்ணீர்கூட இல்லாமல், வெளியே எழுந்து செல்லவும் வழியில்லாமல் தாகத்தில் தொண்டை வறண்டு பல பேர் இறந்து போன சம்பவங்களும் இங்கே நடந்துள்ளன. இவ்வளவுக்கு இடையிலும், அடுத்தடுத்து நடைபெறும் இதுபோன்ற கூட்டத்திற்கு மக்கள் வருகிறார்கள் என்றால்! அது அரசியல் கட்சியின் கொள்கைகளின் மேல்கொண்ட பற்றுதலால் என்று சொல்லி விட முடியாது. விதிவிலக்காக அல்லது அரசியலில் ஏதாவது ஆதாயம் தேடி எதிர்பார்த்து காத்திருப்பவர்கள் வேண்டுமானால் சிலபேர் இருக்கலாம். ஒரு சிலர் வேறு வழியில்லாமல் இதுபோன்றவர்களை ஆதரிக்க வேண்டிய சூழ்நிலை.

ஆனால் பெரும்பான்மை மக்கள் பணம் கொடுத்து அழைத்து வரப்படுபவர்களே. இதுபோன்ற நெருக்கடியிலும் மக்கள் வருவதற்குக் காரணம், இன்னும் பெரும்பான்மை மக்களை வறுமையில், அனைத்திற்கும் கையேந்தும் நிலையிலேயே

தோழர் கா.தமிழரசன்

ஆட்சியாளர்கள் விரும்பி வைத்துள்ளதே! 'அவர்களுக்கு அன்றைய தினம் கிடைக்கும் சிலநூறு ரூபாய் பணத்திற்காகவும், பெரும்பான்மை மக்களை சிறந்த (குடி)மக்களாக உருவாக்கி வைத்திருக்கின்றோமே! அந்த குடிமக்களுக்கு இவர்கள் தரும் மதுவுக்காகவும் தான் இந்த மக்கள் கூட்டம் கூட்டமாக (அழைத்து வரப்படுகிறார்கள்) வருகிறார்கள்.

இங்கே தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் எல்லாம் தேர்தல் முடியும்வரை, மக்கள் கூட்டத்திற்கு வரும்போதும் பணம் தருவார்கள். ஓட்டுக்கும் பணம் தருவார்கள். அவர்கள் தரும் அந்த பணத்தை வாங்கிக்கொண்டு வாக்களித்தவர்களுக்கும் சரி, தேர்தலில் வாக்கை பணத்திற்காக விற்காமல் வாக்களித்த பொதுமக்கள் என யாராக இருந்தாலும் சரி, எல்லாம் தேர்தல் முடிவு வரும்வரைதான் அதன்பிறகு மக்களின் கதை அதோடு முடிந்துவிட்டது.

அதன் பிறகுதான் இவர்களின் உண்மை முகம் தெரியவரும். இதற்கு முன்புவரை இவர்கள் செய்த வேலைகள் எல்லாம் நடிப்பு என்பதும், இவர்கள் எவ்வளவு பெரிய நடிகர்கள் என்பதும் தெரியவரும். இந்த மகா நடிகர்கள் ஆட்சி அதிகாரம் தங்களின் கைக்கு வந்தபிறகு, இந்த நாட்டை மக்கள் ஓட்டு மொத்தமாக தங்களுக்கு எழுதிக் கொடுத்துவிட்டதாக நினைத்து இவர்களின் விருப்பப்படி செயல்படுவார்கள். நேர்மையாக நடந்துக்கொள்ள வேண்டும், நாம் மக்களுக்கானவர்கள் என்ற எண்ணமெல்லாம் துளியும் இவர்களிடம் இருக்காது. நாட்டை கூறுபோட்டு விற்கவும், சூறையாடவும் இந்த மக்கள் பெரும் தடையாக இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தில் பல நேரங்களில் இந்த அப்பாவி மக்கள் மீது கொடூரமான கொலைவெறி தாக்குதல்களை அரசுகளே அரங்கேற்றி உள்ளன.

ஆட்சியாளர்களைப் பொறுத்தவரை, இன்றைய தேதிக்கு மக்கள் என்று யாருமே இல்லாத நிலையிருந்தால், இவர்கள் மிகப்பெரிய அளவிற்கு சந்தோசமடைவார்கள்.

இந்த நாட்டில் மக்களின் வாழ்க்கை நிலையோ பரிதாபமான நிலையில் உள்ளது. மக்களுக்காகப் போராடும் மக்கள் மீது உண்மையான அக்கறை கொண்டு போராடும் அமைப்புகளிலுள்ள தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் பெரும் ஆபத்துக்குள்ளாக்கப்படுகிறார்கள். சிறை, சித்தரவதை என்று பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இந்த செயலை செய்வது மக்களுக்கு சேவை செய்யவே ஆட்சி அதிகாரத்திற்கு வந்துள்ளதாக சொல்லி ஆட்சிக்கு வந்த உத்தமர்கள்.

ஆனால் இங்கே ஆட்சிக்கு வந்த அரசியல்வாதிகளின் நிலையை மட்டும் கவனித்து பாருங்கள். நல்ல வளர்ச்சி அவர்களிடம் செழித்து வளர்ந்திருக்கும். நிலம், வீடு கார் என அனைத்தும் இவர்களுக்கு எப்படி வந்தது தேர்தலுக்கு முன்பு ஓட்டைப் பிச்சையாகக் கேட்டு வரும்போது இவர்களிடம் இதுபோல் எதுவுமே இல்லையே, பிறகு இப்போது இதெல்லாம் எப்படி வந்தது? என்று எண்ணி! நாம் காண்பது என்ன கனவா? என நம்மால் நம்ப முடியாது. அவ்வளவு உயரத்திற்கு நம்ம அரசியல்வாதிகளின் வளர்ச்சி ஓங்கி நிற்கும். ஏனென்றால் மக்களுக்கு சேவை செய்ய வந்தவர்களாயிற்றே. இரவு பகல் என்று பாராமல் இவர்கள் ஆற்று ஆற்று என்று ஆற்றிய சேவையின் பயனாகக் கிடைத்தவைகளாக இருக்கும் இவைகள் எல்லாம்.

இங்கே நடைபெறும் தேர்தல் சனநாயக முறைப்படியான தேர்தலும் இல்லை. சனநாயக முறைப்படி தலைவர்களை தேர்ந்தெடுப்பதும் இல்லை. எல்லாமே ஏமாற்று வேலைதான். ஆனாலும் ஐந்தாண்டுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறும்போது இது எதுவும் தெரியாத உத்தமர்கள்போல் இவர்கள் வருவார்கள். மக்களும் ஒன்றும் தெரியாதவர்கள் போல் அமைதியாகவே இருந்துவிடுவார்கள். அல்லது தெரிந்திருந்தாலும் இங்கே எல்லாம் இப்படித்தான் நடக்கும் என்ன செய்வதென்று தெரியாமல் அமைதியாக இருந்துவிடுகிறார்கள். அல்லது இந்த அரசியல்வாதிகள், அதிகாரத்தில் உள்ளவர்கள் தாங்கள் செய்த நல்ல காரியங்களையெல்லாம் மக்கள் அப்படியே நினைவில் வைத்திருந்தால், ஒருவரும் நமக்கு ஓட்டு போட மாட்டார்கள். ஆகவே, மக்கள் அதை மறக்க, மறைக்க வேண்டிய காரியம் எது வேண்டுமானாலும், செய்வார்கள். கலவரத்தை உருவாக்கி மக்களைச் சாதி வெறியர்களாகவும் மாற்றுவார்கள், வன்முறையாளர்களாகவும் மக்களை மாற்றி, அதன்மூலம் தேவைப்பட்டால் ஒரு சிலரை, ஏன் பலரை கொலையும் செய்வார்கள் அரசியலுக்காக, அல்லது அந்த சாவை வைத்து பெரிய அரசியல் செய்யவும் தயங்க மாட்டார்கள் இவர்கள். அந்த அளவிற்கு நல்லவர்கள் நமது நாட்டிலுள்ள அரசியல் தலைவர்கள். அரசியல், அரசு என்பதே பொதுமக்களுக்கானது என்ற சிந்தனை கொண்ட ஆட்சியாளர்கள் எங்கே உள்ளார்கள். அதிகாரத்தைக் கைக்குள் வைத்திருந்த யாரும் முழுமையாக அவர்களால் மக்களுக்காகச் சிந்தித்துச் செயல்பட முடியவில்லை. அதுவும் இப்போது உள்ளவர்களை அதுபோல் எல்லாம் எண்ணிவிட முடியாது. அவர்களுக்கு மக்களைப்பற்றின சிந்தனையெல்லாம் துளியளவும் கிடையாது. ஆனால் "மக்கள் மீது பற்று கொண்ட தலைவர்கள், போராளிகள் அதிகாரத்தை நெருங்க முடியாமல், அதற்கு வெகு தூரத்தில் இருக்கின்ற காரணத்தினால்! அவர்கள் எழுப்பும் கூக்குரல், அதிகாரத்தில் உள்ள ஆட்சியாளர்களுக்கு, வேலையில்லாமல் கத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று ஏளனமாகப் பேசுகிறார்கள்.



காரணம், அதிகாரத்தில் உள்ள திமிர். அதை எல்லாம் அடக்கும், அல்லது அந்த அதிகாரத்திலிருந்து இதுபோன்றவர்களை நிரந்தரமாகத் தூக்கி தூர எறிந்தால் அப்போது புத்திவரும் இதுபோன்ற அதிகாரத் திமிரில் ஆணவத்தில் ஆடுபவர்களுக்கு. அது இப்போதைக்கு அவ்வளவு எளிதாக நடந்துவிடாது. அவ்வாறு நடக்க அதிகாரத்தைச் சுவைத்து சுக வாழ்வு வாழ்ந்த சுகவாசிகள் அவ்வாறு நடக்க அவ்வளவு எளிதில் அனுமதிக்கமாட்டார்கள். "இதை இவர்கள் என்ன அனுமதிப்பது" இது, நமது உரிமை, எது வேண்டும், எது வேண்டாம் என்பதை நாம்தான் முடிவு செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து, நமக்கான உரிமை என்ன? நம்மிடம் உள்ள அதிகாரம் என்ன என்பதை மக்கள் முழுமையாக அறிந்து அதன்படி தெளிவாக, உறுதியாக ஒருமித்தக் குரலில் ஒன்றாக ஓங்கி ஒலித்தால், இங்கே உள்ள பதர்களெல்லாம் இருக்கின்ற இடம் தெரியாமல் அப்புறப்படுத்தப்பட்டு அந்த இடம் சுத்தமாகிவிடும். அதன்பிறகு அனைத்தும் நன்றாக நல்ல முறையில் நடக்கும் அந்த நாள் எப்போது வரும் உடனே நடக்குமா? அதற்கான வேலையை எந்த அரசியல் கட்சியும் செய்யாது. மக்கள் நல அமைப்புகள் மட்டுமே அந்த வேலையை செய்யும். மக்கள் அனைவரும் அந்த அமைப்புகள் பின்னே செல்வோம். நிச்சயம் அது நமது எதிர்காலத்திற்கான நல்வழிப் பாதையாக இருக்கும். அந்தப்பாதையை நோக்கியதாக இருக்கட்டும். நமது அடுத்த பயணம். ●

# இல்லந்தோறும் பெரியார் சிலை!

தந்தை பெரியாருக்கு 17.9.1967 அன்று முதல் முதலில் திருச்சியில் சிலை வைத்து பெருமைப்படுத்தினார் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா.

திருச்சி, சிறுகனூர் என்ற இடத்தில் ‘பெரியார் உலகம்’ அமைக்கப்படுகிறது அங்கு பெரியாருக்கு 140 அடியில் சிலை வானுயர எழுப்பப்படவிருக்கிறது.

கலைஞர் கருணாநிதி முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டு அங்கு பெரியாரின் மார்பளவு சிலைகள் வைக்கப்பட்டன.

“பெரியாருக்கு ஏன் சிலை வைக்கப்படுகிறது?”

“பெரியார் சிலையை ஏன் வணங்குகிறீர்கள்?

பெரியார் சிலைக்கு ஏன் மாலை போடுகிறீர்கள்?” மடவாதிகளின் ரிப்பீடேட் கொஸ்டின்.

பெரியார் சிலையை பகுத்தறிவாளர்கள் வணங்குவதில்லை. பெரியாரின் பிறந்தநாளிலோ மறைந்த நாளிலோ அந்த நாளை மக்களுக்கு நினைவுபடுத்தி பிரச்சாரம் செய்யும் நோக்கில் பெரியார் சிலைக்கு மாலை போடுவது என்பது சிலையை 'ஹைலைட்' செய்வது. மதவாத மூடர்களுக்குப் பலமுறை சொல்லியாயிற்று. ஆனாலும் அவர்கள் திருந்தியபாடில்லை.


தந்தை பெரியார் சிந்தனையில் உருவான கருத்துகளும் அவற்றை நடைமுறைப்படுத்த கைக்கொள்ளப்படும் அணுகுமுறைச் சிறப்புகளும் தனித்துவம் கொண்டவை. உலகில் தோன்றிய மற்ற புரட்சியாளர்களிடமிருந்து மாறுபட்டு, பொது வாழ்வில் பங்கேற்று சிந்தித்து, யாரும் தொட்டுப் பார்க்காத, தட்டிக் கேட்காத சமூக அவலங்களைத் துணிச்சலாக நேர்கொண்டு வெற்றி கண்டவர் பெரியார். அந்தப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறவேண்டும் எனும் நோக்கத்தில் இயக்கம் கண்டு, அதற்குரிய தலைமையினை அடையாளம் காட்டி தனது வாழ்வினையே வரலாறாக விட்டுச் சென்று, வழித்தடம் அமைத்தவர் தந்தை பெரியார்.

பகுத்தறிவுக் கருத்துகளைப் பிரச்சாரம் செய்வதன் ஒரு அணுகுமுறையாக அவருக்கு சிலை அமைத்திடும் செயல் தந்தை பெரியாரது காலத்தே தொடங்கியதுதான்.

தந்தை பெரியாருக்கு சிலை வைப்பது அவருக்கு ஆராதனை செய்து, வழிபடுவதற்காக அல்ல; சடங்கு, சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டு ஆதிக்க ஆன்மீகச் சுரண்டலுக்கு வழி வகுத்திடவும் அல்ல; தந்தை பெரியாருக்கு சிலை வைத்திடுவது அவருக்கு அடையாள மரியாதை செய்திடவே; அவருடைய பகுத்தறிவுக்கொள்கையினை,சிலையைப் பார்வையிடுபவர்களுக்கு உணர்த்திடவே. தனக்கு சிலை வைத்திட தந்தை பெரியார் அனுமதித்தபோது அவர் விதித்த நிபந்தனை இதுதான்; ”என் உருவம் சிலை வடிவத்தில் எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும்; சிலை வடிவத்தினை விட நான் பிரச்சாரம் செய்த பகுத்தறிவுக் கருத்துகள் சிலை பீடத்தில் பொறிக்கப்பட வேண்டும். எந்த கருத்துகளை நான் எடுத்துச் சொன்னேனோ அந்தக் கருத்துகள் சிலையை பார்ப்பவரிடம் சென்றடைய வேண்டும்” என்று கூறி சிலை வைக்க அனுமதி அளித்தார்.

பொது வாழ்வில் பங்கேற்ற பலருக்கும் சிலை வைத்திடும் பொழுது அவரது பெயர் மற்றும் வாழ்ந்த நாள் பற்றிய குறிப்புகளுடன் சிலை நிறுவிடுவர். ஆனால் தந்தை பெரியாருக்கு எத்தனை சிலைகள் வைக்கப்படுகின்றனவோ


தோழர் ரமாபிரபா இல்லத்தில்


திராவிடர் கழக பொதுச் செயலாளர் துரை.சந்திரசேகர் இல்லத்தில்


தோழர் அன்பரசன் இல்லத்தில்...



அந்த அளவிற்கு அவரது பகுத்தறிவுக் கருத்துகளும் அவைகளில் பொறிக்கப்படுகின்றன.

*"கடவுள் இல்லை, இல்லை, இல்லவே இல்லை.*
*கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்,*
*கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்,*
*வணங்குகிறவன் காட்டுமிராண்டி"* என்ற சொற்றொடர் நிச்சயம் இடம்பெறுகிறது.

பகுத்தறிவின் முழுமையான அடையாளமே தந்தை பெரியாருக்கு சிலை வைப்பது. இதில், வேண்டுதல், வழிபாடு செய்வது கிடையாது. பகுத்தறிவுக் கருத்துப்பரப்பல்தான் சிலை வைப்பதன் முழு முக்கியக்காரணம்.

எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சாத இயக்கம் பெரியார் இயக்கம். சோதனைகளையே சாதனையாக்கிக் கொள்ளும் வல்லமை பெற்றது பெரியார் இயக்கம். தந்தை பெரியார் வாழ்ந்த பொழுது, ஒரு சமயம் சுற்றுப் பயணத்தில் அவரது எதிரிகள் அவரை அவமானப்படுத்தும் எண்ணத்தில் அவரை நோக்கி செருப்பு வீசினர். வீசப்பட்ட ஜோடி செருப்புகளில் ஒன்று மட்டும் பெரியாரது வாகனத்தில் வந்து விழுந்தது. பயணப்போக்கில் சற்று தூரம் வந்துவிட்ட பெரியார், வாகனத்தை திருப்பச்சொல்லி, செருப்பு வீசப்பட்ட இடத்திற்கு வந்தார். வீசப்பட்ட செருப்பு ஜோடிகளில் மற்றொன்றையும் எடுத்துக் கொண்டு, வீசப்பட்ட செருப்புகளின் பயன்பாட்டையும் (ஜோடி செருப்பில் ஒரு செருப்பு இருப்பதால் யாருக்கும் பயனில்லை; வீசப்பட்ட மற்றொரு செருப்பும் இருந்தால் நன்றாகப் பயன்படுமே!) வெளிப்படுத்தி எதிரிகளை நாணம் அடையச் செய்து, அற்ப அறிவுகொண்டோரின் செயலினை முறியடித்தார். பின்னர், எந்த இடத்தில் செருப்பு வீசி பெரியாரை அவமானப்படுத்திட நினைத்தார்களோ அந்த இடத்திலேயே அவருக்கு சிலை வைத்து வந்த எதிர்ப்பினையும், பெரியார் தொண்டர்கள் கருத்துப் பிரச்சார வாய்ப்பாக மாற்றினர். "செருப்பொன்று விழுந்தால் சிலையொன்று முளைக்கும்" என்று,கவிஞர் கருணானந்தம் பாடினார்.

**வீடுகளின் வாயிற்படியருகே, அல்லது வீட்டின் மாடியில் தெருவையொட்டி அல்லது, சுற்றுச் சுவரையொட்டி பெரியார் சிலைகள் அமைக்கப்பட வேண்டும். முடிந்தால் சிலையின் கீழே, கடவுள்மறுப்பு வாசகங்களைக் கல்வெட்டிலோ, பெயின்ட்டிலோ எழுத வேண்டும்.**


வேலூர் மாவட்ட தலைவர்
வே.இ.சிவகுமார் இல்லத்தில்

கடந்த *2018* செப்டம்பர் மாதத்தில், சென்னை மற்றும் தாராபுரம் பகுதிகளில் இருக்கும் பெரியார் சிலைகள் மீது அடையாளம் தெரியாத நபர்களால் செருப்புகள் வீசப்பட்டது. வேலூர் மாவட்டம் திருப்பத்தூரில் பெரியார் சிலையின் தலை துண்டிக்கப்பட்டது. இவற்றால் எதிரிகளின் எண்ணத்துக்கு மாறாக, ஊடகங்களில் பெரியாரின் பெயர் பலநூறு முறை உச்சரிக்கப்பட்டது..

தந்தை பெரியாரது கருத்துப் பரவலின் வளர்ச்சியாக. ஆந்திர மாநிலம்-விசாகப்பட்டினத்தில் தந்தை பெரியார் சிலை வைக்கப்பட்டது. ஆந்திர மாநிலத்தில் முளைத்திட்ட தந்தை பெரியாரின் முதல் சிலையினை தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி *04.02.2012* அன்று திறந்து வைத்தது பெரியாரின் கருத்துப் பரவல் பயணத்தின் ஒரு சாதனை.

கடவுள் வாழும் இடங்களாகக் கோயில்கள் கருதப்பட்டாலும் வீடுகளிலும் கடைகளிலும் அலுவலகங்களிலும் கடவுள் படங்களும் பொம்மைகளும் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்படுகின்றன. எந்நேரமும் எங்கும் கடவுள் உருவங்கள் வைக்கப்பட்டு மனதில் பதியசெய்யப்படுகின்றன. அப்படி இருக்கும்போது, பகுத்தறிவாளர்கள், பெரியாரியலாளர்கள் தங்கள் வீடுகளில், தங்களுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்களில், பெரியாரின் படங்களை மட்டுமல்லாமல் தந்தை பெரியாரின் முழு உருவச்சிலைகளை வைத்து, சிலைக்குக் கீழே, கடவுள் மறுப்பு வாசகத்தையும் தவறாமல் எழுதி வைக்க வேண்டும்.

பெரியாரியலாளர்கள் எல்லோர் வீட்டிலும் பெரியாரின் புகைப்படங்கள் நிச்சயமாக இருக்கும். சிலர் வீடுகளில் கதவுகளில் பெரியாரின் உருவம் சிற்பமாக வடிக்கப்பட்டிருக்கும். கட்டுரையாளரின் வீட்டிலும் தேக்குமரக் கதவில் பெரியாரின் மார்பளவு சிற்பம் வடிக்கப்பட்டிருக்கிறது.

திராவிடர்கழகப் பொதுச்செயலாளர் மானமிகு. துரை.சந்திரசேகரன் அவர்களின் வடலூர் வீட்டில் *2004*ஆம் ஆண்டில் தந்தை பெரியாரின் சிலை சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

வடலூர் தோழியர் ரமாபிரபா, தனது கனவு வீட்டில் தந்தை பெரியார் அமர்ந்திருப்பதுபோல் முழு உருவச்சிலை நிறுவி *2014*ஆம் ஆண்டு மார்ச் மாதம் தமிழர் தலைவர்


▪ ஏப்ரல் 12 (1961) - ரஷ்ய விண்வெளி வீரரான யூரி காகரின் ராக்கெட்டில் முதல்முதலாக பூமியைச் சுற்றி வலம் வந்தார்.

ஆசிரியர் அவர்களால் திறக்கப்பட்டது. அந்த சிலையின் வடிவமைப்பு தத்ரூபமாக அமைக்கப்பட்டதை மெய்மறந்து ரசித்த ஆசிரியர் கி.வீரமணி வெகுவாகப் பாராட்டினார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் பெரியாரின் முழு உருவச்சிலை 1990ஆம் ஆண்டு திறக்கப்பட்டாலும் திராவிடர் கழக வேலூர் மண்டலத் தலைவர் மானமிகு வி.சடகோபன் அவர்கள் குடியாத்தத்தில் நடத்தும் லிட்டில் பிளவர் மெட்ரிகுலேஷன் பள்ளியில் பெரியாரின் முழு உருவச்சிலை 17.05.2016இல் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்களால் திறக்கப்பட்டது. இதனால் அங்கு பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் அன்றாடம் பெரியாரின் சிலையைக் காண்பார்கள், சிந்திப்பார்கள்.

வேலூர் மாவட்ட மகளிர் பாசறைத் தலைவர் குடியாத்தம் ந.தேன்மொழி-அன்பரசன் இணையரின் வீட்டையொட்டி அமைந்துள்ள பெரியார் அரங்கம் என்ற பெயரில் அமைக்கப்பட்டுள்ள நிகழ்வரங்கத்தில் (Function Hall) ஆறரை அடி உயரத்தில் பெரியாரின் முழு உருவச்சிலை அமைக்கப்பட்டு, கடந்த 24.02.2019 அன்று, திராவிடர்கழக மாநில பிரச்சாரச் செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி அவர்களால் திறக்கப்பட்டது.


ஜெயங்கொண்டம் கழகத் தோழர்கள் வளர்மதி-தங்கம் இல்லத்திலும் பெரியார் சிலை வண்ணமடிக்கப்பட்டு சிறப்பாக வைக்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத் திராவிடர்கழகத் தலைவர் வெ.இ. சிவக்குமார் அவர்களின் குடியாத்தம் வீட்டில் முகப்பில், தந்தை பெரியாரின் மார்பளவு சிலை விரைவில் திறக்கப்படத் தயாராக உள்ளது.

வீடுகளின் வாயிற்படியருகே, அல்லது வீட்டின் மாடியில் தெருவையொட்டி அல்லது, சுற்றுச் சுவரையொட்டி பெரியார் சிலைகள் அமைக்கப்பட வேண்டும். முடிந்தால் சிலையின் கீழே, கடவுள்மறுப்பு



தோழர் வளர் தங்கம் இல்லத்தில்...



குடியாத்தம் லிட்டில் பிளவர் மெட்ரிகுலேஷன் பள்ளியில்...



தோழர் க.அருள்மொழி இல்லத்தில் கதவில்...

**அவரவர் வீடு, தொழிற்சாலை, பள்ளிகள், தொழில் நிறுவனங்களில் பெரியார் சிலையை நிறுவ யார் அனுமதியும் தேவையில்லை. சாலைகளை,பொது இடங்களை அனுமதியின்றி ஆக்கிரமித்துக்கொண்டு வழிபாட்டுத்தலங்கள் அமைக்கப்படும்போது, நமக்குச் சொந்தமான இடங்களில் பெரியார் சிலைகளை நிறுவ நாம் ஏன் தயங்க வேண்டும்?**

வாசகங்களைக் கல்வெட்டிலோ, பெயின்ட்டிலோ எழுத வேண்டும். தந்தை பெரியாரின் பிறந்தநாள், நினைவுநாள் மட்டுமல்ல, அன்னை மணியம்மையாரின் பிறந்தநாள், நினைவுநாள், தமிழர்தலைவர் கி.வீரமணி அவர்களின் பிறந்தநாள் மட்டுமல்லாமல், நம் வீட்டினர் பிறந்தநாள், திருமணநாள், பிள்ளைகள் தேர்வுகளில் வெற்றிபெற்ற நாட்களிலும்,வேலை கிடைத்த நாட்களிலும் பெரியாரின் சிலையை சீரியல் லைட், மாலை போன்றவற்றால் சிறப்புற அலங்கரிப்பதன் மூலம் பெரியாரின் உருவத்தையும் அவரது கொள்கைகளையும் மக்கள் மனதில் மீண்டும்மீண்டும் நினைவுபடுத்த முடியும்.

அவரவர் வீடு, தொழிற்சாலை, பள்ளிகள், தொழில் நிறுவனங்களில் பெரியார் சிலையை நிறுவ யார் அனுமதியும் தேவையில்லை. சாலைகளை,பொது இடங்களை அனுமதியின்றி ஆக்கிரமித்துக்கொண்டு வழிபாட்டுத்தலங்கள் அமைக்கப்படும்போது, நமக்குச் சொந்தமான இடங்களில் பெரியார் சிலைகளை நிறுவ நாம் ஏன் தயங்க வேண்டும்?

வீடுகள்தோறும் பெரியாரின் சிலைகள், 'மானமும் அறிவும் மனிதர்க்கு அழகு' என்று உரக்கச் சொல்லட்டும். பெரியாரின் கொள்கைகளால் மானுடம் வெல்லட்டும். ●

■ Dr. சிவராஜ் M.S. Ortho
எலும்பு மூட்டு மற்றும் முடநீக்குவியல் மருத்துவர், கோவை.



# நடுத்தர வயதுப் பெண்களை பாதிக்கும் முடக்குவாதம்

உடலில் உள்ள சிறிய, பெரிய மூட்டுக்களையும், அதை சுற்றியுள்ள திசுக்களையும் பாதித்து வீக்கம்,வலி, அசைவின்மை உண்டாக்கும் நாட்பட்ட வியாதியே முடக்கு வாதம்(Rheumatoid Arthritis) ஆகும்.

நடுத்தர வயது பெண்களையே (20–40) இந்த நோய் அதிகமாகத் தாக்குகிறது. இது பரம்பரை நோயாக அடுத்த தலைமுறையையும் பாதிக்கலாம். ஆனால் அதற்கான வாய்ப்பு குறைவே. அனைத்து மூட்டுகளும் பாதிக்கப்படலாம் என்றாலும் கை விரல் மூட்டுகள், மணிக்கட்டு, முழங்கை, முழங்கால் மற்றும் கணுக்கால் மூட்டுகள் அதிகமாக முடக்கு வாதத்தால் பாதிக்கப்படுகின்றன. அதிகாலை எழுந்தவுடன் கை விரல்களின் மூட்டுகளை அசைக்க முடியாமல் அவதிப்படுவது இந்நோயின் முக்கிய அறிகுறியாக உள்ளது.

## நோய் வரக் காரணங்கள்

முடக்கு வாதம் ஒரு "தன்னுடல் தாக்கு நோய்" (Au–toImmune Disease) என்றே அறியப்படுகிறது. இதை எப்படி புரிந்து கொள்ள வேண்டுமெனில் ஒரு மனிதனின் வெளிக்கிருமிகளை அழிக்கவல்ல நோய் எதிர்ப்பு சக்தி அவன் உடலின் செல்/திசுக்களையே அந்நியமாக உணர்ந்து அழிக்க முற்படுவதாகும். இந்த மாற்றத்திற்கு வைரஸ் தொற்றோ அல்லது மரபணுவில் ஏற்படும் மாற்றமோ காரணமாக இருக்கலாம் என தற்போதைய ஆய்வுகளால் கூறப்படுகிறது.

முதலில் இந்த நோய் மூட்டு இணைப்பு திசுக்களில் ஆரம்பித்தாலும் காலப்போக்கில் மூட்டினைச் சேதப்படுத்தி மேலும் உராய்வின்போது நிகழும் தேய்மானத்தால் அந்த மூட்டு அதன் இயக்கத்தை இழந்து நாட்பட்ட வலி மற்றும் வீக்கம் ஏற்படுகிறது, மூட்டு பாதிப்பு மட்டும் இல்லாமல் உடற்சோர்வு, இரத்த சோகை மற்றும் உடலில் சிறு சிறு தடுப்புகள் ஆகியவையும் பிரதானமாக இருக்கலாம்.

## நோயைக் கண்டறிவதும் உறுதி செய்வதும்

நோய்க்கான அறிகுறிகள் இருக்கும்பட்சத்தில் எலும்பு,மூட்டு மருத்துவரையோ (Orthopaedician) அல்லது மூட்டு இணைப்புத்திசு மருத்துவரையோ(Rheumatologist) அணுக வேண்டும். இரத்த சம்பந்தமான பரிசோதனைகளும், நோயின் அறிகுறிகளுமே முதன்மையான கண்டறியும் முறையாக உள்ளது. X–ray/MRI போன்றவை சில சமயம் நோயை உறுதி செய்யப் பயன்படுகின்றன.

## மருத்துவ முறைகள்

சர்க்கரை நோய்(Diabetes), உயர் இரத்த



அழுத்தம்(HyperTension) போல முடக்கு வாத நோயும் ஒரு கட்டுப்படுத்தக்கூடிய நாட்பட்ட நோயே ஆகும். பல மாதங்கள் அல்லது வருடங்கள் இந்த நோயின் தாக்கம் இருந்தாலும் திடீரெனத் தாக்கம் வெகுவாகக் குறைந்து வலியின்றி இருக்கும் நிலையும் வரலாம். இது Remission என்று கூறப்படும். ஆனால் திரும்பவும் இந்நோய் பாதிக்கும் நிலையும் வரும்.

பாதிக்கப்பட்ட மூட்டுக்கு ஓய்வு கொடுப்பது மற்றும் வலியைக் குறைக்கும் வலி நிவாரணி மருந்துகள் நோயின் வீரியத்தைக் குறைக்கின்றன. உடற்செயலியல் துறையின் உதவியோடு உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை மூட்டில் ஏற்படும் மாறுதல்களை குறைக்கிறது. அதிகமான வலி மற்றும் வீக்கம் இருக்கும்போது நோய்க்குண்டான மருந்துகள் வழங்கப்படுகின்றன.

தற்போது மருத்துவத்துறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பல புதிய மருந்துகள் நோயின் வீரியத்தைக் குறைவான காலத்தில் வெகுவாகக் குறைத்து நோயாளியைச் சராசரி வாழ்க்கைக்குத் திரும்ப உதவுகின்றன. முழுமையாக பாதிப்படைந்து சேதமான மூட்டுகளுக்கு மூட்டு மாற்று அறுவை சிகிச்சை இறுதி தீர்வாகவும் அமைகிறது.இதனால் இழந்த சமூக வாழ்க்கையை நோயாளிகள் திரும்பப் பெற முடியும். ●


■ ஏப்ரல் 13 (1919) – அமிர்தசரசில், ஜாலியன்வாலா பாக் படுகொலை நடந்தது.



# ஒரு குடம் தண்ணி ஊத்தி



கோடை காலத்தில் வெய்யிலின் தாக்கம் கடுமையாக இருக்கும். அந்தக் கொடுமைகளை விட பெரிய கொடுமை என்னவென்றால் ஊரெங்கும் தண்ணீர் இல்லாமல் மக்கள் தொலை தூரத்திலிருந்து தண்ணீர் சுமந்துவருவதுதான் அதைவிடவும் கொடுமையாக இருக்கும். மனிதர்களுக்கே இந்த நிலைமை என்றால் இன்னும் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் தாவரங்களுக்கும் என்ன கதி? மனிதன், தண்ணீர் எவ்வளவு ஆழத்தில் இருந்தாலும் ஸ்ட்ரா போட்டு உறிஞ்சிவிடும் குளிர்பானத்தைப் போல ஆழ்துளை (போர்) போட்டு உறிஞ்சிவிடத் தயாராக இருக்கிறான், ஆனால் பூமியில் தண்ணீர்தான் இருப்பதில்லை. காரணம் மழை நீர் கிடைக்கும்போது அதை சேமிக்க தவறியதுதான். இன்று நாம் செய்கிற நல்ல செயல்கள்தான் நாளைய தலைமுறையை தண்ணீர் பஞ்சம், உணவுப் பஞ்சம், உறவுப் பஞ்சம் என்று பல பஞ்சங்களில் இருந்து காப்பாற்ற முடியும். தண்ணீர் என்பது மனிதனின் தனியுடைமையன்று அது மரம், செடி, கொடி, பறவைகள் மற்றும் விலங்குகள் என எல்லா உயிரினத்தின் பொது உடைமையாகும். நீரின்றி அமையாது உலகு என்று வள்ளுவன் பாடியது நீரின் மகத்துவத்தை அறிந்ததாலும் அதை உலகிற்கு பறைசாற்றவும் தான். நாம் எதை சொன்னாலும் இந்த காலத்துப் பிள்ளைங்க விளையாட்ட எடுத்துகிறாங்க என்பது தான் இன்றைக்கு பல பெரியவர்களுடைய கவலையாக இருக்கிறது. நம் அடுத்த தலைமுறைக்கு நீரின் மகத்துவத்தை அவர்கள் பாணியிலேயே விளையாட்டாக எடுத்துச் சொல்வோம், ஒரு விளையாட்டின் மூலமும் எடுத்துச் சொல்வோம்.

இன்று ஒரு குடம் தண்ணி ஊத்தி என்னும் விளையாட்டை எப்படி விளையாடுவது என்று பார்ப்போம். இந்த விளையாட்டு விளையாட ஆறு வயதிலிருந்து பத்து வயதிற்கு உட்பட்ட பிள்ளைகள் குறைந்தது மூன்று பேர் தேவை. அதிகமான பிள்ளைகள் இருந்தால் விளையாட்டு இன்னும் களைகட்டும். இந்த விளையாட்டை பெரும்பாலும் பெண் பிள்ளைகள் விளையாடுவார்கள், கால மாற்றத்தின் காரணமாக எங்கள் ஊர் பகுதிகளில் பாலின பேதம் அறியாத சின்ன வயதில் ஆண் பிள்ளைகளும் சேர்ந்தே விளையாடி இருக்கிறோம். இதை உள்ளேயும் விளையாடலாம் அல்லது திறந்த வெளியில் வெளியிலேயும் விளையாடலாம்.

இந்த விளையாட்டை விளையாட வரும் பிள்ளைகளில் சாட் பூட் திரி அல்லது இங்கி பிங்கி பாங்கி என்று ஏதோவொரு முறையில் முதலில் இருவரைத் தேர்வு செய்துகொள்ள வேண்டும். அந்த இருவரும், எதிர் எதிரே நின்று கைகளை உயரத் தூக்கிக் கோர்த்துக் கொண்டு நிற்பர். அது பார்ப்பதற்கு வீட்டுக்கூரை அல்லது $V$ யை தலைகீழாகப் பிடித்த மாதிரி இருக்கும்.

விளையாட்டில் உள்ள மற்ற எல்லாச் சிறுவர்களும் ஒருவர் பின் ஒருவராக, முன்னிருப்பவரின் சட்டையைப் பிடித்துக்கொண்டு, ஒரு சங்கிலி தொடர்போல வரிசையாக நின்றுகொள்வார்கள். பின்பு இவர்கள் அனைவரும் இரண்டு கைகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டிருப்பவரின் கைகளுக்கு இடையில் நுழைந்து 8 போல் வளைந்து எல்லாரும் சேர்ந்து கீழ்க்காணும் பாடலைப்பாடிக்கொண்டே வெளியில் வருவர்.

**“ஒரு குடம் தண்ணி ஊத்தி, ஒரே பூ பூத்துச்சாம்...**
**ரெண்டு குடம் தண்ணி ஊத்தி, ரெண்டே பூ பூத்துச்சாம்...**
**மூணு குடம் தண்ணி ஊத்தி, மூணே பூ பூத்துச்சாம்...**
**நாலு குடம் தண்ணி ஊத்தி, நாலே பூ பூத்துச்சாம்...”**

-இப்படி எல்லோரும் பாடிக்கொண்டே, இருவர் கைகளுக்கு நடுவில் புகுந்து வெளியில் வருவார்கள். அப்பொழுது பாடலில், “பத்துக் குடம் தண்ணி ஊத்தி, பத்தே பூ பூத்துச்சாம்” என்று பாடி முடிச்சதும், அந்த நேரத்தில் கைகளைக் கோர்த்தபடி நின்றிருக்கும் இருவரும் சட்டெனத் தமது கைகளைக் கீழே இறக்கி பாடிக்கொண்டு வரும் பிள்ளைகளில் ஒருவரை அவர்களின் கைக்கு நடுவில் சிறைபிடித்துக் கொள்வார்கள்.

அப்படி மாட்டிக்கொண்ட சிறுவனையோ அல்லது சிறுமியையோ விடுவிக்க, எல்லாக் குழந்தைகளும் கீழ்க்காணும் பாடலை பாடிக்கொண்டு போய்க் கேட்பார்கள்.

இம்புட்டுப் பணம் தாரேன் விடுடா துலுக்கா (சிறிய அளவு

கையால் காட்டப்படும்) பின்பு சிறைபிடித்த பிள்ளைகள், "விட மாட்டேன் மலுக்கா" என்பார்கள்.

இம்புட்டுப் பணம் தாரேன் விடுடா துலுக்கா, (சற்றுப் பெரிய அளவு கையால் காட்டப்படும்) இம்புட்டுப் பணம் தாரேன் விடுடா துலுக்கா, (இன்னும் பெரிய அளவு கையால் காட்டப்படும்) இப்படியாக அளவை அதிகரித்துக்கொண்டே சென்று ஒரு பெரிய அளவாக வரும்பொழுது, பிடித்திருப்பவர்கள், பிடிபட்டவன் சிறுவனாயிருந்தால், உன் பெண்டாட்டி பெயர் என்ன என்பார்கள். அவன் அங்குள்ள சிறுமிகளின் பெயர்களில் ஒன்றைச் சொல்லவேண்டும். எல்லோரும் சிரிப்பர். அப்பொழுது அகப்பட்டவனை விட்டுவிடுவர். அதேபோல, பிடிபட்டவர் சிறுமியாயிருந்தால்,உன் புருசன் பெயர் என்ன என்பர்கள். அவள், அங்குள்ள சிறுவர்களின் பெயர்களில் ஒருவன் பெயரைச் சொன்னதும் அனைவரும் சிரிப்பார்கள். அந்த நேரத்தில் பிடிபட்டவர் விடுவிக்கப்படுவார். இந்த விளையாட்டை விளையாடினால் விளையாடுபவர்களின் உடலும் மனமும் புத்துணர்ச்சி பெறும். அதுதான் விளையாட்டின் முக்கிய பயன். இந்த விளையாட்டின் வெற்றி என்பது பெரியவர்கள் படித்து சிறியவர்களை இந்த விளையாட்டை விளையாடச் சொல்லிக்கொடுப்பதிலும் அவர்களை விளையாட அனுமதிப்பதிலும்தான் அடங்கியிருக்கிறது.

பொதுவாகச் சிறுவர்கள் ஒரு விளையாட்டை பாட்டு பாடி விளையாடும் பொழுது அவர்கள் பாடும் பாடலின் லயம் தாளத்தோடு சேர்ந்திருக்கும்படி அமைந்திருக்கும். இது கிராமப்புற சிறுவர்கள் தம்மை அறியாமலேயே இசையை கற்றுக்கொள்ள வழிவகுக்கும்.

இன்றைய குழந்தைகளுக்கு விளையாட்டுனு சொன்னதும், சட்டுனு ஞாபகத்துக்கு வருவது வீடியோ/செல்போன் கேம்ஸ்தான். மைதானங்களிலும் தெருக்களிலும் ஓடியாடி விளையாடும் விளையாட்டுகள் அவர்களுக்குத் தெரியவில்லை. இந்த வீடியோ கேம்ஸ்கள் எல்லாம் கோபம்,சுயநலம் ,வன்மம் தோல்விகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் போன்றவற்றை கற்றுகொடுப்பதே இல்லை. ஆனால் நமது பராம்பரிய விளையாட்டுகளான,ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரே பூ பூத்துச்சாம் என்னும் விளையாட்டு பல்லாங்குழியைப் போல கணித அறிவை வளர்க்கும்.அதனால் இன்னிக்கும் பெரியவர்கள் மனக்கணக்கில் புலியாக இருப்பதை காண முடிகிறது.

இது போன்ற நமது பாரம்பரிய விளையாட்டுகள் இயற்கையோடு ஒன்றியிருப்பதால், நம் உடலை வியர்க்க வைத்து ஆரோக்கியம் அளிப்பதுடன் அது குழந்தைகளின் அறிவு,திறமை,தைரியம்,உடல் வலிமை,மனவலிமை, சுயமுயற்சி, தன்னம்பிக்கை,குழு ஒற்றுமை போன்ற பல்வேறு நற்பண்புகளை வளர்க்கிறது. நமது பாரம்பரிய விளையாட்டுகளை நம் குழந்தைகள் தெரிந்து கொண்டால், அவர்கள் அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகளோடு சேர்ந்து விளையாடும் போது நல்ல நட்பு உருவாகும். அது நமது பிள்ளைகளை நல்வழிப்படுத்தும்.






குறிப்பாக இந்த ஒரு குடம் தண்ணி ஊத்தி விளையாட்டின் பயன் என்னவென்றால்? கடைசிப் பையன் சிறையில் இருப்பது போல் இருப்பான். மற்றபிள்ளைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து அவர்களின் சார்பாக ஒரு தலைவன் சென்று, சிறைபிடித்து வைத்த சிறுவர்களிடம் சென்று மீட்பதற்கு முயற்சி செய்வான். இது ஒரு தலைவனை உருவாக்குகிறது. தலைவன் என்பவன் மக்களில் இருந்தே தோன்றுகிறான், மக்களுக்காகவே தோன்றுகிறான் தலைவனின் இலக்கணத்தை பிள்ளைப் பருவத்திலேயே சொல்லிக்கொடுக்கும் இந்த விளையாட்டு. தலைவன் சிறைப்பிடித்திருப்பவரை பார்த்து, "இம்புட்டு பணம் தரோம் விடுடா துலுக்கா" என்று காலிலிருந்து தலைவரை சிறிது சிறிதாகக் காட்டுவான் தலைவன். சிறைப்படுத்தியவர்கள் "விடமாட்டோம் மலுக்கா" என்று பாடுவார்கள். பணத்திற்குப் பதில் "இம்புட்டு நகை தரோம் விடுடா துலுக்கா" என்பர். சிறைப்படுத்தியவர்கள் "விடமாட்டோம் மலுக்கா" என்பார்கள். கடைசியாக "ராஜா மகளைக் கட்டித் தரோம் விடுடா துலுக்கா" என்று பாடியதும் "விட்டுடறோம் மலுக்கா" என்று விடுவித்து விடுவார்கள். இதேமாதிரி இந்த விளையாட்டு தொடர்ந்து நடைபெறும். இது ஒருகாலத்தில் அதிகார பலம் கொண்ட முகம்மதியர்கள் வன்முறை மூலம் தாம் விரும்பிய பெண்ணைச் சிறைப்படுத்தியதையும், அவர்களை விடுவிக்கப் பெரியோர்கள் பணம், நகை முதலியவற்றைக் கொடுத்ததை அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று முகம்மதியர் காலத்தில் நடைபெற்ற போராட்டத்தை விளக்குவதாகவே, இப்பாடல்கள் அமைந்துள்ளன. இந்த விளையாட்டில் வரும் நிலைமை இன்றும் ஒரு நாட்டின் விமானப்பயணிகளை கடத்தி தீவிரவாதிகள் சிறைபிடித்து வைத்துக்கொண்டு அவர்களுக்கு வேண்டியவர்களை அரசாங்கச் சிறையில் இருந்து மீட்டுச்செல்லும் பேரத்தைப் போன்று உள்ளது. இந்த விளையாட்டு நிஜத்தை பிள்ளைகளுக்கு விளையாட்டாகவே சொல்லித் தருகிறது.

தன்னோடு இருப்பவன் ஒரு சிக்கலில் சிக்கிக்கொண்டால் அவனை அதிலிருந்து மீட்கச் சொல்வதும், ஒவ்வொரு குடமாக நாம் தண்ணீர் ஊத்துவதற்கேற்ப பூக்களின் எண்ணிக்கை இருக்கும் என்பது நமது உழைப்புக்கு ஏற்றாற்போலத்தான் நமக்கு பயன்கிடைக்கும் என்ற புரிதலையும் உண்டாக்குகிறது. இந்த விளையாட்டில் பாடும் பாட்டு தாவரத்திற்கும் மனிதர்களைப்போல தண்ணீர் அவசியம் என்பதையும் லாவகமாகச் சொல்லிகொடுக்கும் இந்த விளையாட்டு பிள்ளைகளின் பாடும் திறமையையும் வளர்க்கிறது. இன்றைக்குத் தமிழக கல்வி அமைச்சர் திரு செங்கோட்டையன் அவர்கள் அறிவித்திருக்கிறபடி பள்ளி மாணவர்கள் ஒரு செடியை வைத்து வளர்த்தால் அதற்கு அவர்களுக்கு ஐந்து மதிப்பெண்கள் கொடுக்கப்படும் என்பதைப் போலவே நமது பாரம்பரிய விளையாட்டுக்களையும் பள்ளிகளில் விளையாட ஊக்குவிக்கும் விதமாக ஏதேனும் நடவடிக்கை மேற்கொண்டால் மிகவும் நன்றாக இருக்கும்.

பெற்றோர்களே, நாடும் வீடும் சேர்ந்து விளையாட்டை பிள்ளைகளின் வாழ்வில் ஒரு அங்கமாக்குவோம். அதனால் அவர்களுக்கு உடல் நலத்தையும் மன நலத்தையும் ஆரோக்கியத்தையும் சொந்தமாக்குவோம்.

**– இன்னும் விளையாடலாம்**



■ ஏப்ரல் 14 – தீயணைப்பு தினம்; டாக்டர் அம்பேத்கர் – (இந்திய அரசு சட்டங்களைத் தொகுத்தவர்) பிறந்த தினம்

"மேம், உங்கள கூப்பிடுறாரு"

"யாரு... அருண் சாரா?"

"இல்ல மேம், பெரியவரு. . ."

"பவுண்டரா?..."

"எஸ் மேம்..."

ரீட்டா டீச்சர் பரபரப்போடு இருக்கையை விட்டு எழுந்தார். பிரின்ஸிபல் ரூமை விட்டு நிறுவனர் அறை நோக்கி நடந்தார்.

கண்ணாடிக் கதவை தள்ளியபடி உள்ளே நுழைந்த பொழுது... நிறுவனர் இருக்கைக்கு எதிரே ஆடம்பரமான அகன்ற தேக்கு மேஜைக்கு இருபுறமும் கிடந்த நாற்காலி நிரம்பியிருந்தன. வலது புற இருக்கைகளில் அருணும் கவிதாவும் அவர்களை அடுத்து மேனிலைப்பள்ளி முதல்வர் சுதாகர் 'ப' வடிவில் போடப்பட்டிருந்த இருக்கைகளில் நிறுவனருக்கு நேர் எதிரே A.O. தாட்சா இடதுபுறம் பொறுப்பாசிரியர்கள் மூவர். அலுவலக உதவியாளர் கந்தா என்றழைக்கப்படும் கந்தசாமி தட்டில் டீ குவளைகளை ஒவ்வொருவர் முன்னும் வைத்தபடி நகர்ந்து கொண்டிருந்தார்.

அறை முழுதும் நிசப்தம்.

ரீட்டா டீச்சரின் மனம் இப்போது கொஞ்சம் கனத்தது. தன் மூலமாகத்தான் நிர்வாகக் குழு கூட்டப்படும். இந்த முறை அப்படியில்லாமல் தான் ஆகக் கடைசியாக அழைக்கப் பட்டிருப்பதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நிறுவனருக்கு, அவருக்கு அருகில் இருந்த அருண், கவிதா, துணை முதல்வருக்கும் ஒட்டு மொத்தமாக ஒரு கும்பிடைப் போட்டுவிட்டு நிறுவனருக்கு நேரெதிரே A.O.-வுக்கு அருகில் இடது புறத்தில் இருந்த கடைசி சேரை நோக்கி நடந்த போது...

"மேம், இங்க வாங்க..." என்ற நிறுவனரின் குரல் அவரை அங்கேயே நிற்க வைத்தது.

நிறுவனர் தயாவின் மகன் அருணுக்கும் முன்னராக, ஒரு நாற்காலி காலியாய் இருந்ததை ரீட்டா டீச்சர் அப்போது தான் கவனித்தார்.

நிறுவனர் - தாளாளர் - நிறுவனச் செயலாளர் அருணின் மனைவி - இந்த வரிசையில்...

என்னதான் முதல்வரானாலும், ஒருபோதும் அவர் நிறுவனருக்கும் தாளாளருக்கும் இடையில் அமர்ந்ததில்லை. இப்போது நிறுவனரால் சுட்டிக்காட்டப்பட்ட அந்த இருக்கை கூட நிறுவனரின் தம்பி அற்புதம் அமரக் கூடியது. பெரும்பாலான நிர்வாகக் குழுக் கூட்டங்களில் நிறுவனருக்கு இடதுபுறமிருக்கும் அந்த இருக்கையில் அற்புதம் தான் அமர்ந்திருப்பார்.

எப்போதுமே நாற்காலிகள் பிரதிநிதிகளின் பிம்பமாகிவிடுகின்றன. ரீட்டா டீச்சர் தயக்கமும் அதனால்தான். அது அவருக்குரியதாய் இதற்கு முன் இருந்ததில்லை.

அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற அடுத்த நாளே இந்தப் பள்ளியின் முதல்வராகப் பொறுப்பேற்று 10 ஆண்டுகள்... ஒன்பது பொதுத் தேர்வுகள். ரீட்டா டீச்சர் இப்பள்ளி முதல்வராக அவசர அவசரமாக அழைத்துவரப்பட்டதற்குக் காரணங்கள் ஏராளம்...

அத்தனைக் காரணங்களின் ஊடாகவும் ஒரு மெல்லிய இழை, அவரது உழைப்பு, கடுமை என்று கருதாத கடும் உழைப்பு.

எட்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. முதல்வர் ரீட்டா ஒரு போதும் நிர்வாகத்தின் நிதி சார்ந்த கோப்புகளைப் பார்த்ததில்லை.

இந்தப் பள்ளிக்குள் முதல்வராகத்தான் நுழைந்தார். நுழைவதற்கு முன் ஒரே ஒரு நிபந்தனை 'சார், நா அகாடமிக் சைட் மட்டும் பாத்துக்குறேன்... ஆபீஸ் நிர்வாகத்த யார்கிட்டயாவது ஒப்படைச்சிடுங்க, நா முழுசா பசங்கள மட்டும் பாத்துக்கறேன்".

அவர் குறிப்பிட்ட "பசங்க" அந்தப் பள்ளியின் மாணவர்கள்.

அதைக் கூட அவர் 'நிபந்தனையாக' இல்லாமல் 'வேண்டுகோளின்' மெல்லிய தொனியில்தான் கேட்டுக்கொண்டார்.

மெட்ரிக் பள்ளிக்குள் நுழைந்த இரண்டாம் ஆண்டே பள்ளி மேனிலைப் பள்ளியானது. நகரின் பெயர் பெற்ற மூன்று பள்ளிகளுக்கு மத்தியில் இதன் தரம் நான்காவது இடத்தில் தான் இருந்தது. ஆண்டுக்கு ஒரு முதல்வர். வெளியேற்றப்படுவதும் வெளியேறிவிடுவதுமாக நிலையற்ற பதவி. அதில் ரீட்டா டீச்சர் ஒன்பது ஆண்டுகளாக நிர்வாகம் தந்த சம்பளத்துக்கு மேல் கொஞ்சம் கூட்டிக் கேட்கலாமே என்ற நப்பாசையோ, கொடுக்கலையே என்ற குறைபாடோ, நிராசையோ இல்லாத ஒன்பது ஆண்டுகள்.



# நிர்வாகம்

பள்ளி விட்டு 4.30 மணிக்கே வீடு திரும்பியதாக ஒருபோதும் இருந்ததில்லை. வழக்கமாக 6.30 வரை மாணவர்களுடன் பொதுத் தேர்வு நெருங்க நெருங்க அந்த நேரம் இரவு பத்தையும் தொடும். 'டாப்பர்ஸ்க்கு' இவற்றை 'உலகப்

போட்டியை" சந்திக்கத் தயாராகும் ஒரு கள வீரனின் உணர்வோடுதான் அவர் கடந்திருக்கிறார்.

அவரது உழைப்பை அத்தனை பேரும் 'கடும்ம்ம் உழைப்பு' என்பார்கள். அவருக்கோ அது ஒரு சுகமான 'குழந்தை வளர்ப்பு' அவ்வளவே.

'அர்ப்பணிப்பு' 'அறப்பணி' என்பதெல்லாம் ஒரு போதும் அவர் மனத்தடத்தில் பதிந்ததே இல்லை. ஒரு பெரும்பள்ளியின் பெருமையும் சிறுமையும் நம் கையில் என்ற பயம் மட்டுமே அவருக்குள் நிறைந்து கிடந்தது...

ஒவ்வொரு ஆண்டும் மற்ற பள்ளிகளின் உச்சத்தை மூன்றே ஆண்டுகளில் மூன்று பள்ளிகளின் உச்சத்தைத் தாண்டி முதல் பள்ளியானபோது தயா சொன்னது 'டீச்சர் இந்த பெருமை நூத்துக்கு நூறு உங்களோடது... ஒங்க உழைப்புக்கு கெடைச்ச அங்கீகாரம், என்னோடது ஒண்ணுமில்ல... மனமார்ந்த பாராட்டுகள்...''

நிறுவனரின் அந்த வார்த்தைகள் சடங்கோ சம்பிரதாயமோ அல்ல. ஒரு முதலாளியின் நோட்டையற்ற வெளிப்பாடு.

அந்த உழைப்பு ஆண்டுக்காண்டு கூடியதே தவிர குறைந்ததே இல்லை. பயனும் தான்.

திடீரென ஒரு நெருடல்.

கடந்த பத்தாண்டுகளில் இது போல் ஒருபோதும் தான் நிர்வாகக் குழுவின் கூட்டத்திற்கு கடைசியாக அழைக்கப்பட்டதில்லை...

மனம் இந்த குழப்பத்தில் மிதந்து கொண்டிருந்த பொழுதுதான் நிறுவனரின் குரல்.

"சும்மா ஒக்காருங்க டீச்சர்..."

தயங்கியபடி அமர்ந்தார்.

அறையில் முழு நிசப்தம்.

எல்லோர் கண்களும் நிறுவனரின் மேல்.

"மேம், நேற்று சம்பளம் வாங்கினீங்கில்ல..."

"ஆமா, சார்" அவர் கேள்வி ரீட்டா டீச்சருக்கு பிடிபடவில்லை.

ரிடையராகி, அடுத்த நாளே இந்தப் பள்ளியின் முதல்வராக அழைத்துவரப்பட்டு 10 ஆண்டுகள்... ஒரு நாளும் இப்படியொரு கேள்வியை அவர் எதிர்கொண்டதில்லை. நிறுவனர் தயாவின் குரலில் எந்தவிதக் கடுமையும் இல்லை. ஆனால், இந்தக் கேள்வி அவருக்குள் இதை தெரியாத நெருடலாய் இறங்கியது.

"எண்ணிப் பாத்தீங்களா..."

"ஆமா, சார். சரியாகத் தான் இருந்தது".


"குறையிலீயா. . ."

''இல்ல, சார். சரியாகத்தா இருந்தது... நாற்பத்து நாலாயிரத்து இருநூற்று ஐம்பது... எண்ணிப் பார்த்தேன் சார்... சரியாத்தா இருந்தது...''

தான் ஏதோ தவறு செய்து விட்டோமோ என்ற குற்ற உணர்வின் அதிர்வுகள் அவர் மனத்துள் குவிந்து முகமெங்கும் படர்ந்தது... உடலெங்கும் லேசான படபடப்பும், வியர்வையும் கட்ட...

இப்போது தயா அதிர்ந்து விட்டார்... முதல்வரை ரொம்பவும் கலவரப்படுத்திவிட்டோமோ என்ற பதைபதைப்பு...

"மேடம், ஒண்ணுமில்ல. . . இப்பத்தான் சம்பளப்பட்டியல வாங்கிப் பார்த்தேன். ஒங்க சம்பளம் நாற்பத்து அஞ்சாச்சே, ஏன் 750 கொறைச்சாங்கன்னு தெரியல... அதா உங்கள கேட்டேன்...''



அப்பாடா. டீச்சர் சமநிலைக்கு வந்தார்.

படபடப்பு குறைந்தது.

"சார், ட்வெண்டி நைன்த் மார்னிங் ஒன் அவர் பெர்மிஷன் போட்டிருந்தேன் சார்... வர்ரதுக்கு லேட்டாயிடுச்சு, சிஸ்டர் பேமிலி வந்திருந்தது, அவங்கள அனுப்பறதுல லேட்டாயிடுச்சு சார். பத்தே முக்காலுக்குதா ஸ்கூலுக்கு வந்தேன்... *C.L.* கொடுத்துட்டேன் சார். . . 'கரஸ்' ஸாருக்கு லீவ் மெஸேஜ் அனுப்பிட்டேன் சார். . ." வேகவேகமாக விளக்கமளித்தார்.

அவர் வார்த்தைகள் - அந்தப் படபடப்பு - அதில் வேரோடிக் கிடந்த வெகுமதிக்குரிய உணர்வோட்டம் தயாவை என்னவோ செய்தது. எந்த நிறுவனத்தில் வளர்ச்சியும் இத்தகைய உணர்ச்சிகளின் அடித்தளத்தில் தான் உரம் பெற்றுக் கிடக்கிறது... அங்கிருந்த அனைவரையும் பார்த்து சொன்னார்.

''எல்லா டீச்சர்ஸும் காலையில் எட்டரைக்கு வந்து - மாலைல நாலரைக்கு வீட்டுக்குப் போகணும். இதுதா உங்களோட ஒர்க்கிங் அவர்ஸ். பிரின்ஸிபல் 8 மணிக்கு வந்து ஈவினிங் 5 மணி வரை இருந்து போகணும்... நா எத்தனையோ முறை பார்த்திருக்கேன் ரீட்டா மேடம் காலைல எட்டு மணிக்கு வந்தாங்கண்ணா ஈவினிங் ஆறரை மணிக்கு முந்தி போனதே இல்ல. இத நா பார்த்தது மட்டுமில்ல கேட்டும் உறுதிப்படுத்திட்டுதா சொல்றேன்... பிப்ரவரி வந்துட்டா தேர்வு முடியுற வரைக்கும் 8 மணி வரைக்கும் இருந்துட்டுதா போயிருக்காங்க... தேர்வுக்கு 20 நாளுக்கு முந்திலேர்ந்து பத்து மணி வரைக்கும் பப்ளிக் போற மாணவர்களோடதா அவங்க வேல....

நிர்வாகம் கொடுக்குற சம்பளத்துக்கு காலைல 8க்கு வந்து ஈவினிங் அஞ்சுக்கெல்லா போயிருக்கலாம். போனதா தெரியல. தெரியல என்ன போனதே இல்ல... இவுங்க கூடுதல் உழைப்புக்கு இந்த நிர்வாகம் என்னத்த கூடுதலா கொடுத்திருச்சு. ஒண்ணுமில்ல... கணக்கில்லாத உழைப்பு. ஆனா கணக்கா ஒரு மணி நேர தாமதத்துக்கு ஒரு நாள் சம்பளப் பிடிப்பு. கணக்குப்படி சரிதான், ஆனா நியாயப்படி?''

பேசிக் கொண்டிருந்தவர் மேஜை டிராயரை இழுத்தார்.

ஒரு வெள்ளை கவர். ரீட்டா மேடத்திடம் நீட்டியபடி...

"மேம், ஒரு நாள் சம்பளம் உங்களுக்கோ நிர்வாகத்துக்கோ ஒண்ணும் பெரிசில்ல... ஆனா கணக்கில்லாம உழைக்கிற உங்க சம்பளத்துல காலணா பிடிச்சாகூட அது நிர்வாகத்துக்கு நியாயமா?''

அவர் நீட்டிய கவரை எழுந்து நின்று வாங்கிய பொது ரீட்டா டீச்சரின் கண்கள் பனித்தன. அறை முழுதும் அமைதி.

சில கண மௌனத்தைக் கலைத்தது நிறுவனரின் குரல்.

''இது ஒண்ணும் பெரிய விஷயமில்ல... ஆனா, நியாயத்துக்கும் நிர்வாகத்துக்கும் இதவிடப் பெரிய விஷயம் எதுவுமில்ல... ரைட் மீட்டிங் முடிஞ்சுடுச்சு... லஞ்ச் அவர்... போய் சாப்பிடுங்க... தேங்க்ஸ்...'' குணா எழுந்து அறைக்கு வெளியே நடந்தார். மௌனத்தின் அடர்த்தி இன்னும் குறையவில்லை, யாரும் யாருடனும் பேசிக்கொள்ளவில்லை. ஒவ்வொருவர் மனமும் ஏதோ ஒரு கணத்தில் நெளிந்தது. ●

# திராவிடக் கொள்கை விளக்க அறிக்கை
## - Dravidian Manifesto

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்பது திராவிடத் தத்துவம். உலகளாவிய சமநிலை மானுடம் மலர வேண்டும் என்ற குறிக்கோளோடு, ‘பேதமற்ற இடம் தான் மேலான திருப்தியான இடம்” என்பார் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார். இது சுயமரியாதை - சமத்துவம் - சமதர்மம் என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும்.

மதம், ஜாதி, நிறம், இனம், மொழி, பாலின அடையாளம், திருமணம், குடும்பம், பொருளாதாரம் இவற்றின் தற்போதைய அடிக்கட்டுமானத்தை மாற்றி எல்லார்க்கும் எல்லாமுமான சமநிலை உருவாக்குவதாகும்.

‘ஒரு நாடு வளர்ச்சி அடைந்திருக்கிறது. மக்கள் நாகரிக நிலைக்கு வந்திருக்கிறார்கள். நாட்டில் அறிவும், ஒழுக்கமும், நாணயமும், சமநிலையும் வளர்ந்து வளர்கிறது என்பதற்கு அடையாளம் என்னவென்றால் நாட்டில் எல்லாத் துறைகளிலும்...


*சம தர்மம்*
*சம ஈவு*
*சம உடைமை*
*சம ஆட்சித் தன்மை*
*சம நோக்கு*
*சம நுகர்ச்சி*
*சம அனுபவம்*
*இருக்க வேண்டும்.*
*ஏற்பட வேண்டும்..*
*ஏற்பட்டாக வேண்டும்...”*

**– தந்தை பெரியார்**

இது ஒரு சுருக்கப் பிழிவாகும்.

திராவிடக் கொள்கை - கோட்பாடு என்பவை

1. அனைத்து மக்களும் பிறப்பின் அடிப்படையில் சமமானவர்களே.
2. பாலின சமத்துவம்
3. சமுகநீதி
4. பகுத்தறிவுக்கும், அறிவியல் சிந்தனைக்கும் பொருந்ததாத கடவுள், மதம் மற்றும் இவற்றைச் சார்ந்த ஆன்மா, மோட்சம், நரகம், பழக்க வழக்கம், மூடத்தன நெடியேறும் முன்னோர்கள் கூற்று உள்ளிட்டவற்றை மறுப்பது.
5. பகுத்தறிவு, அறிவியல் மனப்பான்மை, எதையும் கேள்விக்கு உட்படுத்தி ஆய்வின் அடிப்படையில் ஏற்பதும் அல்லது மறுப்பதுமான புத்தாக்க உருவாக்கம்.



6. பேதம் பேசும் இந்துத்துவா கோட்பாட்டை எதிர்ப்பது.
7. அறிவியலை ஏற்பதுடன், அது மனித குலத்தின் நலனுக்கு - வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கவேண்டுமே தவிர கேடாக அமையக்கூடாது.
8. தீண்டாமை - அதற்கு மூல வேரான ஜாதி - ஜாதிக்கு அரணான கடவுள், மதம், வேதம், சாஸ்திரம், இதிகாசம், புராணங்களை - பழைமைவாத குலப்பெருமைகளை எதிர்த்து அழிப்பது.
9. ஏற்றத் தாழ்வுள்ள இந்த சமுக அமைப்பில் உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்கு சமுகநீதி வழங்குவது - தனியார் துறை, பொதுத்துறை, அரசுத் துறை அனைத்திலும்.
10. ஆண் எஜமானன் - பெண் அடிமை என்ற தற்போதைய நிலைக்கு மாறாக பாலின சமத்துவம், எல்லா நிலைகளிலும் ஆண்களுக்கு நிகராகக் கல்வி, உத்தியோகம, அரசியல், பொருளாதார நிலைக்கு உத்தரவாதம்.
11. தற்போதைய நிலையில் வழிபாட்டில், அர்ச்சகத் தன்மையில் ஆண்களுக்குள்ள எல்லா உரிமைகளும் பெண்களுக்கும் தேவை - இது எல்லா மதங்களுக்குமே.

12. ஓரினச் சேர்க்கையாளர்கள், திருநங்கைகள், மாற்றுத் திறனாளிகள் எல்லா வகைகளிலும் மற்றவர்களுக்குச் சமமானவர்களே என்ற அடிப்படையில் அனைத்து உரிமைகளின் நுகர்வுக்கும் உரியவர்களே.

13. கிராம - நகர பேதம் கூடாது.

14. மதங்களைக் காரணம் காட்டி ஏற்றத் தாழ்வுகளை நிலை நிறுத்தும் போக்கு முற்றாக மாற்றி அமைக்கப்படுதல். எந்தக் காலத்திலோ, யாரோ சூழ்ச்சியாக ஆதிக்கத்தை நிலை நிறுத்த எழுதிக் குவித்த அனைத்தையும் ஒட்டுமொத்தமாக நிராகரித்தல்.

15. ஒவ்வொரு இனத்துக்குமான மொழிக்குரிய மதிப்புப் பேணப்படுதல் - இதில் ஒரு மொழி, இன்னொரு மொழியை ஆதிக்கம் செலுத்துவதற்கு அறவே இடம் தராமை. கால வளர்ச்சிக்கு ஏற்ப மொழியில் விஞ்ஞானக் கண்ணோட்டத்தோடு மாற்றம் கொணர்தல். பன்மொழிகள் கொண்ட இந்தியாவில், இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தில் எட்டாம் அட்டவணையில் இடம் பெற்ற மொழிகள் அனைத்தும் ஆட்சி மொழி என்பது உறுதிப்படுத்தப்படுதல். அகில இந்திய அளவில் தொடர்பு மொழி என்பது ஆங்கிலமே.

16. பொருளாதார நிலையில் மனிதனுக்குத் தேவையான அடிப்படைகள் பூர்த்தி செய்யப்படல்: இதற்கு அரசே முழுப் பொறுப்பு ஏற்றல்: பணக்காரன், ஏழை என்ற பேதத்தைக் குறிக்கும் சொல்லாடலுக்கே இடமில்லாது செய்தல்.

தொழிலாளி - முதலாளி என்ற பேதமின்றி 'பங்காளி" எனும் தன்மை நிலைநிறுத்தப்படுதல்: சுருக்கமாக சொல்லப்போனால், வருண பேதம், வர்க்க பேதம், பாலியல் பேதமற்ற ஒப்புரவு சமுதாயம் உருவாக்கப்படுதல்.

17. ஒரு மொழி, ஓர் இனத்துக்கு மேற்பட்ட மக்கள் வாழும் நாட்டில் அனைத்து மொழிகள், இனங்களுக்கான உரிமை, பண்பாடு, பங்களிப்பு, வளங்களுக்கு இடையே பாரபட்சமற்ற, ஆதிக்கமற்ற சமன்பாட்டை நிலை நிறுத்துதல்; மாநிலங்களுக்கான தன்னாட்சி உரிமை நிலைப்படுத்தப்படுதல்.

18. அரசுக்கும், மதத்துக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லாத உண்மையான மதச்சார்பின்மை நிலைப்பாடு.

19. ஜாதி ஒழிக்கப்படும் காலகட்டம் வரை அனைத்துப் பிரிவினருக்கும் சகல இடங்களிலும், துறைகளிலும் விகிதாச்சார அடிப்படையில் பிரதிநிதித்துவம்.

20. கல்வி என்பது எல்லோருக்கும் அடிப்படை உரிமை. விஞ்ஞான மனப்பான்மைக்கு விரோதமான எதுவும் கல்வியில் இடம்பெறாமை, வளர்ச்சித் தத்துவம், சிந்தனையூற்றம் - விடாமுயற்சி, ஊக்கம் தரும் தன்மை இவற்றோடு உலகப் போட்டிக்குத் தயாரிப்பான கல்வி முறை, ஒழுக்கம் பொதுச் சொத்து என்ற வார்ப்பு, பாடத் திட்டங்கள்: தகுதி திறமையை அளவிட மனப்பாட மதிப்பெண் முறைக்குப் பதிலாக செய்முறை, வினையூக்கத்தை உள்ளடக்கிய அறிவியல் அடிப்படையில் அமைந்த தொழில்நுட்பம் உள்ள கல்வி முறை.

21. கடவுள் நம்பிக்கைக் கொண்டோர் கடவுள் நம்பிக்கையற்றோர் - இரு நிலையில் உள்ளவர்களுக்கும் பிரச்சார உரிமையுடன் கூடிய சமநிலைச் சட்டங்கள் உருவாக்கப் பாடுபடுதல்.

22. குழந்தை வளர்ப்பில் முழுக்கவனம், உடல், மூளை வளர்ச்சிக்கான உணவு, சூழல், தூய்மை, அறிவுத் தூண்டல், நற்பழக்கம் பேணப்படுதல்.

23. முதியவர்களை அக்கறையுடன் உரிய மதிப்புடன் பாதுகாத்தல்.

24. சுற்றுச் சூழல், இயற்கை வளங்கள் பாதுகாப்பு.

25. ஆணோ, பெண்ணோ 20 வயதுக்கு மேல் எந்த வயதில் திருமணம் செய்து கொள்வது என்பதை அவர்களின் முடிவுக்கே விட்டுவிடுதல். திருமணம் என்பதில் வேறு யாருடைய தலையீடோ, குறுக்கீடோ கூடாத நிலை.

வயது அடைந்த ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்தலில் மூன்றாவது மனிதனுக்கு இடம் என்பது அத்துமீறிய நடவடிக்கையே. குழந்தைப்பேறு குறித்த முடிவில் பெண்ணுக்கு மட்டுமே பிரத்தியேக உரிமை.

26. மரண தண்டனையை ரத்து செய்தல்.

27. கருத்துரிமை, பிரச்சார உரிமைக்கு தடையற்ற நிலை.

28. கலை, கலைக்காக என்பதை ஏற்க இயலாது - மனிதத்தையும், சுயமரியாதைக் கருத்துருவையும் கொண்டதாக ஆக்கப்பூர்வமாக அமைதல் வேண்டும்.

29. 'அனைவருக்கும் அனைத்தும்" அமைந்து, சமூக நுகர்வுக்கான விரிந்த இலக்கு நோக்கி நடக்கட்டும் இந்த வையம்.

30. மனிதன் தானாகப் பிறக்கவில்லை - எனவே, தனக்காக வாழக்கூடாதவன் என்ற சமுக நோக்க - தொண்டறப் பண்பு.

31. ஆடம்பரம் தவிர்ப்பு - சிக்கனப் பெருவாழ்வு.

32. குருதி உறவு என்பதையும் கடந்து மனிதனுக்கு மனிதன் நேச உறவு-சகோதரத்துவம், சமத்துவம் பேணலே மனிதனுக்குப் பகுத்தறிவு இருப்பதின் பலனாகும்.

33. சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு.

கடவுளை மற - மனிதனை நினை என்னும் சுயமரியாதை சமத்துவ உலகம் மலரட்டும், மலரட்டும்..

'யாதும் ஊரே, யாவரும் கேளீர்! 'உலகமே ஒரு குடும்பம்" என்னும் பரிணாம நிலை வளரட்டும்.

பகைமை, ஆதிக்கம், ஆக்கிரமிப்பு போன்ற கொடிய நோய்களற்ற, ஆரோக்கியமான புத்துலகம் புரட்சியுகமாக பூத்துமலர நமது பயணங்களும், திட்டங்களும் அமையட்டும்.

**கி.வீரமணி,**

**தலைவர், திராவிடர் கழகம்.**

**தஞ்சாவூர், 23.2.2019**



▪ ஏப்ரல் 16 (1867) – வில்பர் ரைட் – (ஆகாய விமானம் கண்டுபிடித்த சகோதரர்களில் ஒருவர்) பிறந்த தினம்
சார்லி சாப்ளின் – (பிரபல ஆங்கில நகைச்சுவை நடிகர்) பிறந்த தினம்

# கற்றதன் பயன்

## திருப்பூர் புத்தகக் கண்காட்சி

திருப்பூர் பின்னல் புத்தக அறக்கட்டளையும், பாரதி புத்தகாலயமும் இணைந்து நடத்தும் 16-வது ஆண்டு புத்தகத் திருவிழா.

இப்பொழுது பருவக் காலங்களே மாறிக்கொண்டிருக்கிறது. குளிர்காலத்தில் அவ்வளவு குளிர் இல்லை. வெயில் காலத்தில் கடுமையான வெயில் அடிக்கிறது. வெயில் காலத்தில் வெயில் இல்லையென்றால் பரவாயில்லை. அது மிகக் கடுமையாக அடிக்கிறது. இருக்க வேண்டிய குளிரும் மழையும் குறைந்துகொண்டே போகிறது. இதற்கான காரணத்தை நாம் எங்கேயோ போட்டுவிட்டு, கிரகம் சரியில்லை, காலம் கெட்டுப்போய்விட்டது, கலி முத்திரிச்சு, நல்லவர்கள் குறைந்துபோய்விட்டார்கள். அதனால் மழை பெய்வதில்லை என்று நாமும் ஏதேதோ சமாதானம் சொல்லிக்கொண்டே அமைதியாகிவிடுகிறோம். நல்லவர்கள், குறைந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் அந்த குறைகிற எண்ணிக்கையில் நாம் இல்லாமல் பார்த்துக்கொள்வது மிகவும் முக்கியம்.

எல்லோரும் இதுபற்றிக் குறை சொல்வதில் நம்முடைய உலகமும், இந்தச் சமூகமும், சுற்றுப்புறமும், சூழலும், ஒழுக்கமும், பண்பாடும் குறைந்துகொண்டே வருகிறது என்பதில் முரண்பாடு கிடையாது. ஆனால் அதைத் தடுத்து நிறுத்துவதற்கும், அதைச் சீர் படுத்துவதற்கும் மீண்டும் ஓர் உயர்ந்த நிலையை அடைவதற்கும் நாம் என்ன செய்கிறோம்,அல்லது அப்படி செய்யப் போராடுகிறவர்களுக்கு நாம் எந்த வகையில் ஒத்துழைப்பாக இருக்கிறோம், அப்படி செய்ய முயற்சிக்கிறவர்களுக்கு நாம் என்ன உதவி செய்கிறோம், குறைந்தது இடையூறு செய்யாமலாவது இருக்கிறோமா? இதற்கெல்லாம் நமக்கு எண்ணமும், ஆர்வமும், அக்கறையும் இருக்கிறதா? என்கிற கேள்வியை நமக்குள் கேட்டுப்பார்க்கிறபோது, எனக்குத் தோன்றியது இது. யாருக்கு இல்லை ? உலகை அறியாதவர், நம்மைப்போல பள்ளி, கல்லூரிப் படிப்புகளுக்கு வராதவர், அவர்கள் அப்படி இருக்கிறார்கள் என்று சொன்னால், அது அறியாமை என்று நாம் மிகச் சுலபமாக சொல்வோம். அவருக்குப் படிப்பு குறைவு, ஸ்கூல்ல படிச்சதில்லை. அப்படித்தான் நாம் நிறைய பேரை நினைத்துக் கொண்டிருக்கிறோம். படித்தவர்கள் என்று நாம் பார்க்கிறவர்களுக்கெல்லாம் தேவையான பண்பாடு இருக்கிறதா, அக்கறை இருக்கிறதா, படித்தவர்களின் நடத்தை படித்தவர்களுக்கு ஏற்ற மாதிரி இருக்கிறதா? என்று பார்த்தால், மிக அதிர்ச்சி அளிக்கக்கூடிய புள்ளி விவரங்களை நம்முடைய நாடு வைத்திருக்கிறது.

இங்கு பரதம் ஆடிய சிறுமி ‘ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே, ஆனந்தச் சுதந்திரம் அடைந்துவிட்டோம்’ என்று அந்தப் பாடலுக்கு மிக அழகாக ஆடினார். ஆனால் உண்மையிலேயே சுதந்திரம் அடைந்துவிட்டோமா, சுதந்திரமாக வாழ்கிறோமா? என்கிற கேள்வி, இன்றைக்கு வரை எழுந்துகொண்டே இருக்கிறது. கருத்து சுதந்திரம், பேச்சு சுதந்திரம், கட்சி சுதந்திரம், கூட்டம் நடத்துகிற சுதந்திரம் இவையெல்லாம் ஒரு பக்கம். சகோதரிகளைப் பார்த்துக் கேட்கிறேன், என்றைக்காவது கடைத்தெருவில் நீங்கள் கை வீசி, ஒரு ஆண் நடப்பதைப்போல, சுதந்திரமாக நடந்திருக்கிறீர்களா? (பெண்பார்வையாளர்கள் இல்லை என்று கை அசைக்கிறார்கள்) ஏன் நடக்க முடியவில்லை? ஏதோ சீனாக்காரனும், பாகிஸ்தான்காரனும் சண்டைக்கு வர மாதிரியே உடம்பைக் குறுக்கி, காப்பாற்றிக்கொண்டு, கையில் புத்தகமோ, பையோ வைத்திருந்தால் அதை வைத்து நெஞ்சை இறுக்கி மூடிக்கொண்டு, யாரிடமிருந்து தப்பித்து அப்படி நாம் நடந்து போறோம்?

ஒரு நாடு பண்பில் உயர்ந்த நாடு, அறிவில் உயர்ந்த நாடு என்று சொல்ல வேண்டுமென்றால், அந்த நாட்டில் வாழ்கின்ற பெண்கள் தைரியமாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்தால்தான் அந்த நாட்டுக்கு இந்த மாதிரியெல்லாம் பேர் வைக்க முடியும். பழம்பெருமை உள்ள நாடு... அவையெல்லாம் வேலைக்கு ஆகாது. இந்தப் பெண்கள் யாரைப்பார்த்து அச்சப்பட்டு, தான் சுதந்திரமாக வாழ முடியாமல், நடக்க முடியாமல் தடுமாறுகிறார்கள் என்றால் நம் சமூகத்தினுடைய அறிவு நிலை, அற நிலை, ஒழுக்க நிலை என்ன? இதைப் பற்றி யாராவது வீட்டில் பேசுகிறோமா? கோவிலுக்குப் போவது, மசூதிக்குப் போவது, சர்ச்சுக்குப் போவது, பூஜைகள், தொழுகைகள், பிரார்த்தனைகள் போன்றவற்றையெல்லாம் சொல்லிக்கொடுக்கும் பெற்றோர்கள் யாராவது, அவர்களின் மகன்களிடம் ஒழுங்காகத் தெருவில் பெண்களை இடிக்காமல் போய்ட்டு வா என்று சொல்லிக்கொடுக்கிறோமா?ஆனால் பெண்களுக்குச் சொல்லிக்கொடுக்கிறோம், பத்திரமாகப் போய்ட்டு வா என்று. பத்திரமாக என்றால் எங்கே போய் ஓடி ஒளிய முடியும்?

சின்னத்தம்பி யானை மாதிரியா? யானைக்கே இடமில்லை. பத்திரிகைகளில் பார்க்கிறோம் யானைகள் அட்டகாசம் என்று. யானை என்ன அட்டகாசம் பண்ணவா வருகிறது? அது இருக்கும் இடத்தில் சாப்பாடு இருந்திருந்தால், தண்ணீர் இருந்திருந்தால் அது இறங்கி வராது. நாம் அங்கு சென்றால் எங்க ஏரியா கிட்ட வராதே என்றுசொல்லும். சொல்லத் தெரியாமல் வந்த அந்த சின்னத்தம்பி யானையை எல்லோரும் சேர்ந்து அலை கழிப்பதுபோல, பெண்களை நாம் ஏன் இப்படி செய்துகொண்டிருக்கிறோம்? இவற்றையெல்லாம் தங்கள் மகன்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறோமா? இவற்றையெல்லாம் சொல்லிக்கொடுக்காமல் நாம் டாக்டராக, எஞ்சினியராக, வழக்கறிஞராக, பேராசிரியராக இன்னும் என்னென்னவாகவோ இருக்கிறோம். ஆனால் அடிப்படையில் மனிதராக இல்லை.

அப்படியென்றால் இவற்றையெல்லாம் நாம் எதற்காகப் படித்தோம்? படிப்பைப் பற்றிச் சொல்லும்போது,



'எல்லாந்தாம் படிச்சீங்க, என்ன பண்ணிக் கிழிச்சீங்க?' என்ற பட்டுக்கோட்டையாரின் வரிகளை நாம் தவிர்க்கவே முடியாது. எல்லாப் புத்தகங்களும் இருக்கின்றன. தத்துவங்கள் இருக்கின்றன. சித்தாந்தங்களைப் படித்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் படித்ததன் பலன் என்ன என்பதை வாழ்க்கையில் அவர்கள் நடைமுறைப்படுத்தியிருக்கிறார்களா?

முதலில் கற்பதின் நோக்கம் என்ன? பட்டம், வேலை, *Competitive Examination, IIT*... ஐந்தாவது படிக்கும் பையனை அப்பா, அம்மா பண்ணும் டார்ச்சர் இருக்கு பாருங்க, ஆறாம் வகுப்பிலிருந்தே அவன் *IIT Coaching* போகணும். ஐ.ஐ.டி.யில் இருப்பது ஆயிரம் இடங்கள் என்றால், இந்தியா முழுவதும் பத்து லட்சம் மாணவர்களின் பெற்றோர்கள் நீ ஐ.ஐ.டி.க்குப் போகவேண்டும் என்று டார்ச்சர் பண்ணுகிறார்கள். அந்த ஆயிரம் மாணவர்களைத் தவிர, மீதி உள்ள மாணவர்கள் என்ன ஆவார்கள்?

நீட் (*NEET*) தேர்வு வந்தபிறகு உங்க பாடத்திட்டத்திற்கு மரியாதையே கிடையாது. நீ தேர்ச்சி பெற்றால் போதும். ஆனால் இந்தத் தேர்வுக்கு மட்டும் படி என்றால், மூவாயிரம் மருத்துவக் கல்லூரி இடங்களுக்கு, தேர்வு எழுதுகிற மூன்று லட்சம் பேரையும், அதை மட்டும் படித்தால் போதும் என்று படிக்க வைக்கிறோம். இதுதானா படிப்பினுடைய நோக்கம், அப்பொழுது மருத்துவராக, பொறியாளராக வர முடியவில்லை என்றால், அந்த மாணவர்களுக்கு மற்ற கல்லூரிகளில் இடம் கிடைக்குமா? அப்படியென்றால் என்ன செய்ய வேண்டும் ? மாணவர்கள் படிக்கும் பாடத்தை நன்றாகப் படிக்கச் சொல்ல வேண்டும். பரவாயில்லை, நீ அறிவியல் படி, வேதியியல் படி, ஆசிரியருக்குப் படித்து, நல்ல ஆசிரியராக பணியாற்று என்று சொல்ல வேண்டும்.

இப்பொழுது இருக்கும் நிலையில் நிறைய பெண்களை நீ ஆசிரியருக்குப் படிக்கிறாயா என்று கேட்டால், 'அய்யய்யோ' என்று மறுக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் ஆசிரியர்கள் மீது அவர்களுக்கு அவ்வளவு நல்ல எண்ணம். பெரியவர்களைக் கேட்டால், ஆசிரியராக வர வேண்டும் என்று நான் ஆசைப்பட்டேன் என்று சொல்வார்கள் . ஏனென்றால் அவர்களுக்கு ஆசிரியர்களாக இருந்தவர்கள் அப்படி இருந்தார்கள். எல்லா ஆசிரியர்களையும் அப்படி சொல்லக்கூடாது. இப்போதும் கொஞ்ச பேர் இருக்கிறார்கள். தன்னுடைய சொந்தப் பணத்தைச் செலவு செய்து மாணவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுகிற ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால் தன்னிடம் படிக்கின்ற மாணவன் அல்லது மாணவி சாப்பிட்டார்களா, அந்த மாணவி ஏன் இவ்வளவு சோர்வாக இருக்கிறாள், இங்க வாம்மா, என்னம்மா உனக்குப் பிரச்சனை, என்று கூப்பிட்டு பேசக் கூடியவர்கள் குறைந்துவிட்டார்கள். ஆகையால் மாணவர்களை அழைத்து நல்ல ஆசிரியராக நீங்கள் வர விரும்புகிறீர்களா என்று கேட்டால், அவர்கள் பார்க்கின்ற நல்லாசிரியர்களின் எண்ணிக்கைகுறைவாக இருப்பதால், அவர்களுக்கு நல்லாசிரியராக வர வேண்டும் என்ற நம்பிக்கை வரவில்லை.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் சொல்லலாம், நீ எதுவும் பண்ணலைன்னா ஆசிரியராக பணியாற்றலாம், டியூஷன் எடுக்கலாம், இத்தனை வகையான படிப்பு இருக்கிறது. எதை வேண்டுமானாலும் செய்து பிழைக்கலாம். ஆகையால் நீ மருத்துவராகத்தான் ஆக வேண்டும் என்ற அவசியம் இல்லை என்று.

கட்டிடங்கள் கட்டுமானத்தில் கலவை மெஷின்என்ற ஒன்று இருக்கிறது. ஒரு புறம் சிமெண்ட், ஜல்லி, தண்ணீரை ஊற்றினால் மூன்றும் கலந்து கலவையாக மறுபுறம் வந்து கொட்டும். அதுபோல தன் மகனையும், மகளையும் இந்தப் பக்கம் மிஷினில் போட்டால், மறுபக்கம் டாக்டராக, இன்ஜினியராக, ஐ.ஏ.எஸ். ஆக வந்து விழுந்துவிடுவார்கள் என்று பெற்றோர்களுக்கு ஆசை. சாப்பிட விடுவதில்லை, தூங்க விடுவதில்லை, விளையாட விடுவதில்லை. படி, படி, படின்னு அப்படி படிக்க வைக்கிறார்கள். அதுதானா படிப்பினுடைய நோக்கம், இதற்குப் பெயர்தானா கல்வி? மாணவர்கள் என்ன ஆவார்கள்? சம்பாதிக்கிற மெஷின் ஆவார்கள். எவ்வளவு சம்பாதிக்க வேண்டும்? நம்ம ஊர் சம்பளமெல்லாம் இப்போது பத்தாது. அமெரிக்க டாலர்!

முதலில் எழுபதாயிரம் கொடுத்தார்கள், பிறகு எண்பதாயிரம். அந்த வேலையை நோக்கி எல்லோரும் போய் விழுந்தார்கள். இப்போது புதிதாகப் படித்து முடித்து வருபவர்களுக்கு வெறும் பன்னிரண்டாயிரம் சம்பளம். எழுபதாயிரம் வாங்கியவர் என்ன ஆனார்? நீ *assessment*-ல சரியில்லை, உன்னுடைய *Evaluvation* சரியில்லை என்று வெளியே அனுப்பிவிட்டார்கள். எழுபதாயிரம் சம்பளம் வாங்கியவர்கள் வெளியே அனுப்பப்பட்டார்கள், லட்சக் கணக்காகச் செலவு செய்து படித்த புதியவர்களுக்கு வெறும் பன்னிரண்டாயிரம் சம்பளம். என்ன ஆவார்கள், அவர்களுடைய எதிர்காலம் என்ன?

அப்படிப் படித்த மாணவர்கள் கடைசியில் வீடு வீடாக புத்தகம் விற்கிறார்கள். ஆயிரம் ரூபாய் புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்து, *just two hundred madam* என்கிறார்கள். என்னம்மா படித்திருக்கிறீர்கள் என்று கேட்டால், நான் எம்.பி.ஏ. படித்திருக்கிறேன் என்கிறார்கள். எம்.பி.ஏ. படித்துவிட்டு ஏம்மா இந்த வேலை செய்கிறாய்? இது எங்களுடைய *assignment madam*. எவ்வளவு சம்பளம்? எட்டாயிரம் ரூபாய். *MBA* படிப்பு என்பது *Masters of Business Administration* எவ்வளவு பெரிய படிப்பு. அந்தப் படிப்பை படிக்க வைக்கும் பெற்றோருடைய ஆசை என்ன? என் மகன், மகள் எம்.பி.ஏ. படித்திருக்கிறாள் என்று சொல்வதில் அவர்களுக்கு இருக்கிற பெருமை எவ்வளவு, ஆனால் அதற்குக் கிடைத்திருக்கிற வாய்ப்பு என்ன?

இந்த மாதிரி பட்டங்கள் எல்லாம் படித்தால், இவ்வளவு


▪ ஏப்ரல் 17 (1790) – பெஞ்சமின் ஃப்ராங்க்ளின் – (இடி, மின்னல்களில் மின்சாரம் உள்ளது என்று கண்டுபிடித்தவர்) நினைவு தினம்


சம்பளம் வாங்குவார்கள் என்பது காலத்துக்குக் காலம் மாறிக்கொண்டே இருக்கும். ஆனால் மதிப்பு மாறாத படிப்பு என்று ஒன்று இருக்கிறது. அது தமிழ், ஆங்கிலம், கணக்கு, ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி- ன்னு தனித்தனியாக இருக்கிறது. அதில் எதைப் படித்தாலும் நம் பிள்ளைகள் நல்லா வருவாங்க, உருப்படுவாங்க. அந்தத் துறையில் அவர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டால், பெற்றோர்கள் நினைக்கிற எல்லாமுமாக வருவதற்கு பின்னால் வாய்ப்பு இருக்கிறது. அவற்றையெல்லாம் நம்பி தயவு செய்து, நம் பிள்ளைகளிடம் இதுதான் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தாதீர்கள். எல்.கே.ஜி. படிக்கும் குழந்தையிடம் நீ படிச்சி என்னவாக ஆவாய், என்றால் அவன் மனதில் நாசமாவேன் என்று நினைத்துக்கொள்வான். நான் டாக்டராவேன்னுதான் சொல்லணும்,சொன்னால்தான் நீ *Good boy*. அந்தப் பையன் பேச்சு வந்ததும் சொல்வான், அப்பா *you are a bad father*.

குழந்தைகள் மகிழ்ச்சியாகப்படிக்க வேண்டும், விளையாட வேண்டும். அப்படி எதுவும் இல்லாத இந்தக் கல்வி முறையில் நம்முடைய குழந்தைகளைப் பொம்மையாக, இயந்திரமாக ஆக்குகிற மனநிலையிலிருந்து பெற்றோர்கள் கொஞ்சம் வெளியே வர வேண்டும்.

கற்பதன் நோக்கம் என்ன? தேடல், அறிவு. அது அவர்களை உருவாக்கும். தன்னுடைய வழியை அவர்கள் தேடுவார்கள். இதைத்தான் நான் படிப்பேன் என்று பிள்ளைகள் சொல்வார்கள். அதற்கான வாய்ப்பை, அறிவை பெற்றோர்கள் கொடுக்க வேண்டும்.

படிப்பு தரும் அனுபவத்தைப் புரிந்து கொள்ள, நான் ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். இது வரை இதுமாதிரி செய்தியை படித்துக் கண்டு பிடித்ததாகத் தெரியவில்லை. எனக்கு இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது, இன்னும் அதை சரியாகப் படித்து, இதுதானா அது என்று முழுமையாக உறுதிபடுத்திக்கொள்ள வேண்டிய ஒரு செய்தியை நான் படித்தேன்.

இப்பொழுது திராவிடமெல்லாம் சும்மா, நாங்களெல்லாம் திராவிடம் கிடையாது, நான் தமிழன்டா! என்று நிறையபேர் பேசுகிறார்கள். சரி அதுவும் ஒரு கோட்பாடு என்கிறார்கள். ஆனால் திராவிடம் என்பது என்ன, அப்படி ஒரு கருத்தியல் இருந்ததா? இல்லையா? என்பதே நிறைய பேருக்கு சந்தேகம்.




நான் *Hindu Law*-வைப் பற்றி படிக்கும் போது, ஒரு வழக்கைப் பற்றிப் படிக்கிறேன். இங்கிலாந்து அரசியினுடைய *Advisory Court* அதுதான். அதன் பெயர் *Privy Council*. நம் சுப்ரீம் கோர்ட்டுக்கு மேல் அது. இப்போது மதுரையில் நடக்கும் வழக்கின், மேல் முறையீடு சுப்ரீம் கோர்ட்டில் நடக்கும், அதற்கும் முன்னால் இங்கிலாந்து ராணியினுடைய *Privy Council* என்ற கோர்ட்டில் நடக்கும். அந்தத் தீர்ப்பை இன்று வரை நம் இந்திய நீதிமன்றங்கள் மிகவும் மரியாதை கொடுத்துப் பின்பற்றுவார்கள். ஏனென்றால் அது அவ்வளவு அலசப்பட்ட தீர்ப்பாக இருக்கும். அப்படி வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பு பற்றி படித்தேன்.

இராமநாதபுரத்திலிருந்து 1860-ஆம் ஆண்டு ஒரு வழக்கு நடந்திருக்கிறது. இராமநாதபுரம் சமஸ்தானமும், அரண்மனையும், வீரமிக்க பாரம்பரியமும் மிகவும் புகழ்பெற்றது. 1860-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் மன்னர் சேதுபதி இறந்துவிட்டார். அவருடைய அரசி பர்வதவர்த்தினி. மன்னர் சேதுபதிக்கும் பர்வதவர்த்தினிக்கும் குழந்தை இல்லை. அப்போது இங்கிலாந்து அரசு ஒரு ஆணை போடுகிறது. இங்கிலாந்து அரசியினுடைய ஆணை. மன்னர் வாரிசு இல்லாமல் ஜமீன்கள், குறுநில மன்னர்கள் ஆண் வாரிசு இல்லாமல் இறந்துவிட்டால், *Sonless* ஜமீன்தார் என்கிறார்கள். ஏன் மகள் ஆண்டாள் ஒப்புக்கொள்ள மாட்டீர்களா? இந்திராகாந்தி இல்லையென்றால் நேரு என்ன ஆகியிருப்பார்? அது நம் பாரம்பரியம். அப்படி *Sonless* ஜமீன்தாராக இறந்துவிட்டால், அந்த அரசி உயிரோடு இருக்கும் வரை சொத்து, அந்த சமஸ்தானம் அவர்களுக்கு உரியது. அரசியும் இறந்துவிட்டால் அந்த சொத்துக்களையும், சமஸ்தானத்தையும் இங்கிலாந்து அரசோடு இணைத்துக்கொள்ளலாம். இதுபோன்ற பிரச்சனை ஜான்சிராணி உள்ளிட்டோருக்கும் வந்திருக்கிறது.

மன்னர் சேதுபதி இறந்ததும், அரசி முத்துராமலிங்கம் என்ற ஒரு இளைஞரை தத்து எடுத்து, அவரை மன்னரின் வாரிசாக்கி, முத்துராமலிங்க சேதுபதி என்று பெயர் வைக்கிறார்கள். இளவரசராக இருக்கும் முத்துராமலிங்க சேதுபதி மன்னராகப் போகிறார். அப்போது இராமநாதபுரம் எல்லாம் மதுரை ஜில்லாவில் அடங்கும். அப்போது இருந்த மதுரை கலெக்டர் இங்கிலாந்துக்கு இராமநாதபுரம் ஜமீன்தார் *Died, Sonless* என்று ஏற்கனவே எழுதிவிட்டார்.இங்கிலாந்து அரசு அரசி இறக்கட்டும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அரசி இறந்ததும் அந்த சமஸ்தானத்தை இங்கிலாந்து அரசோடு இணைக்க முயற்சிகள் நடக்கும்போது, மன்னராக வந்த முத்துராமலிங்க சேதுபதி அவர்கள், நான் இந்த சமஸ்தானத்தின் வாரிசு, என்னை எங்க அம்மா தத்தெடுத்திருக்கிறார்கள், என்னை எங்கள் பங்காளிகள் எல்லாம் மன்னராக ஏற்றுக்கொண்டுள்ளனர். அதனால் நான் மன்னராக வருகிறேன். நீங்கள் எங்கள் பகுதியை இங்கிலாந்து அரசுடன் இணைக்க முடியாது என்று 1860-களில் வழக்குத் தொடுக்கிறார். இந்தியாவில் அந்த வழக்கை ஆங்கிலேயர்களே நடத்துகிறார்கள். அந்த வழக்கில் முத்துராமலிங்க சேதுபதிதான் மன்னர் சேதுபதியின்வாரிசு, அவர் ஆட்சியில் இருப்பது தவறு கிடையாது என்று மன்னர் முத்துராமலிங்க சேதுபதிக்கு சாதகமாகத் தீர்ப்பளிக்கிறார்கள்.

மதுரை கலெக்டர் இங்கிலாந்தில் உள்ள *Privy Council* - ல் மேல் முறையீடு செய்கிறார். மன்னர் தரப்பிலும்

**இரண்டு பக்கம் படித்தாலும் நமக்கு என்ன அறிவு வருகிறதோ அதுவே பெரிது. இந்த இரண்டு பக்கம் படிப்பதற்கு முன்னால் இருந்ததைவிட படித்தபிறகு நீங்கள் அறிவாளிதானே! அதை நீங்கள் இன்னொருவருக்கு சொல்லிக்கொடுக்க முடியும்தானே!**

வாதம் வைக்கப்படுகிறது. இரண்டு தரப்பிலும் வைக்கப்பட்ட வாதம் என்னவென்றால், மதுரை கலெக்டர் தரப்பில் வைக்கப்பட்ட வாதம், 'Hindu law. மன்னர் சேதுபதியும், அரசி பர்வதவர்த்தினியும் ஹிந்து ஸ்மிர்திகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். ஹிந்து ஸ்மிர்திகளில் மனு ஸ்மிர்திதான் சட்டம். அந்த மனு ஸ்மிர்தியின் படி, ஒரு இந்து விதவைப் பெண்ணுக்கு அவரது கணவன் வாழும்போதே, நான் இறந்த பிறகு நீ ஒரு பையனை தத்தெடுத்துக்கொள் என்று அனுமதி கொடுத்துவிட்டு இறந்திருந்தால்தான், அந்த விதவை தத்தெடுக்க முடியும். அவர் அனுமதியின்றி அரசி தத்தெடுக்க முடியாது, அப்படி இந்த அரசி தத்தெடுத்தது செல்லாது' என்பது மதுரை கலெக்டருடைய வாதம்.

இதற்கு மன்னர் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் தரப்பில் பதிலாக 'நாங்கள் இராமநாதபுரம் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எங்களை மனு ஸ்மிர்தி கட்டுப்படுத்தாது.' என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. '

நீங்கள் இந்து என்று சொல்கிறீர்கள், உங்களை மனு ஸ்மிர்தி கட்டுப்படுத்தாது என்றால், எந்தச் சட்டம் உங்களைக் கட்டுப்படுத்தும்?' என்று எதிர்வாதம் வருகிறது.

மன்னர் தரப்பலிருந்து, 'நாங்கள் Dravida School of law- (திராவிட சட்ட வழிமுறைக்கு) கட்டுப்பட்டவர்கள். அந்த Dravida School of law-படி ஒரு இந்து விதவைப் பெண், கணவனுடைய அனுமதி இல்லாமலே தத்தெடுக்கலாம், அவர் வாரிசாகக் கருதப்படுவார். அதற்கு ஒரே ஒரு நிபந்தனை பங்காளிகள் ஒத்துக்கொள்ள வேண்டும். சொத்துப்பிரிவு, பாகப் பிரிவினை போன்ற விஷயங்களில் பங்காளிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பங்காளிகள் அனுமதியோடுதான் நான் மன்னராகியிருக்கிறேன். ஆகையால் எங்களை மனு ஸ்மிர்தி கட்டுப்படுத்தாது. We are bound by Dravida School of law' என்று மன்னர் முத்துராமலிங்க சேதுபதி முன்வைத்த வாதத்தை ஏற்றுக்கொண்டு, 1868-ஆம் ஆண்டு Privy Council வழங்கிய தீர்ப்பின்படி, இராமநாதபுர சமஸ்தானத்தை இங்கிலாந்து அரசு இணைத்துக்கொள்ள முடியாது (can't be annexed) என்று தீர்ப்பு சொல்லப்பட்டது. Dravida School of law-வினால்தான் இராமநாதபுர சமஸ்தானம் தப்பியது. இந்த வழக்கு எம்.ஐ.ஏ. என்று சட்ட தீர்ப்புகளைக் கொடுக்கிற ஒரு புத்தகம். Moor's Indian Appeal என்று Moor என்ற வழக்கறிஞர் வெளியிட்டுக்கொண்டிருந்த சட்ட தீர்ப்புகளைப் பற்றிய நூலில் இது வெளியிடப்பட்டுள்ளது.

சகோதர, சகோதரிகள் நன்றாகத் தெரிந்துகொள்ளுங்கள், நான் படிக்க நினைத்து தேடிக்கொண்டிருந்த செய்தி வேறு, ஆனால் இது என்ன இராமநாதபுரம் அரண்மனையைப் பற்றி ஒரு வழக்கு நடந்திருக்கிறதே என்று அந்த வழக்கு குறுக்கே வந்ததால் படித்தேன் . இதை நீங்கள் கம்ப்யூட்டரில் தேடிக் கண்டுபிடிக்க முடியாது. நீங்கள் புத்தகம் எடுத்துப் படித்தால்தான் அது கிடைக்கும். புத்தகத்தில்தான் Reference என்று காலத்தில் ஒரு செய்திக்கான மூலத்தைக் கொடுத்திருப்பார்கள். கம்ப்யூட்டரில் படித்தால் அது உங்களுக்கு என்ன வேண்டுமோ அதை மட்டும்தான் காண்பிக்கும். புத்தகத்தைப் புரட்டும்போதுதான் ஒவ்வொரு பக்கமும் ஒரு செய்தியைச் சொல்லும். அதைப் படித்ததும் எனக்கு எவ்வளவு பெரிய ஆச்சர்யத்தைக் கொடுத்திருக்கும். அறிவின் சாளரத்தில் ஒரு கதவு திறப்பதைப் போல.

கற்பதின் நோக்கம் தேடல் என்றால், அதன் பயன் என்ன? இப்படி தேடிக் கிடைக்கின்ற அறிவு எதற்குப் பயன்படும்? வாழ்க்கையில் எல்லோருக்கும் அவர்கள் கற்ற கல்வியை சமூகத்திற்கு பயன்படுத்துகிற வாய்ப்பு இருக்கிறது. வீட்டில் உள்ள ஷோ கேஸில் பொம்மைகளுக்குப் பதிலாகப் புத்தகம் வைக்க வேண்டும் என்பதை ஒரு பண்பாடாக நாம் மாற்ற வேண்டும். அதன் பயன்பாடு என்ன என்றால், நீங்கள்படிப்பது சமூகத்திற்குப் பயன்படும். எந்த வகையில்? நம்மைவிட படிக்காதவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள். உங்களுக்கு கணக்கு நன்றாக வரும் என்றால், கணக்கில் தேர்ச்சி பெறாத மாணவர்களுக்கு கணக்கைக் கற்றுக்கொடுங்கள். நீங்கள் படித்தது நான்கு பேருக்குப் பயன்படும். எவ்வளவு படித்தாலும் அது நமக்குப் பயன்படும் என்று சொன்னார் வள்ளுவர். அதற்காக மொத்த நூலகத்தையும் நம்மால் படித்து முடிக்க முடியாது.

*'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு*
*கற்றனைத் தூறும் அறிவு'*

இரண்டு பக்கம் படித்தாலும் நமக்கு என்ன அறிவு வருகிறதோ அதுவே பெரிது. இந்த இரண்டு பக்கம் படிப்பதற்கு முன்னால் இருந்ததைவிட படித்தபிறகு நீங்கள் அறிவாளிதானே! அதை நீங்கள் இன்னொருவருக்கு சொல்லிக்கொடுக்க முடியும்தானே!

'நான் மதம் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். ஆனாலும் என்னை மதம் என்ன என்று கேட்கிறார்கள். நான் எந்த மதத்தைப் போட்டுக்கொள்வது?' என்று தந்தைப் பெரியாரிடம் கேட்டார்கள். பெரியார் சொன்னார், 'நான் வள்ளுவர் மதம்னு போட்டுக்கொள். என் சமயம் வள்ளுவர் சமயம் என்று சொல்லுங்கள்.' என்றார் பெரியார். ஏனென்றால் அது அறிவு சார்ந்தது. மற்ற மதத்தையெல்லாம் சொல்வதைவிட ஏன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வள்ளுவரை தந்தை பெரியார் சொன்னார். அவரது தேடல் அங்கு கொண்டு போய் விடுகிறது. இன்னும் கொஞ்சம் தேடிப் படிக்கிறார், அது புத்தரிடம் கொண்டுபோய் விடுகிறது. நம்மை மாதிரி தேடிப்படித்தவர்கள் யாரென்று பார்த்தால் அது அண்ணல் அம்பேத்கரிடம் நம்மைக் கொண்டு விடுகிறது.

தந்தை பெரியாரும், அண்ணல் அம்பேத்கரும் என்ன பேசிக்கொள்வார்கள்? சார் நீங்க புத்தர் படித்திருக்கிறீர்களா? என்றுதானே பேசிக்கொள்வார்கள்.

புத்தர் என்ன சொல்கிறார், 'இரண்டு பேரின் கல்வியும் சமூக நோக்கமும் இணைந்தால், அவர்களின் உலக அறிவில் யார் யாரெல்லாம் கிடைப்பார்கள் என்று பாருங்கள்' என்று சொன்னார். அப்படி கிடைத்தவர்களைக் கொண்டுதான் இன்று உலகம் நடக்கிறது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார்,

புதியதோர் உலகம் செய்வோம் என்று. எப்படி ??

சாதி மத பேதங்கள்
மூட வழக்கங்கள் தாங்கி நடந்து வரும்
சண்டை உலகிதனை
ஊதையில் துரும்புபோல் அலைக்கழிப்போம்
பின்பு ஒழித்திடுவோம்
புதியதோர் உலகம் செய்வோம்.
பேதமிலா அப்பெரு உலகிற்கு
பேசு சுயமரியாதை உலகென்று பெயரிடுவோம்.

அந்த சுயமரியாதை உலகத்தை நோக்கி நாம் நடப்பதற்கும், நம்மோடு வருபவர்களை வழி நடத்துவதற்கும் நமக்கு அந்த சமூகக் கல்வி தேவை.அந்தக் கல்வியை மக்களோடு பயன்படுத்த வேண்டும். அந்தக் கல்வியை குழந்தைகளை மகிழ்ச்சியாக வளர்ப்பதற்கும், வாழ வைப்பதற்கும் பயன் படுத்துங்கள்.

பெரியவர்களுக்கு எப்போதுமே குழந்தைகளைப் பற்றி மனக்குறை. நான் எப்பொழுதுமே குழந்தைகளின் பக்கம்தான். என்னதான் மனக்குறை என்று கேட்டால், ஒருவர் சொன்னார் 'படிக்கிறதே இல்லங்க', 'என்ன படிக்கிறதில்லை', 'புத்தகத்தையெ படிக்கிறதில்லை. நாங்கள்லாம் மு.வ.வைப் படித்தோம், அகிலனைப் படித்தோம், பொன்னியின் செல்வன் படித்தோம்' என்று பேசிக்கொண்டே போனார். ஒரு சின்னப்பெண் வந்து, 'அங்கிள் நீங்க ஹாரி பாட்டர் படிச்சிருக்கீங்களா?' என்று கேட்டது. 'இல்லை' என்றார். 'அது எவ்வளவு பெரிசு தெரியுமா? இவ்வளவு பெருசு, நாங்க படிக்கிற இங்கிலீஷ் நாவல் இவ்வளவு பெருசு' என்று அந்த சின்னப் பெண் சொல்கிறாள்.

இந்த குழந்தைகளுக்கு அறிவில்லையா, பொறுப்பில்லையா, அக்கறையில்லையா? என்று கேட்டால், அவர்களுக்கு எல்லாம் இருக்கிறது. ஆனால் பெற்றோர்கள் அவர்களை ஒழுங்காக வளர்க்கவில்லை. நாம் அவர்களுக்கு உழைப்பைச் சொல்லிக்கொடுக்கவில்லை. உழைக்கிறது கேவலம் என்று சொல்லிக்கொடுக்கிறோம். படிக்கிறப் பிள்ளைகளுக்கு வீட்டு வேலை செய்யக் கற்றுக்கொடுக்காமல், படி, படி, படி என்று சொல்வது.

வீட்டில் பிள்ளைகளுக்கு வேலை கொடுத்தால், அம்மா நான் படிக்க வேண்டும் என்று சொல்வார்கள். சரி இந்த வீட்டையெல்லாம் கூட்டிவிட்டு படிடா என்றால் வேலையும் செய்வான், படிக்கவும் செய்வான். இன்னொன்று பிள்ளைகள் தூங்கவே மாட்டார்கள். ஏன்? நாம் அவர்களின் கைகளில் ஒரு பெரிய அறிவாயுதத்தைக் கொடுத்திருக்கிறோம். நாம் ஒரு வேலை செய்யும்போது வேறு ஏதாவது ஒரு கேள்வி கேட்டால் நாம் விழிப்போம். நம் பிள்ளைகள் அப்படியல்ல, நம்மிடம் பேசிக்கொண்டே, நாம் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டே, ஒருவரோடு மட்டுமல்லாமல், குரூப் டிஸ்கஷன் (Group discussion) செய்துகொண்டிருப்பார்கள். குரூப்பில் யாருக்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்கின்ற அறிவு, multy tasking. பல்துறை வேலைகளை ஒரே நேரத்தில் செய்யக்கூடிய அளவிற்கு மூளை இருக்கிறது.

இன்றைக்கு நாம் பார்க்கின்ற ஆபத்துகள் யாவும் நாம் சின்ன வயதில் பார்த்தது கிடையாது. சுனாமியைப் பார்த்திருக்கிறோமா? ஊர்ல வெள்ளம் வந்தால் எல்லோரும் வேடிக்கைப் பார்க்கப் போவோம். ஸ்கை லேப் என்று ஒன்று விழப்போகிறது என்று சொன்னார்கள், அது எங்க விழும்னு தெரியாது. ஒரு பாட்டி சொன்னார் வாசலில் சைக்கிள் நிற்கிறது எடுத்து உள்ளே வைடா என்று பேரனிடம் சொன்னார். ஏனென்றால் பாட்டியின் நம்பிக்கை ஸ்கை லேப் தெருவில்தான் விழும், வீட்டுக்குள் விழாது என்று. இன்றைய தலைமுறையினர் மங்கல்யான் சாட்டிலைட் என்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு மொபைல் வாங்கி, அதை ஆபரேட் பண்ணத் தெரியலைன்னா, உங்கள் வீட்டில் யார் சின்ன ஆளோ, அந்த ஆளிடம் கொடுக்க வேண்டும். என்னம்மா இதுகூடத் தெரியலை என்று தலையில் அடித்துக்கொண்டு அவன் சிரிப்பான் பாருங்க ஒரு சிரிப்பு நம்மைப் பார்த்து!

ஒரு எட்டு வயதுக் குழந்தை. அது Special Child. Special child-ன்னா மன வளர்ச்சி கொஞ்சம் பாதித்த குழந்தை. ஒரு வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது என்னிடம் வந்து கேட்கிறான், 'ஆன்ட்டி உங்க ஃபோன்ல கேம்ஸ் இருக்கா?' என்றான். 'இல்லப்பா' என்றேன். 'download பண்ணிக்கலாமே' என்று உடனே கேட்கிறான். 'downlod- ஆ, பண்ண முடியாதுப்பா' என்றேன். உடனே 'உங்க ஃபோன்ல bluetooth இல்லை?' என்றான். அவன் கேட்கும் ஒவ்வொரு வார்த்தையையும் நான் அன்றுதான் கேள்விப்படுகிறேன். அவன் என்ன நினைத்திருப்பான், யாருக்கு மன வளர்ச்சி இல்லையென்று நினைத்திருப்பான். ஓ இந்த ஆன்ட்டி special child போலருக்கு. அவங்களுக்கு ஃபோன்ல கேம்ஸ் download பண்ணத் தெரியல. App-ன்னா என்னான்னு தெரியல. Bluetooth-ன்னா என்னான்னு தெரியல. ஒண்ணுமே தெரியல, பாவம்டா அந்த ஆன்ட்டி என்று அவன் போய் மற்றொரு குழந்தையைக் கூட்டி வந்து என்னைக் காட்டாமல் போனான். என் ஃபோனை வாங்கி அதை அவனே தள்ளி, Bluetooth-ஐக் காட்டி,பாருங்க இதுதான் Bluetooth. அவனிடம் நாம் படித்த பழைய காலத்து ஜோக்கெல்லாம் சொன்னால் அவனுக்கு சிரிப்பு வருமா? ஒரு பத்திரிகையில் படித்தேன் .

தன் மனைவிக்குக் காது கேட்கவில்லை என்று ஒரு கணவர் மருத்துவரிடம் சென்று சொல்கிறார், 'நீங்க கூட்டிட்டு வாங்க, டெஸ்ட் பண்ணணும்' என்று டாக்டர் சொல்ல, 'இல்லங்க, டெஸ்ட் பண்ணினால் அவங்க வருத்தப்படுவாங்க. நீங்க மாத்திரை கொடுங்க.' என்கிறார், 'எங்கிருந்து கேட்கவில்லை என்று சொல்லுங்கள்?' என்கிறார் டாக்டர்,'பொதுவாகவே கேட்கவில்லை' என்று சொன்னார் கணவர். டாக்டர் மூன்று மாத்திரைகளைக் கொடுத்து, 'நீங்க கேட்லருந்து கூப்பிடுங்க, அதற்கு கேக்கலைன்னா இந்த மாத்திரையைக் கொடுங்க. ஹாலிலிருந்து கூப்பிடுங்க, அதற்கு கேட்கலைன்னா இந்த மாத்திரையைக் கொடுங்க. பக்கத்துலபோய் கூப்பிடுங்க, அதற்கு கேட்கலைன்னா இந்த மாத்திரையைக் கொடுங்க.' என்று மாத்திரைகளைக் கொடுத்தார். மாத்திரைகளை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு சென்ற கணவர் கேட் பக்கமிருந்து 'சமையல் ஆயிடுச்சா' என்று கேட்டார், பதிலில்லை. பிறகு ஹாலிலிருந்து 'சமையல் ஆயிடுச்சா' என்று கேட்டார், பதிலில்லை. கடைசியாக பக்கத்தில் சென்று 'சமையல் ஆயிடுச்சா' என்று கத்துகிறார், அந்த அம்மா கையில் வைத்திருந்த குக்கரை கீழே வைத்துவிட்டு, ஓங்கி அவரை ஒரு அடி அடித்துவிட்டு, 'ஏன்யா இதே கேள்வியைத்தான் வாசலிலிருந்து கேட்டே, ஆயிடுச்சுங்கன்னேன். திருப்பி ஹால்ல வந்து கேட்டே, அப்பவும் ஆயிடுச்சுங்கன்னேன். இப்ப பக்கத்துல வந்து கேக்குற, ஏன் இப்படி கத்துற' என்று அந்த அம்மா கேட்க,



பதறிப்போய் கணவனே மூன்று மாத்திரைகளையும் அவரே போட்டுக்கொண்டார். (பார்வையாளர்கள் சிரிப்பு)

இந்த ஜோக்கைச் சொன்னால் பெரியவர்கள் எல்லாம் சிரிக்கிறாங்க. சின்ன பசங்க எல்லாம் நம்மள அப்படியே ஒரு மாதிரி பாக்குறாங்க. ஜோக்கு? ஏன் இதுக்கெல்லாம் சிரிக்கிறீங்க. ஏன்?

அவர்கள் பார்க்கின்ற *violence*-க்கு நாம் பார்க்கும் அடிதடி எம்.ஜி.ஆர் நம்பியார் குத்துனாங்க, ரஜினி சண்டை போட்டாரு, கமலஹாசன் சண்டை போட்டாரு, அஜித் சண்டை போடுறாரு, விஜய் சண்டை போடுறாரு இதெல்லாம் ஒண்ணுமே கிடையாது. அவன் பார்க்கும் சண்டையில் இரண்டு மெஷின்கள் சண்டை போடுகிறது. கையில் வீடியோ கேம் வைத்துக்கொண்டு உலகம் பூரா ஏலியன்ஸோட சண்டை போடுகிறான். அது எங்கே வந்து முடிகிறதென்றால், அது ப்ளூவேலில் வந்து முடிகிறது. அது வரை அவனுடைய தேடல், அதை எங்கே நிறுத்த வேண்டும் என்று அவனுக்குத் தெரியாது. ஆனால் பெற்றோர்களாகிய நாம் தெரிந்துகொள்ள வேண்டும். என் பையன் எந்நேரமும் கம்ப்யூட்டர்தாங்க என்று மாடர்ன் மதர்ஸ் மாதிரி பெருமை பேசக்கூடாது. எந்நேரமும் பையன் கம்ப்யூட்டரோ, வீடியோ கேமோ வைத்திருந்தால் அது பிரச்சனையாகப் போகுது, அவன் அறிவுக்கு அது கோளாறு, அது ஆபத்து என்று நமக்குப் புரிய வேண்டும்.

கல்விக்கு வயதில்லை, கல்விக்கு எல்லையில்லை. 'சாந்துனையும் கல்லாதவாறு' என்று வள்ளுவர் சொன்னார். படித்தால்தான் எல்லா ஊர்களுக்கும் போக முடியும். இவற்றையெல்லாம் கற்று அதனுடய பயன் என்ன என்றால் அதற்கும் நாம் வள்ளுவரிடமே செல்வோம்.

'அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன் நோய் போல் போற்றாக் கடை'

சமுதாயத்தில் வேறொருவருக்கு நடக்கிற பிரச்சனை, தொல்லை, ஆபத்து தனக்கு வந்ததுபோல் நினைக்கவில்லையென்றால், உன்னுடைய அறிவால் என்ன பயன்? என்று வள்ளுவர் கேட்கிறார்.

அய்யோ அங்கெல்லாம் மக்கள் அடிச்சுக்கறாங்க என்று ஒருவர் சொல்ல, அது அவங்களும் இவங்களும் அடிச்சிக்கிறாங்க என்று விளக்கம் சொல்வது. இந்த மனநிலைக்கு ஆளானால் நம் அறிவால் பயனில்லை.

'இனி வரும் உலகம்' என்று தந்தை பெரியார் எழுதினார். எழுதியது 1936-ஆம் ஆண்டு. அவர் எழுதிய எல்லாமே நடந்திருக்கிறது. எல்லோருடைய சட்டைப் பையிலும் கம்பியில்லாத தந்தி சாதனம் இருக்கும்.அவர்கள் காதில் கேட்பதுபோல தொப்பியிலேயே இணைக்கப்படுகிற ரேடியோ இருக்கும். உலகத்தில் ஏதோ ஒரு மூலையில் இருந்துகொண்டு உலகத்தின் வேறு ஒரு இடத்திற்கு கல்வி கற்றுக்கொடுக்கிற கருவிகள் ஏற்படும். ஒருவருக்கொருவர் முகம் பார்த்துப் பேசிக்கொள்கிற வசதி ஏற்படும். தரை மார்க்கத்தைவிட ஆகாய மார்க்கமான பயணம்அதிகமாக இருக்கும். ஆணும் பெண்ணும் குழந்தை பெறுவதற்காகச் சேர வேண்டும் என்கிற அவசியம் இல்லாமல் பொலி காளைகளைப்போல ஆண்களுடைய உயிரணுக்கள் சேகரிக்கப்பட்டு, அவை ஊசி மூலமாகப் பெண்ணுக்குள் செலுத்தப்பட்டு குழந்தை பிறக்க வகை செய்யப்படும். இவையெல்லாம் 1940-களுக்கு முன்னால் பெரியார் சொன்னது. இதற்கு தந்தை பெரியாருக்கு ஞான திருஷ்டியெல்லாம் வேண்டாம். அறிவியல் போகின்ற போக்கை நல்ல நிதானமாகப் புரிந்துகொண்டால் இவையெல்லாம் கூட நடக்கும் என்கின்ற ஒரு பார்வை.

ஆனால் இவையெல்லாம் நடக்கும் என்று சொன்ன தந்தை பெரியார், கடைசியாக ஒன்று சொன்னார். சமூகம் மிக ஒற்றுமையாக இருக்கும். உடம்பில் நாசிக்கோ, நயனத்திற்கோ, கைக்கோ, வலித்தால் எனக்கு வலிக்கிறது என்று சொல்வதைப்போல, சமுதாயத்தில் யாரோ ஒருவருக்கு நடக்கிற தீங்கை தனக்கு நேர்ந்ததாக சமூகம் நினைக்கும் என்று சொன்னார். அது மட்டும்தான் இன்னும் நடக்கவில்லை. மற்ற அவர் சொன்ன மெஷின்களெல்லாம் வந்துவிட்டது. மனிதப் பண்பில் வரவேண்டிய அந்த வளர்ச்சி வரவில்லை. அது நேர் எதிரில் போகிறது. அதைத் தடுப்பதற்கு நம்முடைய கல்வியைப் பயன்படுத்துவோம்.

பெற்றோர்கள் உங்கள் குழந்தைகளை அதைநோக்கி ஆற்றுப்படுத்துங்கள். குழந்தைகளுக்கு படிக்க வேண்டும், சம்பாதிக்க வேண்டும் என்று மட்டும் சொல்லிக்கொடுக்காமல், படிக்க வேண்டும், பண்போடு வளரவேண்டும் என்று சொல்லிக்கொடுங்கள். சமூகத்திற்குப் பயன்பட வேண்டும் என்று சொல்லுங்கள்.

நான் முழு மன நிறைவோடு இன்றைக்கு பேச வந்ததற்கான முதன்மையான காரணம், ஏதோ ஒரு கிராமத்தில் பிற்படுத்தப்பட்ட சமூத்தில் பிறந்த அப்பா, அம்மாவினுடைய பிள்ளையாகப்பிறந்து சென்னைக்குப் போய் வழக்கறிஞராகி முப்பதாண்டுகளாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பணியாற்றுகிறேன். அந்தப் பணியினுடைய பயன் என நான் நினைப்பது என்னவென்றால், நம் பசங்களையெல்லாம் இன்று வாட்டிக்கொண்டிருக்கிற இந்த *competitive exam*-ல (போட்டித் தேர்வில்) *negative marking*- எனும் எதிர்மறை மதிப்பெண் முறையில் இருந்து நம் பிள்ளைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற போராட்டத்தில், இரண்டு நாட்களுக்கு முன்னால் நான் பெற்ற வெற்றியைநீங்கள் தொலைக்காட்சியில் பார்த்திருக்கலாம். இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வார்கள். அப்படி மேல் முறையீட்டிற்குச் சென்றால் என்ன நடக்கும் என்பது நமக்குத் தெரியாது. ஏனென்றால் நம் நாட்டில் உள்ள அனைத்து ஏழைகளையும் பற்றிக் கவலைப்பட நீதிமன்றம் இருக்கிறது. அவர்கள் கவலைப்படுகிற ஏழைகள் எல்லாம் மாதம் அறுபதாயிரமாவது சம்பளம் வாங்கணும். அப்படி வாங்குகின்ற ஏழைகளைப்பற்றி கவலைப்படுவாங்க. ஒரு கிராமத்தில் பிறந்து, பன்னிரெண்டாம் வகுப்பில் 1167 மார்க் வாங்கிவிட்டு, நீட் (*NEET*) தேர்வாலும், நெகட்டிவ் மார்க்காலும்(*Negative Mark*) உயிரைவிட்ட அந்த அனிதாவைப் போன்ற ஏழைகளைப்பற்றி அவர்கள் நினைப்பதற்கு எவ்வளவு நேரம் இருக்கிறது என்பது நமக்குத் தெரியாது.

அது ஒரு போராட்டம்தான் என்றாலும், என்னுடைய கல்வியின் பயன் என் சமூகக் குழந்தைகளுக்குப் பயன்பட்டது என்கிற அந்த நிறைவோடு, என்னைப் போல் உங்களில் பலர், உங்களுடைய கல்வியைப் பயன்படுத்த முன்வாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி வணக்கம். ●

# அண்மையில் படித்த புத்தகம்:
# கோட்சேயின் துப்பாக்கி பத்திரமாயிருக்கிறது...




**நூலின் ஆசிரியர் : இரா.உமா**
**பதிப்பகம் : கருஞ்சட்டைப் பதிப்பகம்.சென்னை–87**
**முதல் பதிப்பு : நவம்பர் 2018, மொத்த பக்கங்கள் 152**

மொத்தம் 24 கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூல். ஒரு அருமையான முன்னுரையை ‘பாதுகாப்புக்கான துப்பாக்கி’ எனத் தலைப்பிட்டு மேனாள் மத்திய அமைச்சர், தொலைபேசியையும் அலைபேசியையும் அனைத்து மக்களுக்குமாக ஆக்கிய அண்ணன் ஆ.இராசா அவர்கள் அளித்திருக்கின்றார். “இந்நூலில் உள்ள கட்டுரைகள் பகுத்தறிவு இல்லாததால் விளையும் தீமைகளையும் பகுத்தறிவினால் ஏற்பட்ட நன்மைகளையும் பல்வேறு கோணங்களில், பல்வேறு பாத்திரங்களாகவும் பரிமாணங்களாகவும் படம் பிடித்து காட்டுகின்றன” என ஒற்றை வரிச்சித்திரமாக இந்த நூலைப்படம் பிடித்துக்காட்டியுள்ளார்.

“கோட்சேகளுக்கு வேண்டுமானால் துப்பாக்கி முனையில் நம்பிக்கை இருக்கலாம்...எம் போன்றவர்களுக்குக் கருத்துக்களே ஆயுதங்கள்... கருத்துக்களே கேடயங்கள்” என ‘என்னுரை’யில் சொல்லும் நூலின் ஆசிரியர் நூல் முழுவதும் கருத்து ஆயுதங்களை மிகவலிமையாக விதைத்திருப்பதைக் காண இயலுகிறது.

‘தமிழக அரசியலின் பாட்டுடைத் தலைவன்... தலைவர் கலைஞரின் நினைவுகளோடு...’எனக்குறிப்பிடப்பட்டு கலைஞரின் புகைப்படம் புன்முறுவலோடு கட்டுரைகளுக்குள் புகும்முன் நம்மை வரவேற்கின்றது.ஹிந்தி மொழிக்கு எதிராகக் கேரளாவில், கர்நாடகத்தில் நடைபெற்ற போராட்டங்களை இணைத்து ‘நெடிய திராவிடம் எங்களின் உடமை’ எனும் புரட்சிக்கவிஞரின் பாடலையே தலைப்பாக இட்டு அடுத்த கட்டுரை போராட்டத்திற்குக் கட்டியம் கூறுகிறது.

‘தமிழன் பேர் சொல்லி மிகுத் தமிழரிடைத் தமிழ்நாட்டில் வாழ்ந்திட்டாலும் பார்ப்பனர்கள் மாறுவதில்லை என்பதையும் ‘நானும் சாதியும்’ என்னும் பெருமாள் முருகன் தொகுத்த நூலின் ஒரு கட்டுரை போல தன் ஊரில் நிலவும் சாதிய மனப்பான்மையைத் தோலினை உரித்து தொங்க விட்டுள்ளார் நூலின் ஆசிரியர். அடுத்தடுத்தக் கட்டுரைகளில் “எங்கள் ஊரின் முதல் நாத்திகவாதி, பகுத்தறிவுவாதியாக, சாதி மறுப்பாளராக நான்தான் உருவாகியிருக்கிறேன்” என்று தன்னைப்பற்றியும் “குலசேகரபுரம் என்கிற பெருமாள்பட்டி என்னும் என் கிராமம் சுயசாதிப் பெருமையில்தான் மூழ்கிக்கிடக்கிறது” என்று தன் கிராமம் பற்றியும் குறிப்பிட்டு “சாதி மட்டும் இல்லையென்றால்... என் கிராமம் அழகானதுதான்” என்று முடிப்பது அருமை.



திராவிட இயக்கம் சாதித்ததைப் பெருமையோடும் மற்றும் “பெண் விடுதலை என்று வந்தபோது சவம் எழ பேசும் ஆற்றலுடைய சுப்பிரமணிய சிவா” போன்றவர்கள் எல்லாம் அமைதியாக இருந்ததையும் இன்றைய தோழர் மணியரசனைப் பற்றி “என்ன செய்வது,அவர் எப்போதும் தனக்குத் தேவையான, சாதகமான செங்கல்லை மட்டுமே உருவிக்கொண்டு வந்து காட்டுவதைத் திட்டமாக வைத்திருக்கிறார்” என நக்கலோடும் பட்டியலிடும் “திராவிட இயக்கம் என்னும் பெருவெடிப்பு!” கட்டுரையில் கரிசல்காட்டு எழுத்தாளர்களை நினைவுபடுத்துகிறார்.

இந்துமத அடிப்படைவாத இயக்கங்களின் அத்துமீறல்களைப் பட்டியலிடும் இந்த நூலுக்குத் தலைப்பாக இருக்கும் ‘‘கோட்சேயின் துப்பாக்கி பத்திரமாயிருக்கிறது’’ எனும் கட்டுரை விரிவான கட்டுரை,வீரிய மிக்க

கட்டுரை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் அய்யா கி.வீரமணி தளபதி ஸ்டாலின் ஆகியோரின் பங்களிப்பைச் சொல்லும் 'காவிரி போற்றுதும்' எனும் கட்டுரை அய்யா சுப.வீ அவர்களின் 'மொழியும் வாழ்வும்' எனும் நூலைப் பற்றிச் சொல்லும் 'மொழிகளுக்குள் பகையில்லை' என்னும் கட்டுரை ஒவ்வொன்றும் தனித்தன்மையான கட்டுரைகள்.

''தங்களுக்கென ஒரு நாடில்லாத, தங்களுக்கென சொந்த வரலாறு இல்லாத ஒரு கூட்டம்'' கீழடி அகழ்வாராய்ச்சியை மறைக்கச் செய்யும் நரித்தனங்களை விளக்கும் ''வரலாற்றைப் புரட்டிப் போடும் கீழடி'' என்னும் கட்டுரை, "மகிழ்ச்சியான மன நிலையில் கூட மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்காத மனிதர்களுக்கு நடுவில் தன் துன்பங்களுக்கு இடையிலும் மக்களைப் பற்றி சிந்தித்த அரசியலின் அற்புதம் தோழர் நல்லகண்ணு, அன்பிற்கினிய அண்ணன் எனத் தலைப்பிட்டு விடுதலைச் சிறுத்தைகளின் தலைவர் தொல்.திருமாவளவன் அவர்களைப் பற்றிய கட்டுரைகள் என சமகால தலைவர்களைப் பற்றிய கட்டுரைகளும் இந்த நூலுக்குப் பெருமை சேர்க்கின்றன.

பெண்ணுரிமை சார்ந்த "அடடா பெண்கள் மீதுதான் எத்தனைப் பரிவு","வேண்டாம்" என்றால் "வேண்டாம்"தான் ,''தீட்டுமில்லை...!புதிருமில்லை...!'' ''குழந்தைகளை வளர்க்காதீர்கள் வளர விடுங்கள்" எனும் கட்டுரைகள் பற்றி மிக விரிவாக எழுதலாம்.

இறுதிக் கட்டுரையான "உடையட்டும் மனச்சிறை!" எனும் கட்டுரை புதிய நோக்கில் பெண் விடுதலைக்குத் தடையாக இருக்கக் கூடிய அத்தனை செய்திகளையும் பேசுகிறது. "குடும்பம்,மதம்,சாதி,சமூகம் என அனைத்துமே ஆணுக்கானதாக இருக்கிறது" என்னும் குரல் "உனது கடவுள், உனது மதம், உனது இலக்கியம் என அனைத்தும் சாதியைக் காப்பாற்றுவதாக இருக்கிறது" எனச் சொன்ன பெரியாரின் குரலை நினைவுபடுத்துகிறது.

"குழந்தைகளுக்குக் கலைஞர் தாத்தா" என்னும் கட்டுரை இன்றைய குழந்தைகள்,இளைஞர்கள், மாணவ மாணவிகள் மனதில் எவ்வாறு கலைஞர் அவர்கள் சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கிறார் என்பதை உணர்ச்சியோடும் நெகிழ்ச்சியோடும் பகிர்ந்திருக்கும் கட்டுரை.

தமிழில் கவிதை, கதை நூல்களை விட அதிகமாக கட்டுரை நூல்கள் விற்பனையாகின்றன என்று சொல்கிறார்கள். நடப்பு அரசியலைப் பற்றியும் நாட்டில் நிகழும் நிகழ்வுகள் பற்றியும் இளைஞர்கள் அறிந்து கொள்ள விரும்புவதும் உண்மையான வரலாற்றைத் தெரிந்துகொள்ள விரும்புவதும் அதற்கு ஒரு காரணம் எனலாம். அப்படிப்பட்டவர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்த புத்தகம் இரா.உமாவின் 'கோட்சேயின் துப்பாக்கி பத்திரமாயிருக்கிறது' எனலாம்.

படிக்க வேண்டிய, ஒவ்வொரு கட்டுரையாய் உள்வாங்க வேண்டிய கட்டுரைகளின் தொகுப்பு இந்த "கோட்சேயின் துப்பாக்கி பத்திரமாயிருக்கிறது'' எனும் நூலாகும். படிப்போம்! பகிர்வோம்!

**– முனைவர் வா.நேரு,**

**தலைவர், மாநில பகுத்தறிவு எழுத்தாளர் மன்றம்**

பேரா. **பழ.வெங்கடாசலம்**
மேஜிக் கலைஞர்

# மந்திரமா? தந்திரமா?



## எரியும் மெழுகுவர்த்தியை சாப்பிடுதல்



### தேவையானப் பொருட்கள்

ஒரு மெழுகுவர்த்தி மற்றும் தீப்பெட்டி.

### மேஜிக் செய்யும் முறை

முதலில் பார்வையாளர்களுக்கு மெழுகுவர்த்தியை எடுத்துக் காண்பித்து. "இந்த மெழுகுவர்த்தியை நான் உங்கள் முன் சாப்பிட்டுக் காட்டுகிறேன்" என்று சொல்லி மெழுகுவர்த்தியை அவையினர் முன் காண்பிக்க வேண்டும். பிறகு தீப்பெட்டி மூலம் பற்றவைத்து மெழுகுவர்த்தியை எரிய விட வேண்டும். பிறகு தீயை அணைத்து விட்டு மந்திரம் சொல்லுவது போல் முணுமுணுத்து அதை அப்படியே மென்று தின்றுவிழுங்கி விடலாம். இதைப் பார்ப்பவர்கள்ஆச்சரியப்படுவார்கள். சிறுவர்கள் வியந்து போவார்கள்.

### மேஜிக் இரகசியம்

மெழுகுவர்த்தி போல் ஒரு நேந்திரம் பழத்தை எடுத்து சீவிக் கொள்ள வேண்டும். அதன் ஒரு முனையில் பாதாம் பருப்பினைத் திரி போல சீவிசெருகிவிட வேண்டும். இது விழாதவாறு பார்வையாளர் முன்பு நேராகப் பிடித்துக் காண்பித்து தீ வைத்து எரிய விடவும். பின்னர் மென்று சாப்பிடலாம். இதனைத் தனியே செய்து பழகிக்கொள்ள வேண்டும். ●



▪ ஏப்ரல் 21 (1926) - ராணி எலிசபெத் - (இங்கிலாந்து அரசி) பிறந்த தினம்; பாரதிதாசன் நினைவு தினம்



# ஆன்லைன் வதந்தி

மக்களிடம் அறிவியல் மனப்பான்மை வளர வேண்டுமென்றால் அறிவியல் தகவல்களும், அறிவியல் விழிப்புணர்வும் மக்களைச் சென்றடைய வேண்டும். மக்களிடம் அறிவியல் மனப்பான்மை வளர வேண்டும் என்கிற நோக்கில் தான் சமூக வலைதளங்கள் உருவாக்கப்பட்டதாக நான் பொருள் கொள்வேன்.

ஆனால்,

இன்றோ, அப்படி சமூக வலைதளங்கள் பயன்படுத்தப்படுகிறது என்று சொன்னால் நிச்சயம் ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையில் நான் இல்லை. காரணம், சமூக வலைதளங்களில் பெரும்பாலும் பயனுள்ள தகவல்களைத் தவிர்த்தே பதிவுகள் வருவதை நாம் அறிவோம். இதனுடைய பயன்பாட்டாளர்கள் அதிகரித்தே வந்தாலும், அவற்றின் பயன்பாடு நல்ல வழியில் சென்று கொண்டு வருவதை மறுக்க இயலாது. அதுமட்டுமல்ல மக்கள் மத்தியில் ஒரு வதந்தியை ஏற்படுத்தக்கூடிய ஓர் செயலாகவே இன்று நடந்து வருகிறது.

நம்முடைய பாட்டிக் காலத்தில் எல்லாம் நான்கு ஐந்து கிழவிகள் ஒன்று சேர்ந்து விட்டால் ஊர்க் கதை, உலகக் கதை எல்லாம் பேசுவார்கள் என்று கேள்விப்பட்டு இருப்போம். அவர்கள் பேசும் போது அவர்கள் கேட்ட செய்தியை அப்படியே சொல்லாமல் சில செய்திகளைச் சேர்த்து சின்ன செயலை பெரியதாக நடந்த செயல் போல் சொல்வார்கள்.

“ஊர் வாயை மூடினாலும் ஊர்க் கிழவி வாயை மூட முடியாது” என்பது போல இன்று சமூக வலைதளங்களில் பரப்பும் செயல்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

**வளர்ந்து வரும் 21-ஆம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டிய நாம், இன்று இதுபோன்ற போலியான வதந்திகளை நம்பி அதற்காக நேரத்தைச் செலவு செய்து கொண்டு வருவதென்பது, நாம் இன்னும் எவ்வளவு அறியாமையில் இருந்து வருகிறோம் என்பதனைக் காட்டுகிறதல்லவா.?**

■ மு.சி.அறிவழகன்

உண்மையான நிகழ்வுகளை உரிய நேரத்தில் தந்தால் அவை சிறப்பு. அதைவிடுத்து சில செய்தி ஒரே ஆண்டில் பல முறை வருவதைக் கண்டிருப்போம்.

என்னுடைய நண்பர் ஒருவருக்கு O+ve இரத்தம் தேவை என்று தொடர்பு எண் போட்ட செய்தி வரும், அதை பார்க்கிற ஒவ்வொருவரும் ஒரு பகிர்வைப் போடுவார்கள். காரணம், அந்த இடத்திலே அவர்கள் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று மட்டுமே நினைப்பார்கள்.

ஆனால், அந்தச் செய்தியோ வருடக் கணக்கில் மக்கள் மத்தியில் சென்று கொண்டிருக்கும். இதனால், ஒரே செய்தி பல முறை வருவதைக் காணும் பலர் அதை ஒரு பொருட்டாகவே பார்ப்பது இல்லை. இதனால், சரியான நேரத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கும் தகவல் (Message) ஆனது சென்றடைவது இல்லை. அதுபோலவே தான், ஒரு பள்ளி வாகனம் இந்தப் பகுதியில் விபத்தில் சிக்கியது.

அதில் உள்ள குழந்தைகளுக்குக் காயம் ஏற்பட்டது. அவர்களுக்கு ஏற்ற இரத்தம் தேவை என்று ஒரு செய்தி, பல முறை வருவதையும் காண்போம். அதைப் பார்க்கும் சிலர் பதறிய நெஞ்சத்துடன் சென்று பார்ப்பதும் உண்டு. அப்படிப் பதறி அடித்துகொண்டு பார்த்தால் அங்கு அப்படி ஒரு நிகழ்வே நடந்திருக்காது. இது போன்ற நிகழ்வுகள், தேதி, நேரம் குறிப்பிடாமல் இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இரத்தம் தேவை, விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடுபவர்கள் தயவு செய்து தேதி, நேரம் போன்றவற்றை போட்டு வெளியிட்டால் இது போன்ற வதந்திகள் வெளிவருவது குறையும். இரத்தம் தேவைப்படுவோர் இரத்தம் தேவைப்படுவோரின் பெயரையும் அவரின் முகவரியையும், அவர் இந்த மருத்துவமனையில் உள்ளார், அவருக்கு இந்தப் பிரிவு இரத்தம் இந்நாளில் தேவை என குறிப்பிட்டுப் போட்டால் அவை நிச்சயம் அவர்களுக்குப் பயனுள்ள ஒரு வாய்ப்பாக அமையும்.

அதுமட்டுமல்லாமல் இதுபோலவே, பல செய்திகளையும் காண்போம். அது என்னவென்றால் இந்தச் செய்தியை நீங்கள் பத்து பேருக்கு பகிர்ந்தால் உங்களுக்கு நல்ல காரியம் நடக்கும் என்னும் சேதியையும் கண்டிருப்போம்.

அதுபோல ஒரு செயல் நடக்கும் என்றால் உடல் உழைப்பும், மன உழைப்பும் படிப்பும், கல்வியும் ஏன்..? இன்றைய அறிவியல் உலகில் அறிவியலையும் இப்படிப் பயன்படுத்தினால் நாம் படித்து என்ன பயன்.? அதுமட்டுமா.? இந்த செய்தியைப் பத்து பேருக்குப் பகிர்ந்தால் உங்கள் போனுக்கு பணம் வரும் என்றெல்லாம் செய்தி வரும்.

சற்று யோசித்துப் பாருங்கள், நாம் பேசக்கூடிய அழைப்புகளுக்கே ரேட்கட்டர் போட்டு பேசிக்கொண்டு இருக்கும் காலகட்டத்தில் இலவசமாக 300 ரூபாய் பணம் என்று சொல்லி, அதை அனைவர் மத்தியிலும் பகிர்ந்து மற்றவர் நேரங்களை வீணாக்கலாமா என்று சற்று யோசிக்க வேண்டாமா..?

சில இணையதள விற்பனை நிலையங்கள் “இந்தப் பொருளை வாங்க, இதனுள் சென்று முன்பதிவு செய்தால் குறைந்த விலையில் இந்தப் பொருளானது உங்களுக்குக் கிடைக்கும்” என்று செய்தி வரும். நாம் அனைவரும் குறைந்த விலைக்கு ஒரு பொருள் கிடைக்கும் போது, அதை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது.? என்று எண்ணி அதனுள் சென்று முன்பதிவு செய்வோம். அது மட்டுமல்லாமல் அதனை நம்முடைய நட்பு வட்டாரத்தில் பகிரவும் செய்வோம்.



அவர்களும் அதனைப் பகிர்வார்கள்; முன்பதிவு செய்வார்கள்; அவ்வாறு செய்யப்பட்ட பதிவுகளானது இறுதியில் பல வருடங்களாக சுழன்று வரும், திடீரென பார்க்கும் ஒருவர் பதிவு செய்வார்.ஆனால், அது சலுகையில் கிடைக்காது. காரணம், சலுகை காலம் முடிந்தது என்ற செய்தி வரும்.

இது போன்ற செய்திகளை வெளியீடு செய்யும் போது, இதுவரை மட்டும் தான் இதனுள் முன்பதிவு செய்ய முடியும் என்று குறிப்பிட்டு பதிவுகள் போட்டால் மட்டுமே இதற்கு ஒரு தீர்வாக அமையும். அத்துடன் அந்த செய்தி மற்றவர்களைச் சென்றடையாமல் இருக்கும்.

இதையும் தாண்டி ஓர் கடவுள் படம் போட்டு, இதை நீங்கள் பார்த்தால் நிச்சயம் பலருக்கு அனுப்ப வேண்டும். இல்லையெனில், உங்களுக்கு கெட்ட காரியங்கள் தேடி வரும் என்று பதிவுகள் வரும்.

இது போன்ற செய்தியைப் பார்க்கும் ஒருவர் பயந்து அவர் அந்த செய்தியை அனைவருக்கும் பகிர்ந்து வருவார். இதனால் அவருடைய நேரமும் பணமும்தான் வீண். அவ்வாறு ஒரு செயல் எப்படி நடக்க முடியும்.?

வளர்ந்து வரும் 21-ஆம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டிய நாம், இன்று இதுபோன்ற போலியான வதந்திகளை நம்பி அதற்காக நேரத்தைச் செலவு செய்து கொண்டு வருவதென்பது, நாம் இன்னும் எவ்வளவு அறியாமையில் இருந்து வருகிறோம் என்பதனைக் காட்டுகிறதல்லவா.?

இந்த நாட்டில் அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள் அதிகம். அதுமட்டுமல்லாமல் நம்முடைய மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களைப் படித்த நாம், மூடநம்பிக்கையை வேர் அறுத்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் மண்ணில் வாழும் நாம் இது போன்ற செயலில் ஈடுபடலாமா.? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா.?

இதுபோன்ற வதந்திகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதால் அவர்களுக்கு என்ன நன்மை என்று யோசிக்க வேண்டாமா.? நம்முடைய பணம் வீணடிக்கப்படுவதை எண்ணி கவலை கொள்ள வேண்டாமா.?

இனியாவது இந்த சமூக வலைதளங்களைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவோம். தாமஸ் ஆல்வா.எடிசன் போன்ற அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்புகளைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவோம்.

“போலியான உலகை மாற்றி

அறிவியல் உலகைப் படைப்போம்” •



■ ஏப்ரல் 23 - உலகப் புத்தக தினம் ; வில்லியம் ஷேக்ஸ்பியர் - (ஆங்கில நாடக ஆசிரியர்) பிறந்த தினம்


# கோமாதாவ வித்துடுவீங்களா?

அதிகாலையிலேயே இல்லம் பரபரத்துக் காணப்பட்டது. எப்போதும் சூரியன் கிழக்கே உதித்த பின்னே எழும் சுட்டிப்பையன் 'பகலவன்' இன்று மட்டும், மறக்காமல் கடிகாரத்தில் அலாரம் வைத்து எழுந்திருக்கிறார். எல்லாமே காரணமாகத்தான். இன்று 'பகலவன்' பள்ளியில் மிருகக்காட்சி சாலைக்குச் செல்ல இருக்கிறார்கள். பகலவனின் குட்டி நாய் அங்கும் இங்கும் ஓடி ஆடி தன் ஆனந்தத்தை இல்லம் முழுதும் தூவிக் கொண்டிருந்தது. பகலவன் தன் வேலைகள் பலவற்றைத் தானே செய்யும் அளவுக்கு பழக்கப்பட்டவர். ஆகையால், பல் விளக்கி, குளித்து, பள்ளிச் சீருடை அணிந்து, புத்தகப் பையை எடுத்து, புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் வெளியே எடுத்து வைத்துவிட்டு, சுற்றுலாவிற்கு தேவையான பொருள்களை, சிற்றுண்டிகளை எடுத்து வைக்கிறார். இதையெல்லாம் பொறுமையாகக் கவனித்து வந்த அம்மா, "பகலவா! சுற்றுலா போகப்போறீங்க. அதனால சரியான நேரத்துக்கு எழுந்து கௌம்பிட்டீங்க போல" என்கிறார். பகலவன் அம்மா சொன்னதை கேட்டுச் சிரித்துக் கொண்டே, "ஆமாம் அம்மா" என்கிறார்.

அதிகாலை நேரம் என்பதால், சுற்றிலும் ஒலி இல்லாச் சூழல்.அந்த வைகறைப் பொழுதில் கேட்டுக் கொண்டிருந்த ஒலிகள் என்பவை, குயில் கூவும் ஒலி, தோட்டத்தில் எருமை மாடுகளின் ஒலி, இல்லத்தில் தந்தையின் குறட்டை ஒலி, செல்லப் பிராணி நாயின் முனகல் ஒலிகளே. பள்ளி வாகனம் வருகிறதா என்று நிமிடத்திற்கு 60 முறை வெளியே வந்து பார்க்கிறார் பகலவன். சிறிது நேரம் கழித்து, வெகு தூரத்தில் பள்ளி வாகன ஒலிப்பான் ஒலிக்கும் ஒலி கேட்கிறது. இதைக் கேட்டவுடன், பகலவன் தன் பையை எடுத்துக் கொண்டு வாசல் வருகிறார். பள்ளி வாகனமும் இல்லம் வந்து சேர்கிறது. பகலவன் வாகனத்தில் ஏறி, அம்மாவுக்கு டாட்டா காட்டிவிட்டு வாகனம் உள்ளே செல்கிறார். வாகனம் விடைபெறுகிறது. கிழக்கில் உதித்த சூரியனின் ஒளிக்கீற்று இப்போதுதான் மெல்ல பகலவன் வசிக்கும் தெருவை தொட்டுப் பார்க்கிறது.

பள்ளி வாகனத்தில் பல மாணவர்களும் குதூகலமாக பாட்டுப்பாடி, ஆட்டம் ஆடி மகிழ்கின்றனர். பகலவன் அருகே ஸ்ரீசாய் அமர்ந்து இருக்கிறார். ஸ்ரீசாய் தான் கொண்டு வந்த, கோக், *Fries*, மற்ற தின்பண்டங்களை பகலவனிடம் காட்டுகிறார். பகலவன் தான் கொண்டு வந்த, பழங்கள், பழ ரசம், பால், நொறுக்குத் தீனிகள் போன்றவற்றை ஸ்ரீசாயிடம் காட்டுகிறார். இருவரும் தம்தம் தின்பண்டங்களை பரிமாறிக்கொள்கின்றனர். பகலவனுக்கு கோக் பிடிக்காது என்றாலும், கண்ணியம் கருதி, நண்பன் தந்ததை அருந்தினார்.

பகலவன் கொடுத்த பால் புட்டியை வாங்கி அருந்திய




▪ ஏப்ரல் 24 (1990) – மத்திய அரசு உடனடியாக காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் ஆணையிட்டது.

ஸ்ரீசாய், "இது என்னடா? டேஸ்ட் வேறமாதிரி இருக்கு? இது ஆட்டுப்பாலா? மாட்டுப்பாலா?" என்று வினவுகிறார்.

பகலவன், "இது ஆடு இல்லை. மாடுதான்" என்கிறார்.

ஸ்ரீசாய், "மாட்டுப்பாலா? அப்பறம் ஏன் டேஸ்ட் ஒரு மாதிரி இருக்கு?" என்று கேட்கிறார்.

பகலவன், "இது எங்க வீட்டில வளர்க்கிற எருமை மாட்டு பால்டா?" என்கிறார்.

இதைச் சொன்னதுதான் போதும், ஸ்ரீசாய் முகம் எண்திசையும் திரும்புகிறது; ஒருவித பதற்றம் தெரிகிறது; அருவருப்புடன், கேட்காததை கேட்டதை போல, குடிக்கக் கூடாததை குடித்ததை போல, முகத்தைச் சுளித்துக் கொண்டே, வாயில் கை வைத்துக்கொண்டே வாந்தி எடுக்கிறார் ஸ்ரீசாய்.

ஸ்ரீசாய் ஏற்படுத்திய களேபரத்தில் பள்ளி வாகனத்தை நிறுத்தி, ஸ்ரீசாயையும், வாகனத்தையும் சுத்தம் செய்து, சரி செய்துகொண்டு கிளம்ப, அனைவருக்கும் அரை மணி நேரம் விரயமாயிற்று.

வாகனத்தில் ஏறியதும், ஸ்ரீசாய் பகலவனைப் பார்த்து, "ஏண்டா, உங்க ஆத்துல கருப்பு பிராணியான எருமை மாட்டையா வளர்க்கறீங்க? அந்த எருமை மாட்டுப் பாலையா குடிக்கறீங்க?" அப்டின்னு முகத்தில் ஒவ்வாமையை ஒளித்து வைத்துக் கொண்டே வினவுகிறார்.

பகலவன், "ஆமாம். எங்க வீட்டில கோழி இருக்கு. அது வெள்ளை, சிகப்பு, பழுப்பு நிறத்தில இருக்கு. ஆடும் இருக்கு. ஆடு வந்து வெள்ளை,கருப்பு, பழுப்பு நிறத்தில இருக்கு.

மாடும் இருக்கு. அது கருப்பு, வெள்ளை நிறத்தில இருக்கு. ஏண்டா கேக்கற?"

இதைக் கேட்ட ஸ்ரீசாய், "எப்படிடா? கருப்பு எருமை மாட்டு பாலை குடிக்கிற?" என வினவ,

குதூகல உணர்வில் இதைக் கேட்ட பகலவன், தன் பையில் இருந்த, எருமைப்பால் புட்டியை எடுத்து கையில் வைத்துக்கொண்டு, "பால் புட்டியை இரண்டு கையால் இப்படி பிடிக்கணும். அப்பறம் பால் புட்டியை இப்படி வாயில் வெக்கணும்"

மடக் மடக் மடக் என மூன்று வாய் குடிக்கிறார் பகலவன்,

"இப்படிதான் குடிக்கிறேண்டா" என சிரித்துக்கொண்டே சொல்கிறார்.

அருகில் இருந்த நண்பர்களும் இதைக் கண்டு சிரிக்கின்றனர்.

தொடர்ந்த பகலவன் ,"மாடு கருப்பா? பால் வெள்ளையா? அப்படிங்கறதா முக்கியம்? குடிக்கறது சத்தானதா அப்படிங்கறதுதான முக்கியம்?"

ஸ்ரீ சாய், "அதுக்காக கருப்பு மாடாஆஆஆ.... " என இழுக்க.

பகலவன், "எருமை மாட்டுப் பாலில் பசும் பாலை விட கொழுப்புச் சத்து அதிகம்டா"

ஸ்ரீசாய் இதுதான் சமயம் என்று, சிரித்துக் கொண்டே, பகலவனைக் கேலி செய்ய, "அப்ப உனக்கு கொழுப்பு அதிகம்னு சொல்லு" என்கிறார்.



பகலவனும் சிரித்துக் கொண்டே, மறுமொழியாக, "எனக்காச்சும் எருமை பால் குடிக்கறதால சத்தான கொழுப்பு அதிகம்டா. மாடு கருப்பா இருக்குன்னு அந்த பாலை குடிக்கக் கூடாதுன்னு களேபரம் பண்ற உனக்கு எவ்ளோ 'கொழுப்பு' இருக்கும்?" எனச் சொல்ல வாகனத்தில் உள்ள அனைத்து மாணவர்களும் சிரிக்கின்றனர்.

பகலவன் தொடர்ந்து, "அது மட்டும் இல்ல சாய். எருமை மாட்டுக் கறியில் புரதச் சத்து அதிகம் உள்ளது. இதிலயும் பசு மாட்டை காட்டிலும் எருமை மாடு சிறந்தது. அது மட்டுமா? பசுவின் வளர்ச்சி விகிதத்தைக் காட்டிலும் எருமையின் வளர்ச்சி விகிதம் அதிகம்டா. இதெல்லாமே சயின்ஸ்(*Science*) சாய், சயின்ஸ்(*Science*)" என்கிறார்.

ஸ்ரீசாய், "என்னது? பாலே ஓவர்ங்கிறேன். இதில கறி வேறயா? நாங்கள்லாம் ஆச்சாரமான குடும்பம்டா, எங்க ஆத்துலல்லாம் காயிலேயே கீழ் ஜாதிக் காயான இஞ்சி, பூண்டு, வெங்காயம் இப்டி மண்ணுக்கு கீழே வெளயுற அநாகரிகப் பொருளை சமையல்ல சேக்க மாட்டோம்."

பகலவன், "அப்பறம்"

சாய், "அப்பறம், அநாகரிக உணவான கோழி, மீன், கறி இப்படி எந்த உணவையும் சாப்பிடவே மாட்டோம். அதிலயும் பசு புனிதமானது. தாய் மாதிரி. அத நெனச்சி கூடப் பாக்கக் கூடாது."

பகலவன், "ஏண்டா, நீ சொன்ன கறி எல்லாமே சத்தான உணவுதானே. உலகத்தில மனுசங்க எண்ணிக்கை அதிகமாயிட்டே இருக்கு. விவசாய நிலம் கொறஞ்சிட்டே இருக்கு. விவசாயம் செய்யற மக்கள் எண்ணிக்கையும் கொறைஞ்சிகிட்டே இருக்கு. அப்ப இப்படிப்பட்ட கறிதான மனிதன் உயிர் வாழ ஏதுவா இருக்கும்? வெறும் காத்தை சாப்பிட்டு உயிர் வாழ முடியுமா?" என வினவுகிறார்.

ஸ்ரீசாய், "அதெல்லாம் எனக்கு தெரியாது. ஆச்சாரம், பழக்க வழக்கம், அய்தீகம் அப்டின்னு எங்க வீட்டில இதெல்லாம் சாப்டறது கெடயாது. ஒரே ஒரு பசு மாட்டை மட்டும் வெச்சு இருக்கோம். பாலுக்காக. அந்த பசுதான் எங்களுக்கு கோமாதா. எல்லாமே!"


பகலவன், "அது சரிடா, 'கோ'மாதாவோ, 'கோக்'மாதாவோ, ஏதோ ஒன்று, உங்க பசு மாடு பால் கறக்கறத நிப்பாட்டிட்டா, பசு மாட்ட என்னடா பன்னுவீங்க?"

ஸ்ரீசாய், "அப்பறம் அந்த பசு மாடு ஈஸ் ஜஸ்ட் வேஸ்ட்தான், யாராவது கறிக்கு வேணும்னு வந்து நல்ல வெலைக்கு கேஷ் கொடுத்து வாங்கிட்டு போயிடுவாங்க. நாங்களும் பசு மாட்ட வித்துடுவோம்."

எள்ளலுடன் பகலவன், "என்னது கோமாதாவ வித்துடுவீங்களா?" என்ற உடன், வாகனத்தில் இருந்த அத்தனை மாணவர்களும் கொல்லென இடைவிடாமல் அலை அலையாய் சிரித்துக் கொண்டு இருக்கின்றனர். ஸ்ரீ சாயும் சிரிப்புக் கடலில் மூழ்குகிறார். ●

கவிஞர். நா.காமராசன் மண்டகொளத்தூர்





# சிட்டுக்குருவியும் சின்ன மழலையும்

அம்மா கூலிவேலைக்கும்
அப்பா மரம்வெட்டவும்
போனபிறகு தாழ்வாரத்திண்ணையின்
கூரையில் வந்து அமரும்
சிட்டுக்குருவிதான் என்
சின்னஞ்சிறு தோழன்!

அவ்வப்போது பக்கத்திலிருக்கும்
நுணா மரத்துக்கும்
வீட்டு கூரைக்கும் இடையே
தன் சின்னஞ்சிறு இறகுகளால்
ஊஞ்சலாடும் என்னைப்போலவே!

உச்சிவெயிலில் கரைத்து வைத்த
கூழில் இருக்கும் ஒன்றிரண்டு
சோற்றுப்பருக்கைகளே இரையாகும்
என்னோடும் ஊஞ்சலாடும்
சின்னஞ்சிறு சிட்டுக்குருவிக்கு!

வேலிக்காத்தான் மரத்தின்
சில்லுவண்டு சத்தங்கள்
எங்கள் உரையாடலை
வழிமறிக்கும்; சிலநேரம்
கீச்கீச் குரலால் எசப்பாட்டு
பாடும்!

சிலநேரம் பூட்டப்பட்ட கதவின்
இடுக்கின் வழியே
பறந்துசென்று பரண்மேல்
அமர்ந்து கண்ணாமுச்சி
விளையாடும்! கண்கள்
சுழலும்வேளையில்
கொடிக்கயிற்றில் வந்தமரும்!

எதிர்வீட்டு பஞ்சுமரத்தில்
படர்ந்திருந்த அவரைக்கொடியின்
காய்ந்த சருகுகளைக் கொஞ்ச
கொஞ்சமாய் கவ்வி வந்து
தெற்குசுவரின் மூலையில்
கூடுகட்டத் தொடங்கியது அந்த
சிட்டுக்குருவி!

இப்போதெல்லாம் விடுமுறை
நாட்களில் மட்டுமல்ல
பள்ளி முடிந்த மாலைவேளையிலும்
எனக்கும் அதற்குமான நேசங்கள்
நாளுக்குநாள் கூடிக்கொண்டே
வந்தது!

வாசலில் வீட்டுப்பாடங்கள்
எழுதும் சிலநேரங்களில்
காதோரம் வந்து முத்தமிட்டு
செல்வதுமுண்டு தன்
இனிய இசையால்!

அந்திப்பொழுதுகளும்
விடுமுறைநாட்களும் மட்டுமல்ல
யாருமில்லா தருணங்களிலும்
சிட்டுக்குருவியே என்
நேசத்திற்குரிய நண்பனாகிப்போனது!

இதோ எங்கள் மண்குடிசை
சிமெண்ட் ஓடுகளால் வேயப்பட்ட
கல்வீடாய் மாறியது; கூரைகள்
பிரித்த அன்றொருநாளில்
பறந்தபோன என் நேசத்திற்குரிய
சிட்டுக்குருவி இன்னமும்
வீடு திரும்பவில்லை!

இப்போது புதிதாய் ஒரு சிட்டுக்குருவி
சோடியோடு வந்துசேர்ந்தது எங்கள்
வண்ணம் தீட்டிய சுவற்றில்;
என்னருமை மகள் கரித்துண்டால்
வரைந்த கிறுக்கல்களில்!
இனி எப்போதும் பறக்காது
இந்தச் சிட்டுக்குருவி!

இதோ நானும் அவளும்
இல்லாத நேரங்களில்
அந்தச் சிட்டுக்குருவியோடு
பேசிக்கொண்டிருக்கிறாள்;
பள்ளி முடிந்து வீடுதிரும்பிய மகள்! •

எண்ணம்! சிந்தனை! செயல்!



வரும் நாடாளுமன்ற தேர்தலில்
போட்டியிடும் அனைத்து அரசியல்
கட்சிகளும், தங்கள் கட்சியை சார்ந்த
இளைய சமுதாயத்திற்கு
வாய்ப்பு கொடுங்கள்

'நாடாளுமன்றம் ஒளிரட்டும்!'

"இந்தியாவின் வளர்ச்சி
உலக அளவில் ஓங்கட்டும்!"





ப.யுவராஜன்
கழக ஒருங்கிணைப்பாளர்

செ.சார்லஸ் அந்தோனி
பொதுச் செயலாளர்

மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்

தலைமை அலுவலகம்:
16, ராமுகாலனி முதல் வீதி, தனலட்சுமி திரையரங்கம் பின்புறம், கொங்கு மெயின் ரோடு, திருப்பூர்-641607.
Contact: 90426 25725, 95851 16796, 80129 36465 Mail ID: mjmktamilnadu2017@gmail.com Website:www.mjmktamilnadu.com
Fb : mjmktamilnadu Fb likepage: மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம்



மக்கள் ஜனநாயக முன்னேற்ற கழகம் MAKKAL JANANAYAKA MUNNETRA KAZHAGAM
Jora Life Care — Jora Life Care LLP mumbai
Jayasri printpack Sivakasi
விண் எலக்ட்ரானிக்ஸ் & பர்னிச்சர்ஸ்
JAIRIGI PUBLICATIONS BANGALORE
Aadhi Photography Contact: 9842254774
PERIYAR BOOKS.IN
அன்பு ஆப்செட் காவேரிப்பட்டணம் Off : 04343-250645 Cell : 98429 32429
மதி பப்ளிகேசன் தருமபுரி


கைத்தடி மாத இதழ்
மூன்றாம் ஆண்டுத் தொடக்க விழா
கைத்தடி விருதுகள் & மதி பப்ளிகேசன் புத்தக வெளியீட்டு விழா
சிறக்க உதவிய நிறுவனங்கள், தோழர்கள் மற்றும்
அனைவருக்கும் நன்றிகள்!

ரம்யம் ஆஸ்திரேலிய கல்வி, குடியேற்ற சேவை (து) வரை

**RAMYAM Australian Education and Visa Services (P) Ltd**

Head Office: 2, Liffey Street, Canning Vale, Perth, Western Australia

**V31, 13 Street, V Block, Anna Nagar, Chennai 600 040**

**Registered Migration Agent, Australia**



READY STUDY GO!

**RAMYAM IELTS Coaching Centre**

In partnership with

idp | IELTS™

Official IELTS Referral Agent

**IELTS Coaching by Australian Company in Anna Nagar!**

Study and Migrate to Australia

**Fast Track Result Oriented Coaching by Experts**



**Flexible Timings, Practice Tests Multi-media classes**

**For enrolment and free consultation**

**Call: 044 48516767, 978662812 / 83**

▪ www.raevs.com.au ▪ www.ramyamieltscoach.com.au /

▪ www.australianeducationmigration.com.au ▪ www.ramyamieltscoach.com.au ▪ info@raevs.com.au

**DR. ANNA. MAHIZHNAN**

BSc MSc PhD MCMS MAusIMM Grad. Cert. in Mig. Law (Australia)

Director, RAMYAM Australian Education and Visa Services (P) Ltd

Dr Mahizhnan, the Founder and Director migrated to Australia over two decades ago and is an Australian citizen. He is a Registered Migration Agent and Qualified Education Counsellor. He lives in Perth, Western Australia. He has worked in Gold, Nickel and Iron ore mines in Australia. A Geoscientist, Dr. Mahizhnan holds a Doctoral degree and has worked for major global mining corporations including Rio Tinto, BHP and Fortescue Metals Group. He has started this company to assist those who want to pursue higher studies in Australia and migrate to Australia.





FROM
ARIVAZHAGAN CM
Editor & Publisher
kaithadi Monthly
2/343, Kamalapuram Village
Mallikuttai Post,
Karimangalam
Dharmapuri - 635 205
Contact : 7373333078
kaithadimonthly@gmail.com


அச்சிடப்பட்ட செய்திநூல் அஞ்சல் – தனிச்சுற்று

PRINTED MAGAZINE BOOK POST - PRIVATE CIRCULATION

Owned, published by C. Arivazhagan printed at JAYASRI PRINTPACK, No: 223, P.K.N. Road, Murugan Colony (bye pass), Sivakasi - 626 189. Published from Madhi Publication, Dharmapuri - 635 205. Editor. C. Arivazhagan, email: kaithadimonthly@gmail.com.